மாத இதழ் - November 2011
பருவம் 02 உதயம் 13
30/

# வண்ண வானவில்

வன்ன வானவில் *Vanna Vaanavil*



**இலங்கையில் முதல் மருத்துவமனை அமைத்த ஜோன் ஸ்கடர்**

**சிங்களத் தாயாரை தேடி வந்த தமிழக சந்திரவதி**

**விலங்குகளின் விந்தை உலகம் — புதிய பகுதி**

Happy Birthday




**Vanna Vaanavil**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VIP Album Sanga




சிறு வயதில்






















குடும்பத்துடன்





பாசமுள்ள தந்தை










| | |
|---|---|
| பெயர் | - குமார் சங்கக்கார |
| பிறந்த இடம் | - மாத்தளை. |
| அறிமுக டெஸ்ட் போட்டி | - 20 ஜுலை 2000 தென் ஆபிரிக்காவுக்கு எதிராக, |
| ஒரு நாள் அறிமுகம் | - 05 ஜுலை 2000 பாகிஸ்தானுக்கு எதிராக, |
| இதுவரை விளையாடிய டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் | - 101, |
| மொத்த டெஸ்ட் ஓட்டங்கள் | - 8864 |
| அதிக கூடிய டெஸ்ட் ஓட்டங்கள் | - 286 |
| ஒரு நாள் போட்டிகள் | - 301, |
| மொத்த ஒரு நாள் ஓட்டங்கள் | - 9540, |
| அதிக ஒரு நாள் ஓட்டங்கள் | - ஆ.இழக்காமல் 138, |
| படித்த பாடசாலை | - கண்டி, திரித்துவ கல்லூரி, தற்போது சட்டக் கல்லூரியில் பட்டப் படிப்பு |
| உடன்பிறப்புகள் | - சகோதரர்கள் 1, சகோதரிகள் - 2 குடும்பத்தில் இளையவர், |
| மனைவி பெயர் | - யெஹெலி, |
| பிள்ளைகள் | - இருவர் (இரட்டையர்) |
| பிறந்தது | - 30 ஜுன் 2009, |

















யாழ்ப்பாண நிகழ்வுகளில்

















நவரச நாயகன்

பட உதவி: S.M.றிஸ்வான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களத் தாயாரைத் தேடி வந்த தமிழகத்து சந்திரவதி

மணி ஸ்ரீகாந்தன்

மனதை உருக்கிய ஒரு உண்மைச் சம்பவம்



தமிழ் சிங்களம் என்ற இந்த இரண்டு இனங்களின் முன்னோடிகளும் இந்தியாவிலிருந்து வந்து இலங்கையில் குடியேறினார்கள் என்பதே வரலாற்று ஆய்வாளர்களின் முடிவு.

முகத்தோற்றம், கலாசாரம், மதம், பல பழக்கவழக்கங்கள், சொற்களில் காணப்படும் ஒற்றுமை என இந்தியர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இந்து-பௌத்த மதங்களுக்கும் இடையே நிறைய ஒற்றுமை உள்ளது.

மொழியில் தான் தமிழர்களும் சிங்களவர்களும் வேறுபடுகின்றனர். ஒற்றுமையாக வாழ்ந்திருக்க வேண்டிய இனங்களை அரசியலும், பரஸ்பர சந்தேகமும் பிரித்து விட்டன. முப்பதாண்டு கால யுத்தம் முடிவுக்கு வந்த பிறகு நம் நாட்டில் இயல்பு வாழ்க்கை திரும்பியதோடு இனங்களுக் கிடையே புரிந்துணர்வும் ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் தமிழக ஊடகங்கள் தான் இன்னும் இங்கு பிரச்சினை இருப்பது போன்று ஒரு தோற்றத்தை காட்டிவருவதோடு இலங்கைக்கு செல்லும் கலைஞர்களையும் படப்பிடிப்புக் குழுவினரையும் தடுத்தும் வருகிறது. இலங்கை பற்றிய சாதகமற்ற ஒரு தோற்றத்தை இது தமிழகத்தில் தோற்றுவித்துள்ளது. அதனையும் மீறி இந்தியர்கள் இங்கு வந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

அப்படி அண்மையில் தமிழகத்திலிருந்து வந்தவர்களில் ஒருவர் தான் உனகலதேவயாலகே சந்திராவதி. இவர் கம்பஹா ஹேனகமை நீலமஹரையை பிறப்பிடமாக கொண்டவர். எலிஸ்நோனாவின் ஒரே மகள். நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு தமிழரான செல்லதுரையை திருமணம் முடித்து தமிழகத்திற்கு சென்றவர். தனது பாசத்திற்குரிய தாயை கடந்த நாற்பதாண்டுகளாக பிரிந்திருந்தவர், அண்மையில் இலங்கைக்கு வந்து தனது 98 வயது நிரம்பிய தாயை சந்தித்திருக்கிறார் இந்த நெகிழ்ச்சியான சம்பவம் கடந்த மாதம் இங்கிரிய, றைகமையில் நடைபெற்றது.

தனது தாய் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்பதையே அறியாத அறுபது வயதான சந்திராவதி தன் கணவர் செல்லதுரையுடன் இங்கிரிய, றைகமைக்கு வந்து செல்லதுரையின் உறவினர்கள் வீட்டில் தங்கி, தனது தாயை தேடுவதில் ஈடுபட்டார். கம்பஹா, ஹேனகமையில் வசிக்கும் தெரிந்தவர்களிடம் சொல்லி விசாரித்ததில் சிலர் எலிஸ் நோனா, இறந்து விட்டதாகவும், இல்லை அவர் உயிரோடுதான் இருக்கிறார் என்றும்பலதரப்பட்ட செய்திகள் கிடைத்தன. பிறகு நீண்டதொரு தேடலுக்கு பிறகு எலிஸ் நோனா உயிரோடு இருப்பதும் அவர் நூறு வயதை நெருங்கி கொண்டிருப்பதையும் தெரிந்து கொண்டார் சந்திரவதி.

கம்பஹா ஹேனகமை பெரும்பான்மை இன மக்கள் அதிகமாக வாழும் பிரதேசம். தமிழர்களை அங்கு காண்பதே அரிது. அந்த இடத்திற்கு சந்திரவதியை எப்படி அழைத்துச்செல்வது? நாற்பதாண்டுகால இடைவெளியில் சந்திரா சிங்கள மொழியை மறந்துவிட்டார். பேசுவது புரிந்தாலும் அவரால் பதில் சொல்ல முடியாது. நமக்கும், அவர்களிடம் சென்று சந்திராவை அறிமுகம் செய்வதில் ஒரு தயக்கம் இருந்தது.

எப்படியோ பெரு முயற்சியின் பலனாக எலிஸ்நோனா வசித்து வந்த வீட்டாரிடம் தொலை பேசியில் தொடர்பு கொண்டு நிலைமையை சொல்லி எலிஸ்நோனாவை அழைத்து வர ஏற்பாடு செய்யப்பட்டது.

எலிஸ்நோனா இங்கிரிய றைகமைக்கு வரப்போகும் செய்தி காட்டுத் தீ போல அந்தப்பிரதேசத்தில் பற்றிக்கொண்டது. எலிஸ்நோனா கம்பஹாவை பிறப்பிடமாக கொண்டிருந்தாலும் றைகமையில்தான் பல வருடங்கள் வாழ்ந்திருந்தார்.

எலிஸ்நோனாவின் உயரம் 5.5. நரைத்தலையுடன் சிங்கள கலாசார உடையான சீத்தை ரவிக்கை சகிதமாக கையில் 'கெத்த' என அழைக்கப்படும் கோப்பிக்கத்தி சகிதமாக உலா வருவார். பலருக்கு இவரைக்கண்டாலே பயமாம். சிறுவர்கள் பயந்து நடுங்குவார்களாம்.

ஆச்சி பலாக்காயை கொண்டு வந்து அதை வெட்டும் அந்த லாவகம் யாருக்கும் வராது என்பார்கள். அவர் பலாக்காய் வெட்டி சுத்தப்படுத்துவதை வேடிக்கையாக அந்தக்காலத்தில் பார்த்திருக்கிறார்கள். அப்பம் சுடுவதிலும் எலிஸ் கெட்டிக்காரிதான். அடுப்பில் தாச்சியை வைத்து அதற்கு மேழும் ஒரு நெருப்புச்சட்டி வைத்து அவர் அப்பம் சுடுவது ஒரு தனி ஸ்டைல். எலிஸ் நோனாவிற்கு அந்தக்காலத்தில் சண்டியர்களோடுதான் சினேகமாம். பொலிஸாருக்கே டிமிக்கி கொடுத்துவிட்டு வரும்சண்டியர்களுக்கு எலிஸ்தான் தனது



பிரிவின் சோகத்தில் தாயும் மகளும்



தாய், மகள், மருமகன்

வீட்டில் அடைக்கலம் கொடுத்து வந்தார் என்கிறார்கள். இப்படியான ஒரு 'கெரக்டர்' நாற்பதாண்டுகளுக்கு பிறகு அந்த ஊருக்கு வருகிறார் என்பது பரபரப்பான விஷயமாகத்தானே இருக்க வேண்டும்!. சந்திராவிற்கும் சந்தோசம் தாங்க முடியவில்லை. தன் தாயை காணும் சந்தோசத்தில் சந்திரா தூக்கத்தை தொலைத்திருந்தார். காலைப்பொழுதானதும் கம்பஹாவிலிருந்து புறப்பட்டு வந்த அந்த வேன் றைகமையில் வந்து நின்றது. எலிஸ் நோனாவின் உறவினர்கள் அவரை அழைத்து வந்திருந்தார்கள். ராஜகம்பீரத்தோடு மன்னைக்கத்தியுடன் உலா வந்த அந்த எலிஸ் நோனாவை காணவில்லை. நாலடி உயரத்தில் எழும்பில் சதை ஒட்டிக்கொண்டிருக்க கையில் தடியுடன் கூன் வளைந்த முதுகுடன் எலிஸ் நோனா வேனை விட்டு கீழே இறங்கினார். தாயை கண்ட மகள் சந்திரா எலிஸ் நோனாவின் காலை பிடித்துக்கொண்டு கதறினார். அவர் போட்ட சத்தம் அந்த ஊரையே கூட்டியது. எலிஸ் நோனாவை பார்க்கும் ஆவலில் பலர் முண்டியடித்துக் கொண்டிருந்தார்கள்.

(22ஆம் பக்கம் பார்க்க)

வண்ண வானவில்
Vanna Vaanavil
சிந்தையெங்கும் வர்ணஜாலம்
எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு
- பாரதிதாசன்

முகவரி:
ஆசிரியர்,
வண்ண வானவில்
த.பெ. இல. 1218
கொழும்பு

Address:
Editor,
Vanna Vaanavil,
P.O. Box No: 1218
Colombo

தொலைபேசி: 0112429275
E-mail: vannavaanavil@gmail.com

விற்பனை தொடர்பாக தொடர்பு கொள்ள: 0112333924, 0112429378, 0112429381

அட்டையை அலங்கரிப்பவர்
ரிச்சா

டிசெம்பர் மாத வானவில் 10ம் திகதி முதல் கடைகளில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிரிட்டிஷ் மகாராணியாருடன்...


அவுஸ்திரேலிய பிரதமருடன்...


அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சருடன்...

## 22வது பொதுநலவாய உச்சி மாநாடும் இலங்கையும்

# இலங்கைக்கு கிடைத்த இராஜதந்திர வெற்றிகள்

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று முடிவடைந்த 22வது பொதுநலவாய உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட எமது ஜனாதிபதி மூன்று வகையான இராஜதந்திர உத்திகளை வெற்றிகரமாக பயன்படுத்தி நம் நாட்டுக்கு பெயர் பெற்றுத்தந்தார்.

1. கூட்டத்தொடரில் கலந்துகொண்டு உரையாற்றுவது.
2. அவுஸ்திரேலியாவில் பல்வேறு சங்கங்கள் அமைப்புகளின் முன்னிலையில் உரையாற்றுவது.
3. உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட அரச தலைவர்களுடன் இருபக்க கலந்துரையாடல்களில் ஈடுபடுவது.



இந்த அணுகுமுறைகள் ஊடாக தற்போது இலங்கையில் நிலவும் நிலைமைகளையும் அடுத்ததாக இலங்கையில் நடைபெறவிருக்கும் உச்சி மாநாட்டை நடத்துவதற்கு இலங்கை பெற்றிருக்கும் தகுதியையும் மற்றும் மனித உரிமைகள், ஜனநாயகம் தொடர்பான இலங்கையின் அர்ப்பணிப்பையும் உறுப்பு நாடுகளுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் எடுத்துரைக்க அவர் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். மேலும் 2018 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டு போட்டியை நடத்துவதற்கு இலங்கை கொண்டிருக்கும் தகைமைகளை உறுப்பு நாடுகள் மத்தியில் விளக்கவும் அவர் சந்தர்ப்பங்களை பயன்படுத்திக்கெண்டார்.

இந்த உச்சி மாநாட்டு நிகழ்வுகள வெளியுலகத்துக்கு தெரியப்படுத்திக்கொண்டிருந்த ஊடகங்களின் ஒட்டுமொத்த கவனத்தையும் மூன்று தலைவர்கள் தம்வசப்படுத்தியிருந்தனர். அவுஸ்திரேலியாவில் ஊடகங்கள் இவற்றை பற்றித்தான் அதிகம் பேசின.


பங்களாதேஷ் பிரதமரை சந்தித்த போது...

முதலாவது தலைவர் பிரித்தானிய மகாராணி எலிசபெத். இவர் மற்றுமொரு முறை அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்வது சாத்தியப்படுமா? அவர் வகிக்கும் அரச பதவி வேறு யாரிடமாவது கையளிக்கப்பட்டு விடுமா? என்றெல்லாம் பல கேள்விகளை எழுப்பி ஊடகங்கள் நிறைய எழுதின, பேசின.

இரண்டாவது, அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கிளார்ட் - வெளிவிவகார அமைச்சர் கெவின் ரட் விவகாரமாகும். ஜூலியா, கெவினிடமிருந்து ஆட்சிப்பொறுப்பை கைப்பற்றிக்கொண்டதாக அவு.ஊடகங்கள் தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகின்றன.

இவர்களை அடுத்து அவுஸ்திரேலிய ஊடகங்கள் முக்கியத்துவம் தந்த தலைவர் எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவாகும். முப்பது வருட கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தவர், நாட்டை பொருளாதார அபிவிருத்தி நோக்கி இட்டுச்செல்பவர். யுத்தம் முடிவுக்கு வந்தபோது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக எழுப்பப்பட்டிருக்கும் பிரச்சினைகள், சிக்கல்கள் என அவை குறிப்பிட்டிருந்தன.

எனவே ஜனாதிபதியை பொறுத்தவரை இந்தப்பயணம் ஒரு இராஜதந்திர யுத்தமாக அமைந்திருந்தது எனலாம். அவருடன் அவுஸ்திரேலியா சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசும் இன்னொரு முனையில் இராஜதந்திர யுத்தத்தை நடத்த வேண்டியதாக இருந்தது. இறுதியில் இலங்கைக்கு சார்பாக மூன்று இராஜதந்திர வெற்றிகள் பெறப்பட்டன.

முதலாவது மெல்பேர்ன் நகரில் வகிக்கும் விடுதலைப்புலிகளின் அனுதாபியான ஒருவர் ஜனாதிபதியின் மனித உரிமைகள் தொடர்பான ஒரு வழக்கை அவுஸ்திரேலிய நீதிமன்றத்தில் தொடுத்திருந்ததாகும். ஆனால் அந்த வழக்கு அவுஸ்திரேலிய சட்டமா அதிபரால் தள்ளுபடி செய்யப்பட்டது. சர்வதேச ரீதியாக ஜனாதிபதிக்கு உள்ள இராஜதந்திர வல்லமையை இது உறுதிப்படுத்துவதாக அமைந்தது. மேலும் பொதுநலவாய வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் இலங்கை மனித உரிமைகள் தொடர்பாக கலந்துரையாட கனடிய வெளிவிவகார அமைச்சர் மேற்கொண்ட முயற்சியை தோல்வியடைய செய்வதில் எமது வெளிநாட்டமைச்சர் வெற்றி பெற்றார்.

(31ஆம் பக்கம் பார்க்க)


அவுஸ்திரேலியா வாழ் இலங்கையரை சந்தித்தபோது...

# பொதுநலவாய அமைப்பினால் கிட்டும் நன்மைகள் யாவை?

சூரியன் அஸ்தமிக்காத மாபெரும் சாம்ராஜ்யத்தை கட்டியாண்ட மகா பிரித்தானியா, இரண்டாம் உலகப்போரின் பின்னர் தான் ஆண்ட காலனி நாடுகளுக்கு சுதந்திரம் அளிக்க ஆரம்பித்தது. இப்படிச்சுதந்திரம் பெற்ற நாடுகளை ஒன்றிணைக்கும் ஒரு அமைப்பை தோற்றுவித்தால் என்ன என இங்கிலாந்தும் சுதந்திரம் பெற்ற நாடுகளும் கருதியதன் விளைவாகவே 1949 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் அமைப்பு தோற்றம் பெற்றது. இந்த அமைப்பில் 54 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இவற்றில் 19 ஆபிரிக்க நாடுகள். 08 ஆசிய நாடுகள், 03 அமெரிக்க நாடுகள். பத்து தீவக நாடுகள். 03 ஐரோப்பிய நாடுகள். 11 தென் பசுபிக் நாடுகள்.

இந்த பொதுநலவாய அமைப்பின் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் உச்சி மாநாடு கடந்த மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகி 30ம் திகதி வரை மேற்கு அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் கோலாகலமாக நடைபெற்றது.

இந்த உச்சி மாநாட்டில் தலைவர்கள், மனித உரிமை, நல்லாட்சி, காலநிலை மாற்றம், வருமான பரம்பலில் காணப்படும் ஏற்றத்தாழ்வு, உணவு பொருட்களின் பாதுகாப்பு, நீடித்து நிலைக்கும் பொருளாதார வளர்ச்சி, இயற்கை வள அபிவிருத்தி ஆகிய உலகளாவிய பிரச்சினைகளை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டார்கள்.

இந்த அமைப்பு இத்தனை ஆண்டுகளாக நீடித்து நிலைத்துள்ளது என்றால் இதன் மூலம் உறுப்பு நாடுகளுக்கு பல பலன்கள் கிடைத்து வருகின்றன என்றே இதை பொருள் கொள்ள வேண்டும். அவை யாவை என்பதை சுருக்கமாகப் பார்ப்போம்.

1. கனடா, அவுஸ்திரேலியா மற்றும் நியுசிலாந்து ஆகிய நாடுகளில் வசிப்போர் பிரித்தானியாவில் இருந்து சென்று குடியேறியவர்கள் என்பதால் இந்நாடுகள் மத்தியில் ஒரு தொப்புள் கொடி உறவு பேணப்பட்டு வருவது ஒரு முக்கிய காரணம்.

அங்கத்துவ நாடுகளில் காணப்படும் ஆட்சி முறையில் உள்ள ஒற்றுமை (மக்களாட்சி) மேலும் பொருளாதார காரணங்களும் இந்த அமைப்பு தோன்றவும் நீடித்து நிலைக்கவும் வகை செய்திருக்கிறது. குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க நாடுகள் பொருளாதார குறிக்கோள்களை முதன்மையாகக்கொண்டு இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்றன. மேலும் இந்த அமைப்பின் அங்கத்துவ நாடுகள் தமக்கிடையிலான நல்லெண்ணம் மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றை அடிப்படையாக கொண்ட பல நன்மைகளை அடையலாம் என்பதாலும் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

அங்கத்துவ நாடுகள் மத்தியில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை கருத்துப்பரிமாறல் மூலமாக தீர்த்துக்கொள்ள இந்த அமைப்பு வாய்ப்பு அளிக்கிறது. உலகப்பிரச்சினைகள் மீது அங்கத்துவ நாடுகள் இந்த அமைப்பு ஊடாக தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தவும் பிரச்சினைகள் மீது கருத்துப்பரிமாறலூடாக தீர்வுகளை முன்வைக்கவும் ஒரு தளமாக இது அமைகிறது.

அங்கத்துவ நாடுகளுக்கு மத்தியில் தகவல் பரிவர்த்தனையை ஏற்படுத்திக்கொள்வது மற்றும் ஏனைய உடன்படிக்கைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துவது என்பன ஏனைய அநுகூலங்களாகும். வெளி நாட்டு பிரதிநிதிகளை நாம் தூதுவர்கள் என்று அழைக்கிறோம். ஆனால் பொதுநலவாய அமைப்பு அங்கத்துவ நாட்டு தூதுவர்கள் மட்டும் உயர் ஸ்தானிகர், உயர் ஸ்தானிகராலயம் என்று அழைக்கிறோம். வெளி நாடுகளுடனான தொடர்பையும் ராஜரீக உறவுகளையும் இதன் வாயிலாக ஏற்படுத்திக்கொள்ள முடிகிறது. எமது நாட்டின் பிரதிநிதி ஒருவர் மற்றொரு நாட்டில் நியமிக்கப்படாதபோது அந்த நாட்டுடனான ராஜரீக உறவுகளை பிரித்தானிய ஸ்தானிகராலயத்தின் மூலம் பேணிக்கொள்ள முடியும். மேலும் பிரித்தானியாவில் உள்ள பொதுநலவாய இணைப்பு பணிமனை ஊடாக நாடுகளுக்கு இடையே கருத்துப்பரிமாறலை ஏற்படுத்திக்கொள்ளவும் முடியும்.

இச்செயற்பாடுகளின் மூலம் பொதுநலவாய அமைப்பில் அங்கத்துவம் பெற்றிருக்கும் ஒவ்வொரு நாட்டின் அறிவையும் அனுபவத்தையும் பெற்று கொள்ள ஏனைய அங்கத்துவ நாடுகளுக்கு வாய்ப்பு கிட்டுகிறது. அத்துடன் இடையிடையே உறுப்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் உச்சி மாநாடுகளும் பொருளாதார உச்சி மாநாடுகளும் நடத்தப்படுகின்றன. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் பிரச்சினைகளின் பயனுள்ள ஒத்துழைப்பை பெருளாதார உதவிகளையும் பெற்றுக்கொள்ள முடிகிறது.

கதிரவன்

1950 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய அமைப்பின் வெளிநாட்டு அமைச்சர்கள் உச்சி மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைய கொழும்புத்திட்டம் உருவாக்கப்பட்டது. ஆசிய பிராந்திய உறுப்பு நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதிலும் இத்திட்டம் பெரும்பங்கு வகித்தது. இதன் ஊடாக இலங்கை மூலதன மற்றும் தொழிநுட்ப உதவிகளைப்பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

பொதுநலவாய அமைப்பின் குழுக்கள் மூலமும் அங்கத்துவ நாடுகளுக்கு இடையே கருத்துப்பறிமாற்றங்கள் வாயிலாக பிரச்சினைகளைத் தீர்க்கும் வாய்ப்பு உள்ளது. பொதுநலவாய பாராளுமன்ற சங்கம், விவசாய அமைப்பு என்பன அங்கத்துவ நாடுகளை ஒருமுகப்படுத்தி விஞ்ஞான அமைப்பு, பொருளாதார உதவி, ஒத்துழைப்பு வழங்குவதிலும் முன் நின்று செயற்படுகின்றன.

அரசாங்கம் தொடர்பான அமையங்களுக்கு அப்பால் ஏனைய சில அமையங்களும் பொதுநலவாய அமைப்பில் செயற்பட்டு வருகின்றன. வர்த்தகக்குழுக்கள், கலாசார பிரசார குழுக்கள், தொழிற்சங்கங்கள் போன்றவையும் அங்கத்துவ நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பையும் நெருங்கிய தொடர்புகளையும் பேணி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பார்த்த ஆகாயப் பூக்கள்






தம்பி ஐயா தேவதாஸ்

*ஈழத்து திரைப்பட வரலாற்றை தொகுத்தளித்ததன் மூலம் மிகப்பெரும் பணியை செய்து முடித்திருக்கும் தம்பி ஐயா தேவதாஸ் தன் இலங்கை திரைப்பட அனுபவங்களை இங்கே சுவையாகப் பதிவு செய்கிறார்.*

இந்த வருடம் ஏப்ரல் மாதம் மருதானையில் உள்ள தியேட்டருக்கு படம் பார்க்க சென்றேன். மூன்று தியேட்டர்கள் ஒன்றாக அமைந்து இருக்கும் தியேட்டர்களில் ஒன்று அது. தியேட்டர்களின் முன்புறம் பெரிய கூட்டம். மூன்று தியேட்டர்களிலும் மூன்று படங்கள் ஓடுகின்றன. ஒரு இடத்தில் மட்டும் டிக்கட் கொடுத்தார்கள். படத்தின் பெயரைச்சொல்லியே டிக்கட் வாங்கிக்கொண்டு உள்ளே போனார்கள். வரிசையில் சென்ற போது எனது முறை வந்தது.

''என்ன படம் பார்க்க போகிறீர்கள்?'' தியேட்டர்காரர் என்னிடம் கேட்டார்

''ஆகாயப்பூக்கள்'' என்றேன் நான்.

''ஆகாயப்பூக்கள் படம் என்றால் சிறிது பொறுத்திருக்க வேண்டும்'' என்றார் தியட்டர் காரர்.

''ஏன்?'' என்று கேட்டேன் நான்.

''ஆகாயப்பூக்கள் இலங்கைப்படம். அதனால் நான்கு பேர் மட்டுமே வந்திருக்கிறார்கள். இன்னும் இரண்டு பேர் வந்தால் டிக்கட் தருவோம்'' என்று விளக்கம் கூறினார் தியேட்டர் காரர்.

'சிங்கம் புலி', 'மாப்பிள்ளை' போன்ற படங்களை பார்ப்பதற்காக கூட்டம் கூட்டமாக செல்லும் ரசிகர்களை பார்த்தவாறே நான் ஒரு பக்கத்தில் நின்றேன். சிறிது நேரத்தின் பின்னர் இன்னும் இரண்டு ரசிகர்கள் வந்து சேர்ந்தார்கள். எல்லோருமாக 'ஆறு பேருக்கும் டிக்கட்' தந்தார்கள். இலங்கைப்படமான 'ஆகாயப்பூக்கள்' படம்பார்க்கச்சென்ற எனக்கு கிடைத்த அனுபவம் இது.

இது வரை இலங்கை தமிழ்த்திரைப்படங்கள் 35 க்கு மேல் வந்து விட்டன. அவற்றிலே சுமார் 10 படங்கள் சிங்கள மொழியிலிருந்து தமிழுக்கு டப் செய்யப்பட்ட படங்கள். முழு நீள இலங்கைத்தமிழ் படங்கள் ஏனோ தானோ என்று ஓடும்பொழுது இந்த டப் படங்கள் எம்மாத்திரம்! ஆனாலும் டப் படங்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. ஆகாயப்பூக்கள் என்னும் இத்திரைப்படம் சிங்கள மொழியிலிருந்து தமிழ்மொழிக்கு மொழிமாற்றம் செய்யப்பட்ட படம்.

படம் எப்படியோ, ஆனால் இத்திரைப்பட இயக்குநர் புகழ்பெற்றவர். ஆம் பிரசன்ன விதானகே என்ற இளைஞர் தான். இதன் இயக்குநர். பல புகழ்பெற்ற சிங்கள படங்களை இயக்கியவர்.

புரஹந்த களுவர என்பது பிரச்சினைக்குரிய சிங்களப்படம். 'பூரணையில் ஒரு மரணம்' என்பது அதன் பொருள். அந்த திரைப்படத்தை தயாரித்து நெறியாண்டவர் தான் பிரசன்ன விதானகே. இலங்கையில் தமிழ் சினிமா வளரவேண்டும் என்று விரும்புபவர். இலங்கை தமிழர்களுக்காக இலங்கையில் தமிழ்ச்சினிமாவை உருவாக்க வேண்டும் என்று கனவு காண்பவர்களில் அவரும் ஒருவர்.

பிரசன்ன விதானகே தயாரித்த இன்னுமொரு சிங்களப்படத்தின் பெயர்தான் 'ஆகாச குசும்' இப்படத்தின் தமிழ் வடிவம் தான் ஆகாயப்பூக்கள். பல்வேறு பரிசுகள் பெற்ற இத்திரைப்படத்தை தமிழ்ப்படமாக டப் செய்து வெளியிட்டவர் பிரசன்ன விதானகே.

தாய் மகள் பாசத்தை மையமாக வைத்து இப்படம் உருவாக்கப்பட்டது. இத்திரைப்படத்துக்கான தமிழ் உரையாடல்களை பிரபல பத்திரிகையாளரான ரவி ரத்னவேல் எழுதியிருக்கிறார்.

கொழும்பில் ஒரு பிரதியும். யாழ்ப்பாணத்தில் ஒரு பிரதியுமாக இரண்டு பிரதிகள் சிக்கனமாக படம் வெளியிடப்பட்டது. எனினும் மாப்பிள்ளை, சிங்கம் புலி போன்ற பிரபல தென்னிந்திய தமிழ்த்திரைப்படங்களுடன் ஆகாயப்பூக்கள் திரைப்படமும் போட்டி போட்டுக்கொண்டு ஓட வேண்டியிருந்தது.



பிரசன்ன விதானகே

ஆகாயப்பூக்கள் திரைப்படத்தின் கதை வித்தியாசமானது.

சந்தியாராணி என்பவர் புகழ்பெற்ற பழம்பெரும் நடிகை. இப்பொழுது தனது வீட்டின் அறைகளை வாடகைக்கு விடுவதன் மூலமும் சிற்றுண்டி செய்து விற்பதன் மூலமும் வாழ்ந்து வருகிறார்.

வாடகைக்கு குடியிருந்த ஓர் இளம் நடிகையின் தவறான நடவடிக்கையால் சந்தியாராணியின் பெயர், மீண்டும் வெளி உலகிற்கு தெரியவருகிறது.

நடன விடுதியில் வேலை செய்யும் பிரியா என்ற இளம்பெண். பொலிஸ் விசாரணையொன்றின் போது தான் சந்தியாராணியின் மகள் என்று கூறிவிடுகிறாள். இதனால் சந்தியா ராணியின் நிலைமை மேலும் சிக்கலாகிவிடுகிறது. உண்மை வெளியே வர வேண்டிய சூழ்நிலை. இதனால் சந்தியாராணி தான் கடந்த கால வாழ்க்கையை பற்றி வெளியே கூற வேண்டி வருகிறது.

சந்தியாராணி தான் சிறுவயதில் திருமணம் செய்து கொண்டதையும், பெண்பிள்ளையொன்று பிறந்ததையும் ஏற்றுக்கொள்கிறாள். சினிமாவில் சேர்ந்ததால் கணவனையும், மகளையும் பிரிய வேண்டிய நிலை ஏற்பட்டதையும் அவள் ஒப்புக்கொள்கிறாள்.

சந்தியாராணி சிநேகிதி ஒருத்தியின் உதவியுடன் தன் மகள் பிரியாவை தேடி அலைகிறாள். மகள் பிரியாவோ தாயை சந்திக்க மறுக்கிறாள். தாய் தன்னை வஞ்சித்துவிட்டதாக கருதுவதாலேயே தாயைச்சந்திக்க மறுக்கிறாள்.

தாய் - மகள் உறவின் பின்னணியிலிருக்கும் உறவையும் பாசத்தையும் பரிதவிப்பையும் வெளிப்படுத்தும் கதை இது.

இறுதி வரை சந்தியாராணியால் தன் மகள் பிரியாவை சந்திக்க முடியவில்லை. பிரியா விட்டுச்சென்ற குழந்தையை அதாவது தனது பேத்தியைத்தான் சந்தியாவினால் சந்திக்க முடிகிறது. இதுதான் ஆகாயப்பூக்கள் திரைப்படத்தின் கதைச்சுருக்கம்.

பழம்பெரும் நடிகை சந்தியா ராணியாக மாலினி பொன்சேகா நடித்துள்ளார். இப்படத்தில் நடித்ததன் மூலம் இவருக்கு இந்திய திரைப்பட விழாவொன்றில் வெள்ளியியில் பரிசு கிடைத்தது.

இசை - உரையாடல்கள் இந்தியாவில் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன. டப்பிங் குரல் வழங்கியவர்கள் அனைவரும் இந்தியக்கலைஞர்களே.. பொதுவான கதைப்பின்னணியை ஏற்படுத்துவதற்காக உரையாடல்கள் முழுவதும் இந்தியப்பாணியில் அமைக்கப்பட்டிருக்கிறது.

இன்னுமொரு விசேடமும் இப்படத்துக்கு உண்டு. இத்திரைப்படத்தின் திரைக்கதை புத்தக வடிவில் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இத்திரைப்படத்தின் கதை வசன கர்த்தா ரவி ரத்னவேல் அதை புத்தகமாக வெளியிட்டிருக்கிறார். ரவி ரத்னவேல் சிங்கள பத்திரிகையொன்றில் கடமையாற்றும் தமிழராவார்.

இனி நான் படம் பார்த்து முடித்த கதைக்கு வருகிறேன்.

ஆகாயப்பூக்கள் படத்தை பார்க்கும் பொழுது இடைவேளை விட்டார்கள். எத்தனைபேர் படம் பார்க்கிறார்கள் என்று எண்ணிப்பார்த்தேன். மொத்தம் 8 பேர் மட்டுமே படம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். படம் முடியும்பொழுதும் ரசிகர்களை எத்தனைபேர் என்று எண்ணிப்பார்த்தேன். அப்பொழுது 6 பேர் மட்டுமே இருந்தனர். எப்படி இருக்கிறது நம் ரசிகர்களின் ரசனை?

இனி படத்துக்கு வருகிறேன். இலங்கையில் தமிழ் சினிமா வளர வேண்டும் என்று விரும்பும் ரசிகர்கள் கட்டாயம் ஆகாயப்பூக்கள் திரைப்படத்தை பார்க்க வேண்டும். பிரசன்ன விதானகே சிங்கள திரை உலகின் சிறந்த இயக்குநர். அவர் இனிமேல் தமிழ் ரசிகர்கள் விரும்பும் வகையில் முழுநீளத்திரைப்படத்தை உருவாக்க வேண்டும். அவர் போன்றவர்கள் இம்முயற்சியில் ஈடுபட்டால் தான் இலங்கை தமிழ்ப்படங்களை காப்பாற்ற முடியும். அதற்கு ரசிகர்கள் நீங்கள் உதவ வேண்டும்.

# வெள்ளிக்கிழமை ஹீரோ ஜெய்சங்கர்




ஜெமினி, சிவாஜி, எம்.ஜி.ஆர் என்ற ஒரு வட்டத்துக்குள் தமிழ் சினிமா வலம் வந்து கொண்டிருந்தபோது இளமைப்புயல்களாக 'காதலிக்க நேரமில்லை' ரவிச்சந்திரனும், 'இரவும் பகலும்' ஜெய்சங்கரும் தமிழ் சினிமாவுக்குள் நுழைந்தார்கள். ரவிச்சந்திரன் சில மாதங்களுக்கு முன்னர் மரணமானார். ஜெய்சங்கர் பல ஆண்டுகளுக்கு முன்னரேயே இயற்கை எய்திவிட்டார்.

குறுகிய காலத்தில் அதிக படங்களில் மளமளவென நடித்தவர் ஜெய்சங்கர். சுமார் 600 படங்களில் நடித்திருக்கின்றார். அவரை அந்தக்காலத்தில் 'வெள்ளிக்கிழமை ஹீரோ' என்று அழைத்தார்கள். தமிழகத்தில் புதுப்படங்கள் வெள்ளிக்கிழமை தினங்களிலேயே வெளியாகும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அவரது புதுப்படங்கள் வெளியாகிக்கொண்டிருந்ததால் அவரை அப்படி அழைத்தார்கள்.

ஜெய்சங்கரை நடிகர் சிவகுமாருடன் ஒப்பிடலாம். சிவகுமாரைப்போலவே யாருக்கும் பிரச்சினையற்ற, வம்பு தும்புக்கு போகாத, கிசுகிசுக்களிலும் சிக்காத ஜென்டில்மன் நடிகராக வாழ்ந்து மறைந்தவர் ஜெய்சங்கர்.

இவரை தென்னக ஜேம்ஸ்பொண்ட், மக்கள் கலைஞர் என அன்புடன் அழைத்தார்கள். அது கௌபோய் மற்றும் ஜேம்ஸ்பொண்ட் காலம் என்பதால் தமிழகத்தில் அந்தப்பாத்திரங்களை ஏற்கக்கூடிய ஒரே நடிகராக ஜெய்சங்கர் திகழ்ந்தார்.

ஜோசப்தலியத் தனது சிட்டாடல் ஸ்டூடியோவின் மூலம் தயாரித்த இரவும் பகலும் படத்தின் வாயிலாக, சிங்கப்பூரில் வசித்துக்கொண்டிருந்த ஜெய்சங்கர், இளமை சொட்டும் கதாநாயகனாகத்தமிழுக்கு அறிமுகமானார்.



இளமைத்தோற்றம்

நடிகை அல்லாத கீதா என்ற பெண்ணை உச்சத்தில் இருக்கும் போதே திருமணம் செய்த ஜெய்சங்கருக்கு இரண்டு மகன்கள், ஒரு மகள். மகனும் மகளும் மருத்துவர்கள். ஒரு மகன் சிவில் பொறியியலாளர். எப்போதுமே கலகலப்பாகவும், சிரித்த முகத்துடனும் வலம் வந்து கொண்டிருந்த ஜெய்சங்கர் மென்மையான நடிப்பைத்தந்தவர். இன்றைக்கும் இளமை குன்றாத பாடல்களுக்கு வாயசைத்து காதல் இளவரசனாக திகழ்ந்த ஜெய்சங்கர். தனது பிறந்த நாளையும் தன் குடும்பத்தவர் பிறந்த தினங்களையும் கீழ்ப்பாக்கத்தில் இருக்கும் ஒரு கருணை இல்லத்தில் கொண்டாடி வந்திருக்கிறார். நிகழ்ச்சிகளில் வழங்கும் சன்மானத்தொகையைத் தான் வாங்காமல் தான் குறிப்பிடும் கருணை இல்லங்களுக்கு அனுப்பி விடும்படி சொல்லி விடுவாராம்.

ஒரு தடவை ஒரு பிரபல படத்தயாரிப்பாளர் விடியற்காலையிலேயே ஜெய் வீட்டுக்கு வந்தாராம். உங்களிடம் நான் தந்த அட்வான்ஸ் பணத்தை தாருங்கள். அது இருந்தால் தான் படம் வெளியாகும் என்று சொல்லி அழுதாராம். உடனே ஜெய் அட்வான்ஸாக தனக்கு தரப்பட்ட தொகையுடன் மேலும் கொஞ்சம் பணத்தையும் சேர்த்து அவரிடம் கொடுத்து வழியனுப்பி வைத்தாராம்.

இது பற்றி குறிப்பிடும்போது மூத்த மகன் விஜய்சங்கர், ''அப்பாவுக்கு வர வேண்டிய பணம் கோடிகளைத்தாண்டும். வங்கிகளில் இருந்து திரும்பி வந்த ஏராளமான காசோலைகளை பாதுகாப்பாக நாங்கள் வைத்திருக்கிறோம். அப்பா இது பற்றியெல்லாம் அலட்டிக்கொள்ள மாட்டார். இந்த முயற்சிக்கு இவ்வளவு தூரம் வந்ததே பெரிய விஷயம்.. அவங்களுக்கு என்ன கஷ்டமோ யார் கண்டது..? நமக்கு எது ஒட்டுமோ அதுதான் ஒட்டும். என்று கூலாக பதில் சொல்வார்'' என்கிறார் விஜய்சங்கர்.

இவர் ஒரு பெண்ணுடன் பழகிக்கொண்டிருப்பதை அறிந்த ஜெய்சங்கர், யார் அந்த பெண்? லவ் பண்ணுகிறாயா? என்று கேட்டுவிட்டு, அவர்களை முறைப்படி மாப்பிள்ளை கேட்கச்சொல் என்றாராம். அப்பேர்ப்பட்ட ஜென்டில்மேன் என் அப்பா என்று சொல்லி சிலிர்க்கிறார் விஜய்சங்கர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலாளியைத் தாக்க, வில்லாளியாக மாறிய வேடுவர்...



மஹியங்கனை ஒரு பின்தங்கிய பகுதி.... காட்டுப் பகுதி அதிகம்.. அங்கே இலங்கையின் பழங்குடிகளான வேடுவர்கள், குடும்பம்.. குடும்பமாக வசித்து வந்தனர். அதாவது இலங்கையின் ஆதிவாசிகள்.

மஹியங்கனைப் பகுதியில் உள்ள தம்பனையைச் சேர்ந்த ஒரு ஆதிவாசி ஊருவரிகே ரத்னாயக்க. வேடுவப் பண்பாடுகளில் ஊறியவர். கொஞ்சம் இசகு பிசகு என்றால், கோபம் பொத்துக்கொண்டு வந்து விடும். கொஞ்சம் காட்டமான பேர்வழி என்று வைத்துக்கொள்ளலாம்.

இவரது மனைவியும், மகளும் கண்டி ஆஸ்பத்திரியில் சிற்றூழியர்களாக வேலை பார்க்கிறார்கள். அவர்களைப் பார்ப்பதற்காக அந்த ஆதிவாசி அண்மையில் ஒரு நாள் கண்டி ஆஸ்பத்திரிக்கு வந்திருக்கிறார். கண்டி வில்லியம் கோபல்லவ மாவத்தையில் உள்ள ஆஸ்பத்திரியில் எப்போதுமே மக்கள் நடமாட்டம் அதிகமாகவே காணப்படும்.கண்டி மாவட்டத்திலுள்ள பெரிய ஆஸ்பத்திரி இது என்பதால், மாவட்டத்தின் பல இடங்களிலிருந்தும் மக்கள் அங்கு பெருமளவில் வருவதுண்டு.

அன்று ஒரு நாள்....

ஆஸ்பத்திரிக்கு வந்த கூட்டத்தில் ஊருவரிகே ரத்னாயக்கவும் ஒருவர். ஆஸ்பத்திரியில் நோயாளர்களைப் பார்ப்பதற்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் மட்டுமே பொது மக்கள் உள்ளே செல்ல முடியும். பகல் 12 மணி முதல் 1.00 மணிவரையில் மட்டுமே பொது மக்களுக்கு அனுமதி.. ஒரு ஐந்து பத்து நிமிடங்கள் தாமதமாகி வந்தால், ஏதாவது சாக்குப் போக்கு சொல்லிக்கொள்ளலாம். ஆனால் ஊருவரிகே ரத்னாயக்க ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்ததே பிற்பகல் 2.30 க்குத்தான்.

நோயாளர்களைப் பார்க்க அனுமதிக்கப்பட்ட நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் ஆஸ்பத்திரிக்கு வரும் எவரும், தகுந்த காரணம் இருந்தால் தவிர உள்ளே அனுமதிக்கப்படக்கூடாது... என்ற ஆஸ்பத்திரி காவலாளிகளுக்கு கடுமையான உத்தரவு போடப்பட்டிருந்தது. அந்த உத்தரவுக்கமைய குறிப்பிட்ட நேரத்திற்கு வராதவர்களை காவலாளிகள் ஒரு பக்கம் நிறுத்தி வைத்து விடுவார்கள்.

ஆதிவாசி ஊருவரிகேயையும் காவலாளிகள் உள்ளே விடவில்லை, தனது மனைவியையும், மகளையும் பார்க்க உள்ளே போக வேண்டும் என்றுதான் முதலில் அவர் கேட்டார். ஆனால் எந்தக் காரணம் கொண்டும் உள்ளே போக அனுமதிக்க முடியாது என்று ஆதிவாசியிடம் ஆஸ்பத்திரி காவலாளிகள் கூறிவிட்டனர். 'உனது மனைவியையும், மகளையும் வெளியே வரச் சொல்லலாமே தவிர, நீ உள்ளே செல்ல முடியாது' என்று காவலாளிகள் கூறி விட்டனர்.



ஐயம்பதி ஐயசிங்க

ஆதிவாசியும் பலமுறை கேட்டுப் பார்த்தார். காவலாளி உள்ளே விடுவதாக இல்லை. ஆதிவாசி வேடுவ மொழியிலும், காவலாளி சிங்களத்திலும் மாறி மாறி குரலெழுப்பினர். அங்கிருந்தவர்களுக்கு அந்தக் காட்சி நல்ல வேடிக்கையாக இருந்தது. எத்தனைத் தரம்தான் கேட்டுப் பார்ப்பது..? ஆதிவாசிக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்துவிட்டது. சிறிது தூரம் பின்னே சென்று தோளில் மாட்டியிருந்த வில்லை எடுத்து, தூளியில் இருந்த அம்பை அதில் நாணேற்றி கண் இமைக்கும் நேரத்தில் காவலாளியை நோக்கி எய்து விட்டார் ஆதிவாசி... ஸ்..ர்..ர்.. என்று அம்பு பறந்தது.

''ஐயோ அம்மா..!'' அடி வயிற்றைப் பிடித்தபடி காவலாளி...கீழே விழுந்தான். அம்பு காவலாளியின் வயிற்றை தாக்கியிருந்தது. அங்கு இருந்த அத்தனை காவலாளிகளும் ஓடிச் சென்று ஆதிவாசி ஊருவரிகேயைச் சுற்றி வளைத்து, ஆளைப் பிடித்து தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன், ஆஸ்பத்திரி பொலிஸாரிடம் அவரை ஒப்படைத்தனர். கண்டி மாஜிஸ்திரேட் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட ஆதிவாசியை நீதவான் பிணையில் செல்ல அனுமதித்தார்.

எய்யப்பட்ட அம்பு ஆஸ்பத்திரி காவலாளியின் வயிற்றின் அடிப்பகுதியில் பட்டதால், அவர் உயிர் ஆபத்திலிருந்து தப்பிவிட்டார். இன்னும் நான்கு அங்குலம் மேலே போயிருந்தால், அம்பு தைத்த மறுகணமே அவர் உயிர் பிரிந்திருக்கும். நல்ல வேளை அவர் உயிர் பிழைத்தார்.

ஆதிவாசி சரியாக இலக்கு வைக்க வில்லையா..? இல்லை அடி வயிற்றுக்குத்தான் இலக்கு வைத்தாரா..? அவரைத்தான் கேட்க வேண்டும்..!

இலங்கையின் பழங்குடிகளான வேடர்கள் (ஆதிவாசிகள்) தமது பாரம்பரிய முறையின்படி ஒரு கோடரியை தோளில் தொங்க விடவும் அல்லது வில்லையும், தூளியில் அம்புகளையும் பொது இடங்களில் எடுத்துச் செல்வதற்கும் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

1908 ஆம் ஆண்டின் 6227 ஆம் இலக்க மத்திய மாகாண வர்த்தமானியின்படி தடை செய்யப்பட்ட ஆயுதங்கள், சட்ட விதியின் கீழ் வேடர்கள் தமது பாரம்பரிய ஆயுதங்களை எடுத்துச் செல்ல முடியும். அவ்வாறான ஆயுதங்களை பொது இடங்களுக்கு எடுத்துச் செல்லவும் அனுமதி உண்டு. ஆனால், பொது இடங்களில் அவற்றை அவர்கள் பாவிக்க முடியாது என்றும் அந்த சட்டம் கூறுகின்றது.

இந்நிலையில் இந்த சம்பவம், பாதுகாப்புத்துறைக்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. மத்திய மாகாணத்தில் இடம்பெறும் நிகழ்வொன்றில் முக்கிய அரசியல்வாதிகள் கலந்துகொள்ளும்போது, அதில் ஆதிவாசிகளும் கலந்து கொள்ளலாம்...

அவ்வாறான ஒரு நிகழ்வில், இது போன்ற ஒரு சம்பவம் நடந்தால்..?

பாதுகாப்புத்துறை இது பற்றி இப்போது ஆராய்ந்து வருகிறது.

# வயதாகிக்கொண்டிருப்பதாக உணர்கிறீர்களா?

நரைத்தலை, சுருக்கம் விழுகின்ற முகம்... அப்படியானால் நீங்கள் அவரிடம் கேட்கக்கூடாத கேள்வி, ''உங்களுக்கு வயது என்னவாக இருக்கும்..?'' என்பதுதான். நீங்கள் அப்படியே கேட்டுவிட்டாலும் அவர் அளிக்கப்போகின்ற பதில் பெரும்பாலும் நேர்மையானதாகவும், நேரடியானதாகவும் இருக்கப் போவதில்லை. யாராவது ஒருவர் உண்மை வயதை ஒப்புக் கொண்டாலும் அது இரகசியமான அல்லது பலவீனமான குரலில் தான். ஆண்கள் ஓரளவுக்காவது தமது வயதை ஒப்புக்கொள்வார்கள். பெண்களுக்கு வயது என்பது கெட்ட வார்த்தை. யாராவது வயதை கேட்டுவிட்டால், பதில் வராது. ஏன் கேட்கிறீர்கள் என்பார்கள். மிகுந்த சங்கடமான நிலையாக பெண்கள் அதை உணர்வார்கள்.

வயதாவது என்பது அத்தனை மோசமான விஷயமா? டை அடித்து கொஞ்சம் மேக் அப் போட்டுக் கொள்வது வேறு, நான் என்றும் 16 என்பதாக நினைத்துக்கொள்வது வேறு, உடல் வயதாவதையும், தளர்வதையும் அவற்றுக்கான வெளி அடையாளங்களையும் தவிர்ப்பதற்கில்லை. அதை நாம் மறைக்காமல் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதே சமயம் நாம் என்றும் இளமையாக வைத்துக்கொள்ளவேண்டியது எமது உள்ளத்தையே. உள்ளம் எளிமையாகவும், வெளிப்படையானதும், உலக நடப்புகளை அவதானிப்பதாகவும் இருக்குமானால் அது ஆரோக்கிய உள்ளம். ஆரோக்கியமான உள்ளம் இளமையாகவே இருக்கும். எனவே வயதாகிக்கொண்டிருப்பவர்கள் உடலை இளமையாக காட்டுவதற்கு முனையும் அதே சமயம் உள்ளத்தை இளமையாக வைத்துக்கொள்வதில் அக்கறை காட்ட வேண்டும். இளமையாக இருப்பதற்கான ஒரே வழி இது ஒன்று தான்.

நாற்பது தாண்டி வயது ஏறிச்செல்லும்போதே இள வயது ஆசைகளை, எதிர்பார்ப்புகளை படிப்படியாக குறைத்துக்கொள்ள பழக வேண்டும். அவற்றை உங்கள் பிள்ளைகள் வளர்த்துக்கொள்ள உதவலாம். வீட்டில் முதல் கோப்பி, முதலாவதாக குளிப்பது போன்ற முதல் விஷயங்களையும் விட்டுக்கொடுத்துவிடலாம். பிறருக்கு தொல்லை தராத வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். முடிந்தவரை குடும்பத்தினருக்கும் பிறருக்கும் உதவுங்கள். உபத்திரமாக இருக்கிறேனோ என்பதை அவ்வப்போது உங்களை நீங்களே சுயபரிசோதனை செய்து பார்த்துக்கொண்டால் உங்களை வெறுப்பவர்கள், 'பிடித்துக்கொண்டால் காரியம் விடாது' என்று ஒதுங்குபவர்கள் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து விடும்.

எப்போதும் நானில் இருங்கள், எல்லோரிடமும் அந்த காலத்தில் உன் வயதாக இருக்கும் போது... என்று பழைய நினைவுகளை ஆரம்பித்து விடாதீர்கள். பழைய நினைவுகளை, பொருத்தமான



இடத்தில் அல்லது பொருத்தமானவர்களிடம் மட்டும் பகிர்ந்து கொள்ளுங்கள். பொதுவாகவே நீங்கள் யாரிடம் பேசுகிறீர்களோ அவர்கள் ரசிக்காத விஷயங்களை பேசுவதை தவிர்த்துக்கொள்ளுங்கள். புதிய திரைப்படங்கள், பாடல்கள், டிவி நிகழ்ச்சிகள், நாட்டு நடப்புகளை தெரிந்து வைத்துக்கொண்டால், இளைஞர்களிடம் இவை பற்றி பேசினால் அவர்கள் உங்களை கிழவனாகப் பார்க்க மாட்டார்கள்.

பேசும்போது தீவிரமான, சோகமான, சிக்கலான விஷயங்களை பேசுவதை, விவாதிப்பதை தவிர்த்துக்கொள்ளுங்கள். இந்த விஷயங்களை யாரிடம் பேச வேண்டுமோ அவர்களிடம் பேசினால் மட்டுமே எடுபடும். நிறைய சிரித்து, புன்னகைத்து, ஜோக்காக, மேலோட்டமாக பிறர் மனதை புண்படுத்தாமல் ஏனையோருடன், குறிப்பாக 'கிழட்டுப்பயல்' என்று அழைக்கக் கூடியவர்களிடம் உரையாடினால் 'தாத்தா' என்று யாரும் உங்களை அழைக்க மாட்டார்கள்.

வயதாகிக்கொண்டிருப்பதை கண்டு பயப்படுகிறவர்கள், வயதானதால் கிடைக்கும் சௌகரியங்களை பற்றியும் சிந்தித்துப்பார்க்க வேண்டும். வீடுகளில் பொது இடங்களில், உறவினர்களிடம் வயதானவர்கள் முறையாக நடந்துகொண்டால், வயதானவர்களுக்கான கௌரவத்தை நீங்கள் அனுபவிக்கலாம்.

வயதாகிக்கொண்டிருப்பவர்களிடம், வயதானவர்கள் பற்றிய ஒரு அபிப்பிராயம் உண்டு. தொணதொணவென்றிருப்பார்கள். சதா புத்திமதி சொல்லிக்கொண்டும், குறை கண்டுபிடித்துக்கொண்டும், 'உனக்குத் தெரியாத விஷயங்கள் எல்லாம் எனக்குத் தெரிகிறது பார்' என்று பெருமையடித்துக்கொண்டும் இருப்பவர்கள் என்ற அந்த அபிப்பிராயம் கறைபிடிமாதிரி நடந்து கொண்டாலேயே போதும், உங்களை அவர்கள் வயதானவர் பட்டியலில் சேர்க்க மாட்டார்கள்.

வயதாகிக்கொண்டிருக்கும் பெண்கள் ஓவராக அலங்காரம் செய்து கொள்ளக்கூடாது. ஏனோ தானோவெனவும் உடை பாணிக்கக் கூடாது. எடுப்பாக, ஸ்மார்ட்டாக, முக்கியமாக, புன்னகை முகத்துடன் இருங்கள். வாழ்க்கையை ஜாலியாக எடுத்துக்கொள்ளுங்கள். வயதான பெண்களுக்கு இன்று ஓய்வு கிடைப்பது குறைவு. ஏனெனில் பலரும் இவர்களை சம்பளம் இல்லாத 'நன்னி'களாகவே பார்க்கிறார்கள். எனினும் ஓய்வு நேரம் கொண்ட பெண்கள் சும்மா வீடுகளில் குந்திருக்காமல் தையல், தேனீ வளர்ப்பு, டியூஷன் கொடுத்தல், வீட்டுத்தோட்டம் அல்லது தமக்குப் பிடித்தமான ஒரு பொழுதுபோக்கு என்னவற்றை மேற்கொண்டால் உள்ளம் மலர்ச்சியாக இருக்கும்.

முதலாவது உலகத்தை புரிந்து கொள்ளுங்கள் நீங்கள் இளமையாகவும் நல்ல பதவியிலும் இருக்கும்போது பலரும் உங்களை நாடி வருவார்கள். காலம் முடிந்ததும் அவர்கள் வரமாட்டார்கள். பழைய மதிப்பு மரியாதை கிடைக்காது. இந்த யதார்த்தத்தை புரிந்து கொள்ளாமல் ஐயோ இப்படி ஆகிவிட்டதே என்றும் உலகம் உங்களை வஞ்சித்து விட்டது என்று புலம்ப வேண்டாம். நாம் புலம்பிக்கொண்டிருந்தால் சுற்றி இருப்பவர்களும் விலகிச்சென்று விடுவார்கள். மனம் கிழடு தட்டினால் உடலும் கிழடு தட்டிவிடும்.

எனவே மனதை ஆரோக்கியமாக என்றும் 16 ஆக வைத்துக்கொள்ளுங்கள்..!


- ஷோபனா சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் முதல் மருத்துவமனை அமைத்த ஜோன் ஸ்கடர் வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையின் முன்னோடி

மணிஸ்ரீகாந்தன் (வேலூரில் நேரடியாகத் திரட்டிய தகவல்களுடன்)



ஐடா ஸ்கடர்

இந்தியா பண்டைய நாகரீகத்தின் சுவடுகளை இன்னும் சுமந்துகொண்டிருக்கும் ஒரு தொன்மையான நாடு. அரசர் கால கோயில்கள் தொடங்கி கோல்டன் டெம்பல் வரை மலைக்க வைக்கும் எவ்வளவோ விஷயங்களை தன்னகத்தே கொண்ட நாடு அது. அதன் சிறப்புகளில் தமிழகம் வேலூரில் கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக மருத்துவ சேவையாற்றிவரும் (CMC) மருத்துவமனையும் ஒன்றாகும்.

தனியார் மருத்துவமனைகள் இந்தியாவிலும், இலங்கையிலும் தோன்றுவதற்கு முன்னர், அதி உயர் சிகிச்சைக்காக நோயாளர்கள் நாடிச் சென்ற ஒரே இடம் சி.எம்.சி. மருத்துவமனைதான்.



யாழ்ப்பாணம் வந்த முதலாவது ஸ்கடர்: ஜோன் மற்றும் துணைவியார் ஹாரியட்

ஆசியாவில் புகழ்பெற்ற மருத்துவமனையாக விளங்கும் சி.எம்.சி. மருத்துவமனையின் முதல் தொடக்க பயணம் யாழ். மண்ணிலிருந்துதான் ஆரம்பமாகியிருக்கிறது. இது பலரும் அறியாத ஒரு தகவல்.

உலகிலேயே மிஷனரி பணிகளுக்காக பெருமளவில் பணியாற்றிய மிகப் பெரிய குடும்பம் ஸ்கடர் குடும்பம்தான். இது உலக மருத்துவ வரலாற்று சாதனையாகவும் கருதப்படுகிறது. 1818 ம் ஆண்டளவில் நிவ்யோர்க்கில் பிரபலமான மருத்துவராக பணியாற்றி வந்த ஜோன் ஸ்கடருக்கு "முழு உலகையும் சுகப்படுத்தல்" என்ற தலைப்பிலான ஒரு துண்டு பிரசுரத்தை படிக்க நேர்ந்தது. அதில், உலகில் அறுநூறு கோடி மக்கள் வசிக்கிறார்கள் என்றும், அவர்களில் அநேகர் நோய்களால் பாதிக்கப்பட்டு மரணித்து வருகிறார்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருப்பதை அவர் வாசித்தார். இது அவருக்க புதிய தகவலாக இருந்தது. இப்படியெல்லாம் மக்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பது அவருக்கு மலைப்புக்குரிய விஷயம்.

மக்கள் பட்டினியாலும், நோயாலும் ஐம்பது லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வாடி வதங்கிக் கொண்டிருக்கும் செய்தி. மருத்துவர் என்ற வகையில் அவரை மிகவும் பாதித்தது. அவர்களை சுகப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த அவர், தன்னை மிஷனரியில் இணைத்துக்கொண்டார். கிறிஸ்தவ மிஷனரிகள்தான் அன்று கடல் கடந்த நாடுகளில் மருத்துவ சேவைகளை ஆற்றி வந்தன.


தனது மனைவி, பிள்ளைகளுடன் அவர் 1819 ம் ஆண்டு ஜூன் மாதம் எட்டாம் திகதி அமெரிக்காவீன் பொஸ்டனிலிருந்து "இந்துஸ்" என்ற கப்பலில் கல்கத்தாவை நோக்கி பயணமானார். சேவையே அவர் நோக்கமாக இருந்தது.

கப்பலில் ஆறு மாத பயணம்... கல்கத்தாவின் தரையை ஜோன் ஸ்கடரின் பாதம் தொட்ட போது, அவரின் பெண் குழந்தை மரியா வயிற்றுப் போக்கினால் இறந்துவிட்டது. ஜோன் ஸ்கடருக்கும் அவரின் மனைவிக்கும் இது பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்தியாவில் சுட்டெரிக்கும் வெய்யில், புதிய கலாச்சாரம், மொழி, உணவு போன்றவை அக்குடும்பத்துக்கு ஒத்துக்கொள்வதாக இல்லை. கொஞ்ச காலம் அங்கே வாழ்ந்த அவர்கள், தாம் இந்த மக்களைப் பற்றி நிறைய கற்க வேண்டும்... இங்கு வாழ பழகிக்கொள்ள வேண்டும்.. என்பதை உணர்ந்து கொண்டார்கள்.

இலங்கைக்குச் செல்லுங்கள் என்று அங்கே அறிவுரை வழங்கப்பட்டது. அதை அக்குடும்பம் ஏற்றுக்கொண்டது. இந்திய சீதோஷ்ன நிலையை ஒத்த இலங்கைக்குச் சென்று கொஞ்ச காலம் தங்குவது என்று முடிவு செய்தார்கள். அதன்படி கல்கத்தாவிலிருந்து இலங்கை வந்தார்கள். பின்னர் யாழ்ப்பாணம் சென்றார்கள். 1819 டிசம்பர் 17 ம் திகதி, யாழ்ப்பாணம் தெள்ளிப்பளையில் குடியேறினார்கள். சில மாதங்கள் அங்கே கழித்துவிட்டு, 1820 ல் பண்டத்தரிப்புக்கு வந்தார்கள். அங்கிருந்த கோவிலையும், பக்கத்திலிருந்த வீட்டையும் தமது மருத்துவ வேலைகளுக்காக பயன்படுத்தினார்கள்.



இலங்கையின் முதல் மருத்துவ மாணவர்களான வாலுப்பிள்ளை, கணபதி, படியத்தம்பி, பூபாலசிங்கம் குமாது மற்றும் அருணாசலம்



இலங்கையின் முதலாவது மருத்துவமனை: ஸ்கடர் பண்டத்தரிப்பில் அமைத்தது (1820)

இதற்கிடையே இரண்டு குழந்தைகள் நோய் கண்டு இறந்து போனார்கள். எனினும் ஜோன் ஸ்கடர் மனம் தளரவில்லை. தன் மருத்துவ சேவையைத் தொடர்ந்தார். தமிழ் மொழியையும் கற்றுக் கொண்டார். இவரால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிலருக்கு மருத்துவப் பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கிறது. இலங்கையின் முதல் மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி, தாதியர் பயிற்சி நிலையம், மாட்டு வண்டி அம்புலன்ஸ் சேவை என்பன ஸ்கடராலேயே ஆரம்பிக்கப்பட்டது.

1821ல் யாழ். வெஸ்லியன் ஆலயத்தில் ஜோன் ஸ்கடர் மதகுருவாக திருநிலை படுத்தப்பட்டார். பிறகு 1833ல் இவர் சாவகச்சேரிக்கு மாற்றப்பட்டார். 1820ல் ஜோன் ஸ்கடர் பண்டத்தரிப்பில் நிறுவிய வெஸ்டர்ன் மெடிக்கல் மிஷனரிதான், ஆசியாவின் முதல் மருத்துவ மிஷனரி. வேலூர் சி.எம்.சி.க்கு முன்னோடியாக விளங்கியது இந்த மருத்துவமனைதான். யாழ்ப்பாணத்தில் ஜோன் ஸ்கடருக்கு மொத்தம் 13 பிள்ளைகள். நால்வர் இறந்துவிட. மிகுதி ஒன்பது பேரும் - ஏழு ஆண்கள், இரண்டு பெண்கள் - இந்தியாவுக்கு வந்து மிஷனரி சேவையில் ஈடுபட்டார்கள். இவர்களில் (ஐவர்) மருத்துவர்களாக சேவை புரிந்தார்கள். இதனால்தான் மிகப் பெரிய மிஷனரி குடும்பம் என ஜோன் ஸ்கடரின் குடும்பம் அழைக்கப்படுகிறது.



ஜோன் ஸ்கடர்: ஐடாவின் தந்தை

தனது கடைசி கடைக்குட்டி பையனுக்கு "ஜோன் ஸ்கடர்" என்ற தனது பெயரையே ஜோன் சூட்டியிருந்தார். மகன்கள் அனைவரும் இந்தியா முழுவதும் மருத்துவ, ஆன்மீக பணிகளை வெற்றிகரமாக மேற்கொண்டு வந்தார்கள். அவர்களில் கடைக்குட்டி ஜோன் ஸ்கடர் தமிழகத்தில் தமது பணிகளை மேற்கொண்டிருந்தார். அவரின் கடைசி மகள் ஐடா ஸ்கடர்தான் வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையை ஆரம்பித்தவர்.

ஐடா ஸ்கடர் அமெரிக்காவின் நோர்த்பீள்ட் கல்லூரியில் சட்டம் பயின்று கொண்டிருந்தவர். ஸ்கடர்களின் இறைச் சேவை, மருத்துவ சேவையில் அவருக்கு நாட்டம் இருக்க வில்லை. சட்டத்தரணியாக வேண்டும் என்பதே அவரது விருப்பம்.

படிப்பு முடிந்ததும் ஒரு அழகிய ஆண் மகனை மணந்துகொண்டு, சந்தோசமாக வாழ வேண்டும்.. என்பதுதான் ஐடாவின் கனவு. "உன் உடம்பில் ஓடுவதே மிஷனரி ரத்தம்தான். நீயும் மிஷனரியாகத்தான் ஒரு நாள் வரப் போகிறாய்." என்று ஐடாவின் கல்லூரித் தோழி ஃப்ளோ ஐடாவைப் பார்த்து ஒருநாள் கிண்டலடித்திருக்கிறார். ஐடா சிரித்துவிட்டு சும்மாயிருந்து விட்டார்.

1877 ம் காலப் பகுதியில் இந்தியாவில் பட்டினியும், பஞ்சமும் கோரத்தபண்டவம் ஆடிக்கொண்டிருந்தது. ஐம்பது லட்சத்திற்கும் அதிகமான மக்களை பஞ்சம் காவு கொண்டது.

இந்தியாவில் அதிகம் வெய்யில் சுட்டெரிக்கும் இடம் வேலூர். அங்கே தமது பணிகளை தளராது செய்து கொண்டிருந்தார் ஜோன் ஸ்கடர். வேலூர் மிஷனரி பக்கத்தில் பசியால் துடிக்கும் குழந்தைகளுக்கு இவர் பிஸ்கட் கொடுப்பாராம். ஆனால் அதை வாங்கி வாயில் போட்டு சாப்பிடக்கூட அந்த குழந்தைகளுக்கு கைகளில் சக்தி இருக்காதாம். எனவே அந்த பிஸ்கட்டுகளை தூளாக்கி குழந்தைகளின் வாயில் போட்டு தண்ணீர் ஊற்ற வேண்டியிருக்கும். குழந்தைகள் இப்படியென்றால், வயதானவர்களின் நிலை இன்னும் மோசம். புழுதி படிந்துக் கிடக்கும் வேலூர் வீதிகளில் உடல் மெலிந்து, நடை தளர்ந்து போன மனிதர்கள் தரையில் ஊர்ந்து சென்று கொண்டிருந்தார்கள்.

இது தவிர, கொள்ளை நோய் தன் பங்குக்கு கிராமங்களை கொத்து கொத்தாக அழித்துக் கொண்டிருந்தது. தொற்று நோய்கள் என்றாலே ஏதோ தெய்வ குற்றம் என்று கருதிய மக்கள், உடலுக்கு மருத்துவம் பார்ப்பதை விட்டு விட்டு சாமிக்கு மிருகங்களை பரிகாரமாக பலி கொடுத்துக் கொண்டிருந்தார்களாம். இவைகளை சமாளிக்க முடியாமல் ஜோன் ஸ்கடர் தவித்தார்.

அந்த சமயத்தில் ஜோன் ஸ்கடரின் மனைவிக்கு உடல் நிலை சரியில்லாமல் போக, அமெரிக்காவில் படித்துக்கொண்டிருந்த ஐடா ஸ்கடருக்கு தந்தி அனுப்பினார்.


(தொடரும்)



சி.எம்.சி. மருத்துவமனை, வேலூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மருமகளை எதிரியாகக் கருதிய மாமியார்

காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து, குளித்து உடை மாற்றிக் கொண்ட மேனகா, கூந்தலை அள்ளி முடிந்துக்கொண்டு, சமையலறைக்குள் நுழைந்தாள் கணவனுக்கு கோப்பி போடுவதற்காக. ஆனால் அங்கே இரண்டு கோப்பைத் தேநீர் ஆவி பறக்கத் தயாராக இருந்தது.

"ஒன்றை எடுத்துக்கோ..! இதை அவனுக்கு நான் கொடுத்துட்டு வாறேன்.." என்றபடி மாமியார் தேனீர் கோப்பையுடன் நகர்ந்தாள்.

"ஐயோ மாமி.. அவர் பால் கோப்பிதான் கேட்டார்.."

"அவன் காலையில் டீதான் குடிப்பான்.." மாமி சமையலறையைத் தாண்டிச் சென்று விட்டாள்.

மேனகா அதை பொருட்படுத்த வில்லை. திருமணம் நடந்து பத்துத் தினங்கள் கழிந்து, நேற்றுதான் கணவன் வீட்டுக்கு வந்தாள் மேனகா. இன்றுதான் சாதாரண வாழ்க்கையை ஆரம்பிக்கும் முதல் நாள்.

மாமியார் சரஸ்வதியின் ஒரே மகன் சங்கர். சரஸ்வதி வசதியானவள். மூன்று ஆண்டுகளுக்கு முன்னரேயே அவள் கணவன் காலமாகி விட்டார். அதன் பின்னர் அவள் உலகமே சங்கர்தான். இப்போது மேனகா மருமகளாக அங்கே வந்திருக்கிறாள்.

காலையில் சுடச் சுட இட்லி பரிமாறியதும் மாமியார்தான். பகல் உணவுக்கு மாமியாருக்கு அவள் ஒத்தாசைதான் செய்ய முடிந்தது. சமைக்க அவள் விடவில்லை. மகனுக்கு என்ன பிடிக்கும், என்ன பிடிக்காது.. என்பது எனக்குத்தான் தெரியும்.. என்று மாமி சொல்லிவிட, அவள் தலையாட்டினாள்.

இரவில் பூரி, சப்பாத்தி எல்லாம் மாமியார் கை வண்ணத்தில்தான். புதுத் தம்பதியினர் மௌனமாக சாப்பிட்டு எழும்பினர்.

ஆனால், அன்று மட்டுமல்ல.. இதுவே தொடர் கதையான போது, திடுக்கென்றது மேனகாவுக்கு, சங்கரின் உடைகளைத் துவைப்பது, அயர்ன் பண்ணுவது, காலையில் உடைகளை எடுத்துத் தருவது, பக்கத்தில் அமரச் சொல்லி பேசுவது, என்று மாமியார் தான் செய்ய வேண்டியவற்றை தன் தலையில் போட்டுக்கொண்டு, செய்யத் தொடங்கிய போது, அந்தப் பெரிய வீட்டில் தான், தனிமைப் பட்டிருப்பதை முதல் தடவையாக உணர்ந்தாள் மேனகா. இரவில் ஒன்றாகப் படுப்பதைத் தவிர, ஏனைய எல்லா நேரத்திலும் மாமியார் ஆட்சிதான் நடந்த கொண்டிருந்தது. தனியாகக் கணவனுடன் பேசுவதற்கே மாமியார் இடம் அளிக்க வில்லை.

கணவன் சங்கருக்கு இந்தப் பிரச்சினை புரிந்தாலும், அம்மாவை மீறி அவனால் எதுவுமே செய்ய முடியவில்லை. ஒரு நாள் அம்மா வெளியே சென்றிருந்த வேளையில் வீடு வந்த சங்கர், மேனகாவை படம் பார்ப்பதற்காக வெளியே அழைத்துச் சென்றான்.

ஹனிமூனுக்குப் பின்னர் அவர்கள் வெளியே சென்ற முதல் தருணம் அதுவே. படம் முடிந்து, காலாற நடந்து, ஹோட்டலில் மெதுவாக மெதுவாக சாப்பிட்டு, சிரித்துப் பேசி, தோளில் சாய்ந்து அவர்கள் வீடு திரும்பும் போது நள்ளிரவாகி விட்டது.

மறுநாள் அதிகாலையிலேயே வெடித்தது பூகம்பம்..

காலையிலேயே பெருங் குரல் எடுத்து மேனகாவைத் திட்டத் தொடங்கினாள் மாமியார். அமைதியான வீட்டைப் பிரிக்க வந்த சதிகாரி என்றும், மகனைத் தன்னிடமிருந்து பிரிக்க மந்திரம் போடுகிறாள் என்றும் கடுமையாகத் திட்டித் தீர்த்தாள். அரண்டு போனாள் மேனகா. சங்கரின் எந்த சமாதானமும் சரஸ்வதியை சரிகட்ட வில்லை. அடுத்த இரண்டு, மூன்று நாட்களாக மருமகளை மாமியார் ஏறெடுத்தும் பார்க்க வில்லை. வேலை விட்டு வீடு வந்ததும் மேனகா, கணவனிடம் சொல்லி அழுதாள். கையைப் பிசைந்த கணவன், இறுதியாக தன் மாமா, சித்தப்பா குடும்பத்தினரை அழைத்து விவரம் சொல்லி உதவி கேட்டான்.

சமரச முயற்சிகள் நடந்தன. சரஸ்வதி மேல்தான் தவறு என்றும், இளந் தம்பதியினரின் வாழ்வில் குறுக்கிடக் கூடாது என்றும் அவர்கள் கூறி, மாமியாருக்குப் புத்தி சொன்னார்கள். முகம் கல்லாகிப் போனாள் சரஸ்வதி.

மறுநாள் காலை மாமியாரைக் காணவில்லை. முன் அறையில் பூச்சாடிக்குக் கீழே ஒரு கடிதம் இருந்தது. சரஸ்வதிதான் எழுதியிருந்தாள். தன்னைத் தேட வேண்டாம் என்றும், தான் ஒரு வயோதிபர் விடுதியில் சேர்ந்து விட்டதாகவும், குறிப்பிட்டிருந்தாள். மேனகா அங்கே இருக்கும் வரை அந்த வீட்டினுள் காலடி எடுத்து வைக்க மாட்டேன் என்பதே கடிதத்தின் முக்கிய விஷயமாக இருந்தது.

ஒரு வழியாக சங்கர் அந்த வயோதிபர் இல்லத்தைக் கண்டு பிடித்து, அம்மாவுடன் பேசிப் பார்த்தான். அவள் இம்மியளவும் நகர்ந்து கொடுப்பதாக இல்லை. மேனகா அங்கே இருக்கக்கூடாது என்பதே சரஸ்வதியின் ஒரே கோரிக்கையாக இருந்தது.

மாமி – மருமள் மோதல் தெரிந்த விஷயம்தான். ஆனால் இப்படி ஒரு வெறுப்பா..?

இதன் பின்னரேயே கணவனும், மனைவியும் கலந்து பேசி, ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதாவது சரஸ்வதியை சமாதானப்படுத்துவ தற்காக தாம் விவாகரத்து செய்து கொள்ளத் தீர்மானித்தார்கள்.

ஒரு பெண் சட்டத்தரணியைச் சந்தித்து தமது முடிவை அவர்கள் சொன்னார்கள். அந்த சட்டத்தரணிக்கு இது நம்பமுடியாத புது கேசாகப்பட்டது. ஒரு தவறான எண்ணம் கொண்ட, வயதான பெண்ணின் சந்தோஷத்துக்காக, இளந் தம்பதியினர் சட்ட ரீதியாகப் பிரிவதா..? மனதளவில் இதை அப் பெண் சட்டத்தரணியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அந்தச் சட்டதரணி முதியோர் இல்லம் சென்று சரஸ்வதியைச் சந்தித்துப் பேசினார். ஒரு மனைவி யின் சட்ட ரீதியான உரிமைகள் பற்றியும், தாயாரின் விட்டுக் கொடுப்பு பற்றியும், பெற்றோரிடமிருந்து பிள்ளைகள் பிரிந்து செல்ல வேண்டியது உலக இயல்பு என்பதையும் எடுத்துச் சொன்னார். ஆனால் எந்தப் பேச்சும் சரஸ்வதியிடம் எடுபட வில்லை. மருமகள் வீட்டை விட்டு வெளியே போக வேண்டும் என்பதில் மட்டுமின்றி, அவள் தன் கண்களிலேயே படக் கூடாது என்பதிலும் வெகு உறுதியாக நிற்பதைக் கண்டு, அந்த சட்டத்தரணி ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றாள்.

தம்பதியினரை மீண்டும் அழைத்துப் பேசியபோது, விவாகரத்து என்ற முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்றனர். ஆனால் அவர்கள் இருவருமே ஒருவரை ஒருவர் உளமாற விரும்புவதை நன்கு புரிந்து கொண்ட சட்டத்தரணி, மீண்டும் ஒரு தடவை விடுதிக்குச் சென்று, சரஸ்வதியைச் சந்தித்துப் பேசினார். சரஸ்வதி தன் முடிவை மாற்றிக்கொள்வதாக இல்லை. எனினும் வாழ வேண்டிய இருவரின் வாழ்க்கையை சீரழிக்க வேண்டாம் எனவும், பேரன், பேத்திகளை காணும் பாக்கியத்தை இழக்க வேண்டாம் எனவும் கூறிய அந்த மனிதாபிமானம் கொண்ட சட்டத்தரணி, விவாகரத்து தொடர்பான விசாரணை நடைபெறவிருக்கும் தினத்தைக் குறிப்பிட்டு, அன்றைய தினமாவது நீதிமன்றத்துக்கு வரும்படி சொல்லித் திரும்பினார்.

நீதிமன்றம் கூடுவதற்கு முன்னரேயே மேனகாவும், சங்கரும் வந்து விட்டார்கள். கொஞ்ச நேரத்தில் சரஸ்வதி அம்மாளும் வந்து, ஒரு பக்கமாக நின்று கொண்டாள். அப்போது அவள் அருகே சென்ற மேனகா, மெல்லிய, பணிவான குரலில் "அத்தை, இப்போதா வந்தீங்க..?" என்று கேட்டாள்.

நீதிமன்ற வளவில் ஏதேனும் நடந்து விடப் போகிறது என்று நினைத்த சட்டத்தரணி, அங்கே விரைவாகச் சென்றார். ஆனால், அசல் திரைப்பட உச்ச கட்ட காட்சியைப் போல, அங்கே காட்சிகள் மாறிக்கொண்டிருந்தன.

அனேகமாக, சட்டத்தரணி இரண்டு தடவைகள் கூறி வைத்த அறிவுரைகள், அவருள் மனப் போராட்டத்தைத் தோற்றுவித்திருக்கலாம். பிள்ளைப் பாசத்துக்கு அப்பால், முதியோர் இல்லத்தில் கேட்ட கதைகளும், அவர் மனப் பிடிவாத்தில் தளர்ச்சியை ஏற்படுத்தியிருக்கலாம்.. தான் பார்க்கவும் விரும்பாத ஒருவர், தன்னிடம் வந்து கனிவாக "மாமி இப்போதா வந்தீங்க..?" என்று கேட்டது, கடைசி சம்மட்டி அடியாக அந்த மன இறுக்கத்தில் விழுந்து உடைந்திருக்க வேண்டும்.

மேனகா அப்படி விசாரித்ததுமே, எதிர்பாராத விதமாக தன் மருமகளை கட்டிப் பிடித்து, "நல்லாயிருக்கேம்மா.." என்றபடி அழத் தொடங்கிவிட்டார் சரஸ்வதி அம்மாள்.

இன்ப அதிர்ச்சிக்குள்ளான சட்டத் தரணி, வழக்கை வாபஸ் பெற்றார்.

மேனகா இப்போது அதே வீட்டில் காலையில் எழுந்து மாமிக்கும், கணவனுக்கும் சுடச் சுட கோப்பி தயாரிக்கிறாள். இப்போது உண்டாகியும் இருக்கிறாள்.

- கணேஷ்

## வாடா மலர்



அசோகன்

கதாநாயகனாக அறிமுகமாகி வில்லனாக திகழ்ந்து மறைந்த அசோகனை எம்.ஜி.ஆர் ரசிகர்கள் மறந்திருக்கமாட்டார்கள். எம்.ஜி.ஆர் படங்களில் நம்பியார், அசோகன், மனோகர், ஓ.ஏ.கே.தேவர் என வில்லன் நடிகர்களும் நடித்திருந்தால் ரசிகர்களுக்கு கொண்டாட்டம் தான். 'நான்' படத்தில் மொட்டைத்தலையனாக அசோகன் ஏற்றிருந்த பாத்திரமும் அவரது வான உச்சரிப்பும் அவரை புகழின் உச்சிக்கே கொண்டு சென்றது. வில்லனாகத் தோன்றினாலும் நல்ல மனிதராக பெயரெடுத்த மறக்க முடியாக நடிகர்.

## தங்கமே தங்கம்

**முத்து நகைகளை தண்ணீரிலேயே அமிழ்த்திக்கழுவினால் அதன் மீது வாசனைத்திரவியங்கள் பட்டால் முத்து ஒளி இழக்கும் என்கிறார்களே, உண்மையா..?**

முத்து இயற்கையாகவே கிடைக்கிற பொருள் என்பதால் அது கடினத்தன்மை பெற்றிருக்காது. அதனால் முத்தின் மீது வாசனை திரவியங்களோ, டால்கம் பவுடரோ படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். முத்து நகையை அணிந்துகொண்டு மேக்கப் போடக்கூடாது. அப்படிச்செய்தால் நறுமண பொருட்களில் உள்ள இரசாயனங்கள் படுவதால், முத்தின் பளபளப்பு மங்கி விடும். முத்து நகையை தண்ணீரில் கழுவினாலும் அது ஒளியிழக்கும்.



மனைவி : வேலை செய்யும்போது இடுப்பை கிள்ளாதீங்கண்ணு எத்தினை தடவை சொல்றது..?

வேலைக்காரி : நல்லா சொல்லுங்கம்மா..! நானும் சொல்லி சொல்லி அலுத்துப்போயிட்டேன்..!

- வை.பிரபு, பொகவந்தலாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளைச்சல்

**ஆரையம்பதி ஆ.தங்கராசா**

மார்கழி மாதத்து அடைமழை அட்டகாசமாக பெய்து ஊரெங்கும் வெள்ளத்தை பரவ விட்டது. குளங்கள், குட்டைகள், ஓடைகள், வாய்க்கால்கள், உப்புக்கரைச்சைகள், தரிசு நிலங்கள் என்று மழை வெள்ளத்தை கருக்கொள்ளவைத்த காட்டு வெள்ளம் மட்டக்களப்பு வாவியை ஆக்கிரமித்தது. இது வாவியை நிறைமாதக் கர்ப்பிணியின் நிலைக்குத் தள்ளிவிட, அடைபட்ட முகத்துவாரமும் வெட்டப்படாத காரணத்தினால் ஆற்று மங்கை வெள்ளத்தால் பொங்கித் ததும்ப, கடலிலிருந்து ஆற்றுக்கு வரும் மீன்களின் வருகை அற்றுப்போனது. இதனால் அன்றாடம் வலைகளைப்போட்டு மீன்களைப்பிடித்து ஜீவியம் நடத்தும் ஏழை மீனவர் குடும்பங்கள் கஷ்டத்தில் தவிக்க வேண்டிய பரிதாபம் எல்லை மீறுகிறது. அவர்கள் வீட்டு அடுப்புப்பற்றாத காரணத்தினால் அவர்களது பிஞ்சுக்குழந்தைகள் பசிபசி என ஓலமிட ஆரம்பித்தன. அன்றாட மீன்பிடித்தொழிலாளியான சுப்புறு தவியாய்த்தவித்தான். குடும்ப நிலையை பார்க்கும்பொழுது அவனால் திண்ணையில் ஓரமாகக் குந்திக்கொண்டிருக்க முடியவில்லை. பேய் மழை ஓய்ந்து தூறல் போடும் நேரம். தலையிலே சாறளை மொக்காடாக போட்டவாறு அவனது மீன்பிடிக்கூட்டாளி பூவாலியின் வீட்டை நோக்கி போகிறான். பூவாலியும், ஆறுகுமர் பிள்ளைகளோடு, குஞ்சும் குராலுமாக பத்து பிள்ளைகளின் தகப்பன். இதுவரைக்கும் சொந்த வீடு வளவுமில்லை. பணக்கார தானாச்சீனா போடியாரின் கந்தட்டி வளவுக்குள் ஒரு சிறிய ஓலைக்குடிசையில் அத்தனை பரிவாரங்களோடும் ஊசி முனையிலே தவம் செய்யும் கஷ்ட வாழ்வு நடத்தும் குசேலன் பூவாலியும் வீட்டில் படும் பசிக்கொடுமையால் இருக்க முடியாமல், குழந்தை பெறத்துடிக்கும் பெண்ணின் அந்திம நிலையோடு சுப்புறைப்பார்த்து மீன்பிடிக்க ஆத்துக்கு போய்ப்பார்ப்போமென்ற அவஸ்தையால் மூலையில் கிழிந்துபோய்க் கிடந்த மழைக்குத் தலைக்குப்பிடிக்கும் ஓலையால் செய்த சாப்பையை தலைக்கு பிடித்தவாறு வந்து கொண்டிருக்கும்போது, சுப்புறுவை இடை வழியிலே காணுகிறான்.

''என்னடா கூட்டாளி, மழையும் விடுற பாடில்லை. புள்ளைகள் பசியால துடிக்குதுகள். வெள்ளத்தில் மாய வலக்காறனுகளால தப்பிச்சுக்கிடந்த சின்னஞ்சிறுசுகளும் உப்புக்கரைச்சை கண்ணாக்காட்டுக்குள்ள ஓடி ஒளிஞ்சு கிக்கும். ஏதும் கெழுத்திக்குஞ்சும் சின்னஞ்சிறு திரளிகளும் படுமா எண்டு ஆத்துக்குப்போய் பாப்போமா?

பூவாலி ரெண்டு, மூனு நாள் ஒழுங்கான சாப்பாடு இல்லாத காரணத்தினால் மெலிந்த குரலில் விக்கி விக்கி கூற,

''ஓண்டா பூவாலி, ஆத்துக்கு போய் பாப்போமெண்டுதான் உன்ன நான் தேடி வாறன் " என்று சுப்புறு தொண்டைக்குள் அடைபட்டுக்கிடந்த வார்த்தைகளை சிதற விட, ''சரி சரி.. என்ன நடந்தாலும் நடக்கட்டும். ஓயாத மழையைப்பாத்து என்ன செயிற புள்ளயள் அனியாயமாக பசியால செத்துப்போயிடுங்கள். தம்பிப்புள்ள அண்ணன்ட தோணியக்கேட்டுப்பாரு. அவரு மறுத்தா சோமண்ணன்ட தோணியக்கேழு தருவாரு. நான் ஊட்ட போய் வீச்சு வலைய எடுத்தித்து வாறன்" சுப்புறு வார்த்தைகளை அள்ளி வீசியவாறு வேக வேகமாக போய்க்கொண்டிருக்கிறான்.

சோமண்ணனிடம் தோணிய வாடகைக்கு வாங்கிக்கொண்டு ஆத்தங்கரையில கிடந்த தோணிக்கு 'கொல்லாவை' பூவாலி கட்டும் பொழுது சுப்புறு வலையும், தண்ணி இறைக்கும் சிரட்டையுமாக வந்து சேர்ந்தான். மழைத்தூறலையும் பார்க்காமல் ஆற்றில் தோணியைத்தள்ளியவாறு புறகத்திலே சுப்புறு இருக்க, வீச்சுக்காறனான பூவாலி அணியத்திலே இருந்து கொண்டு விரிச்சலை நோக்கி தோணியை தொடுத்துக்கொண்டு போகிறார்கள். ஆற்று வெள்ளம் ததும்பிக்காற்றிலே சிதறு துண்டு தாவித்தாவி நிதானம் தப்பி நடக்கும் குழந்தை போல் ஓடிக்கொண்டிருக்கிறது. லேசான வாடைக்காற்று தோணியை மெதுவாக ஆட்டி அசைக்க, அதற்கேற்ற வகையிலே ஆற்றிலே சவளைப்போட்டுத்தொடுத்தவாறு போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆற்று வெள்ளத்திலே மீன்சாதிகள் கண்ணாக்காட்டுப்பக்கம் ஓடிப்போனதால் மீன்கள் துள்ளும், பாயும் அசுப்பே கண்களுக்கு புலப்படவில்லை. ''விரிச்சலை அண்டியதும் சுப்புறு புறகத்தில் இருந்து தோணியை மெதுவாகத்தொடுக்க கூதலும் குளிருமான விறைப்புத் தன்மையோடு தூற்றல் மழையிலே எழுந்து ஒடுங்கியவாறு போகடுபோக்காக ஆற்றிலே வலையை வீசுகிறான் பூவாலி. பின்னர் மெதுமெதுவாக வீசிய வலையை இழுத்து கையிலே தூக்குகிறான் பூவாலி. தூக்கியவன் வலையை உற்றுப் பார்க்கிறான். ஒரு மச்சக்குஞ்சும் வலையல் சிக்கவில்லை. மீன்களை சபித்தவாறே தோணிக்குள் நின்றவாறு மீண்டும் மீண்டும் நாலைந்து முறை ஆற்றிலே வலையை வீசிப்பார்ககிறான். ''சீ.. என்ன தரித்திரியம் சுப்புறு இது. ஒரு அதக்கக்குஞ்சு கூடப்படுதில்லையே.." என்று சத்தம் போட்டு மனப்புகைச்சலை வெளிக்காட்டியவாறு ஆற்றை நோக்கி காறித்துப்புகிறான்.

மெதுமெதுவாக தோணியை தொடுத்தவாறு மீன்கள் அதிகம் காணப்படும் கெழுத்தி முனைப்பக்கம் போகிறார்கள். பலமான காற்றோடு மழை ஆர்ப்பாட்டமாக பெய்யத்தொடங்குகிறது. காற்றின் அசைவுக்கு தோணி ஊஞ்சலாக ஆட வெள்ள நீர் தோணிக்குள் கிசுகிசென்று ஏறுகிறது. இக்கட்டான இந்தச்சம்பவத்தினால் சுப்புறும், பூவாலியும் உண்மையிலேயே பேய் அறைந்தவர்கள் போலாகி பயந்தே போய்விட்டார்கள். தோணிச்சிரட்டையால் மூசுமூசென்று தோணிக்குள் ஏறிய வெள்ள நீரை சுப்புறு ஆற்றிலே இறைக்கிறான். ஒரு பாடாக காற்று ஓய மழையும் நின்று விடுகிறது. ஆனால் வானம் மப்பும் மந்தாரமுமாக கறும் குறுமென்று கிடப்பதால் ஒரே இருட்டுக்காடாக ஆறு கண்களுக்கு புலப்படுகிறது.

பூவாலி கொஞ்சம் மனத்துணிச்சலோடு வலையை வீசுகிறான். என்ன போதாக்காலமோ யார் அறிவார்கள்.. அந்த மீன்சாதி தாராளமாக புழங்கும் கெழுத்தி முனை ஆற்றிலும் மீன்கள் இல்லாமல் மாயமாக மறைந்துவிட்டிருந்தன. ஒரு கெழுத்திக்குஞ்சு கூடப்படவில்லை.

''என்னடா கூட்டாளி சுப்புறு, மீன் புழங்கும் கெழுத்தி முனையிலும் இந்தக்கெதி என்டா, எப்படியிரா ஆளே நாம ஜீவிக்கிற? அந்த நாசமத்துப்பொன வலைக்கட்டி மீன்பிடிக்க தெரியாத மாய வலைக்காரனுகள் இருக்க மட்டும் ஆத்தில மீனும் இருக்காது, நமக்கு புழைப்பும் இல்ல. நம்மிட குடும்பங்கள் இந்த ஆத்த நம்பித்தானே ஜீவிக்குதுகள். அதுக்கும் நாசம் வைக்கிறானுகளே இந்த நாய்கள்!. இவனுகளால உண்மையான மீன் புடிகாறனுகள் புழைப்பில்லாமச்சாக வேண்டியநில ஏற்படுதே. இந்த நாசகாறனுகளுக்கு மீன் இனம் பெருக விடாம அப்படியே வடிச்செடுக்கிற கேவலம் கெட்டவனுகளுக்கு இடி ஏறு விழுந்து பொசுக்கக்கூடாதா? லேசாக்காசக்குடுத்து ஜப்பான்காரன் அனுப்பி வைக்கிற மாய வலைகளை வாங்கி ஆத்து மீன் கருவ அப்படியே சூறையாடிப்போட்டானுகளே. பரம்பரை பரம்பரையாக நம்மிட கைகளால வலைகள முடிச்சு மீன் புடிக்கிற தொழிலுக்கல்லவா நஞ்சு வைக்கிறானுகள்..."

மனதிலே நிறைந்து கருக்கட்டிக்கிடந்த உள்ளக்குமுறல்களை ஆவேசமாக உதறிவிடுகிறான் பூவாலி.

''பூவாலி நீ சொல்றது நூத்துக்கு சரிதாண்டா கூட்டாளி. இந்தச்சோத்துக்குள்ள நஞ்சு வைக்கிற மாய வலக்காறனுகள இந்த அரசாங்கம் பாத்தும் பாக்காதுபோல விட்டு வெச்சிருக்கே. அரசாங்கம் முறையாக நடவடிக்கை எடுத்து இந்த மாயவலைக்காறனுகள புடிச்சி கூட்டுக்குள்ள போட்டா தான் ஏழ பாளையாக இருக்கிற நம்மளப்போன்ற மீன்புடிகாறனுகள்ற ஊட்டில அடுப்பு எரியும்" என்றான் ஆத்துப்புழைப்பின் அனுபவசாலி சுப்புறு.

ஆற்றிலே மீண்டும் மீண்டும் வலையை வீசிப்பார்க்கிறான் பூவாலி. ஆனால் வலையிலே ஒரு கெழுத்திக்குஞ்சு கூட கொழுவவில்லை. ''யாருல முழிச்சு வந்தோமோ தெரியல்லையே. இப்படியும் நடக்குமா? ஒரு காலமும் இப்படி நடந்தது கிடையாதே! சோமண்ணன்ட வாடக தோணிக்காசுக்கு என்ன செய்யிற. மீன் ஒண்டும் படல்ல எண்டு அவரிட்ட சொன்னா அவர் சிரிக்கமாட்டாரா? அவரிர தோணிக்காசுக்கு எவள்ற தாலிய வித்துக்குடுக்கிற. அட கடவுளே! புள்ளையல் பசியால மாயுதுகள். பொண்டாட்டி மார் ஆத்துக்குப்போன புருஷன்மார் காசோடையும் கறி ஆக்க மீனோடும் வருவாங்க எண்டு கண்ணில எண்ணெய்ய விட்டுத்து வழிபாத்து கிடப்பாளுகள். இப்படி வெறுங்கையோடு போனா.. அட சாமிமாரே! இப்படித் தவிக்கிறத்தப்பாக்க வெள்ளத்துக்குள்ள தாட்டுக்கொண்டு போட்டாத் தேவல்ல" வலைய வீசிக்கொண்டிருந்த பூவாலி, மனதிலே எதையோவெல்லாம் நினைத்தவாறு சிலைபோல் ஆற்றை வெறித்துப்பார்த்து நிற்கிறான்.

பூவாலியும், சுப்புறும் கைதேர்ந்த ஆத்துப்புழைப்பாளிகள். சின்ன வயதிலே ஆற்றங்கரையை மூடிக்கிடக்கும் பெரும் சல்லுக்குவியலுக்குள் இனப்பெருக்கம் செய்து விருத்தியாகிக்கிடக்கும் இறால் கூனிகளையும் பெரிய இறால்களயும் தென்னை ஓலைகளால் கட்டி மட்டக்களப்பு வாவிக்குள் ஜீவியம் நடத்தியவர்கள். படிப்படியாக வாலிபர்களாக வளர்ந்த நேரத்தில் ஆற்றிலே காலத்துக்கு காலம் பாவிக்கும் வலை இனங்களை தங்களது கைகளால் சணல்பஞ்சின் மூலம் எடுத்து திரித்தெடுக்க சணல் நூல்களை கொண்டு முடித்தெடுத்த வலைகளைக்கொண்டு விதம் விதமான மீன் இனங்களை பிடித்து வலைத்தொழிலுக்கு பெருமை சேர்த்தவர்கள் பூவாலியும், சுப்புறுவும்.


மார்கழி மாதத்தில் தடிப்பான சணல் நூல்களை கொண்டு கைதேர்ந்த வலை முடிப்பவர்களால் முடித்தெடுத்த பெரும் வலைகளை கொண்டு, கடலிலிருந்து முகத்துவாரத்தை தாண்டி கல்லடிப்பாலத்தையும் வெள்ளைக்கல்லையும் அண்டிய பகுதிகளையும் நோக்கி மார்கழி மாதங்களில் குட்டி போட வரும் பெரிய தாய்ச்சுறா மீன்களின் குட்டிகளையும் பெரிய சுறாக்களையும் பிடித்த அந்த இனிய காலம் மழை மாதமான மார்கழி மாதங்களில் அவர்கள் நெஞ்சில் கூத்தாடிய இனிய நாட்களாகும். சித்திரை வைகாசி மாதங்களில் பாலமீனுக்குப்போய் பெரிய பெரிய பால மீன்களை தோணி வழிய பிடித்துக்கொண்டு வந்து காத்தான் குடி பணக்கார முஸ்லிம் முதலாளி மார்களுக்கு தகுந்த விலைகளுக்கு விற்று சீரும் சிறப்புமாக வாழ்ந்த பொற்காலத்தை அவர்கள் ஒருபோதும் மறந்தது கிடையாது. ஊரிலே சிறந்த உழைப்பாளிகளான இவர்களுக்கு எத்தனையோ நல்ல இடங்களில் வீடு, பணம், நகைகள் என்று கேட்டுவந்தபோதும் வாழ முடியமல் தவித்த ஏழைப்பெண்களை கை ஏந்தி அவர்களுக்கு புதுவாழ்க்கை கொடுத்தவர்கள் தான் பூவாலியும், சுப்புறும். கட்டிய பெண்கள் கண் கலங்காமல் சிறப்பாக வாழ்வதற்கு இந்தப்பாடும் மீன் வாவியின் மீன் பிடி உழைப்புத்தான் கைகொடுத்தது. எனினும் மலிந்த இக்காலத்தில் பழைய உழைப்பின் மகிமைகளை இழந்து கலாசார சீரழிவுக்குள் மாட்டுப்பட்டு, வாழையடி வாழையான பமைப்பரை தொழிலின் தனித்துவத்தை இழந்து சுயமாக வலை பின்னி சுதந்திரமாக தொழில் செய்து வாழ்ந்த ஆற்றுத்தொழிலில் நவீன யுகத்தில் உருவாக்கப்பட்ட புதிய வலைகளைக்கொண்டு ஆற்றுத்தொழிலை நாசம் செய்யும் காலத்துக்கு அவர்களும் இப்போது வந்திருக்கிறார்கள்.

பூவாலியும் சுப்புறும் விரிச்சல் ஆற்றிலே தோணியை நிறுத்திவிட்டு சோகம் ததும்பி வழியும் முகத்தோடு அவர்கள் மாறி மாறி தங்களை பார்த்தவாறு மௌனமாக இருந்த சமயத்தில் லேசான மழை பெய்ய ஆரம்பித்தது. ''பூவாலி நம்மிட போதாக்காலத்துக்கு விட்டிருந்த மழையும், திரும்ப வந்திற்றடா. நாம வெறும் கைகளோட போனா பொஞ்சாதிமார்ர முகத்தில எப்படியிரா முழிக்கிற? பசியால துடிக்கிற புள்ளைகளுக்கு என்ன ஆறுதல் வார்த்தை கூறி பசியைப்போக்க வைக்கிற? எனக்கு பையித்தியமே பிடிக்கும்போல் இருக்கிடா கூட்டாளி. கடசியாக இந்த விரிச்சல் ஆத்தில ஒரு தரம் வீசிப்பாப்போம்" என்று மௌன இருளைக்கலைத்தவாறு சுப்புறு பூவாலியைப்பார்த்து வினயமாகக்கூறினான், ''சரி, நீ சொல்றபடியா ஒரு தரம் வரைல வீசிப்பார்ப்போம்" என்றபடியே தமது குலதெய்வமான பரம நயினாரை நினைத்தவாறு பூவாலி ஆத்திலே வலையை வீசுறான்.

எந்தவிதமான மீன் அசுமாத்தத்தையும் ஆற்றிலே காணோம். சுப்புறு தோணிய அசைய விடாமல் தடுத்து நிக்க, பூவாலி வீசிய வலையை பக்குவமாக மெதுமெதுவாக இழுக்கிறான். இழுக்கும்போது ஏதோ வலையிலே பட்டுக்கிடப்பது போலத்தெரிகிறது.

''பரமப்பெத்தப்பா நீதான் எங்களுக்கு துணை" என்று சத்தமாக கூறிய பூவாலி, பவித்திரமாக வலையைத் தூக்கி தோணிக்குள் வைக்கிறான். என்ன அதிசயம்..! அவனுக்கு சொல்லொண்ணாத குதுகலம். தன்னை அறியாமலே பெரும்சிரிப்பாக சிரித்தவாறு வலையிலே பட்டுக்கிடந்த பெரிய நண்டை நுணுக்கமாக பிடித்து சீலைத்துண்டால் கட்டி சாக்குப்பைக்குள் போடுகிறான். பின்பு வெறும் நப்பாசையால் ரெண்டு மூனு தரம் ஆத்தில வீசிப்பாத்தான் ஒரு மச்சமும்படக்காணோம்.

''சரி சுப்புறு, கடவுள் நமக்கு படி அளந்திற்றாரு. நாம பட்ட வேதனைக்கு இந்த நண்ட தந்திருக்காரு. ஒரு கிலோவுக்கு குறையாமல் இந்த நண்டு இருக்கும். நண்டு யாபாரிக்கு குறைஞ்சது ஆயிரத்துக்கு குடுக்கலாம். சரி, விரைவாகச் சவளை போடு. நானும் தொடுக்கன் என்று முகமலர்ச்சியோடு பூவாலி கூறியதுதான் தாமதம். தோணியை சுப்புறு விரைவாக தொடுக்க, பட்ட கஷ்ரத்துக்கு கிடைத்த பயனை அறுவடை செய்ய தோணி ஊர்க்கரையை நோக்கித் தாவிச் செல்லுகிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்றும் இன்றும்

மணி ஸ்ரீகாந்தன்





நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கண்டி - கொழும்பு வீதி எவ்வாறு காட்சியளித்தது என்பதையும் இன்று எவ்வாறு பரபரப்பான வீதியாக மாறியுள்ளது என்பதையும் இப்படங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

படப்பிடிப்பு: ஆர். மகேஸ்வரன்

# இலவச 'அடல்ஸ் ஒன்லி' பார்த்த மைனர் பாஸ்



## மரண விசாரணை மன்றில் கேட்ட கதைகள்

*எழுபதுகள் முதல் கொழும்பு திடீர் மரண விசாரணை மன்றுக்கு பத்திரிகையாளராக சென்று செய்தி சேகரித்துவரும் கட்டுரையாளர் தனக்கு தெரியவந்த உண்மைச் சம்பவங்களை இங்கே உங்களுடன் சுவை பட பகிர்ந்து கொள்கிறார்.*

அந்த வீட்டுக்காரார் நல்ல வசதியானவர். வீட்டின் பின்னால் இரண்டு அறைகளுடன் இருந்த 'அனெக்ஸ்' வீணாக பூட்டிக் கிடப்பதை விட யாருக்காவது கூலிக்கு கொடுத்தால் பிரயோஜனமாக இருக்குமே என்று நினைத்தார்.

கூலிக்கு வருபவர்கள் நம்மோடு ஒத்துப்போவதாக இருந்தால் பிரச்சினையில்லை. அதற்கு மாறாக இருந்தால் வீண் வம்பை விலைக்கு வாங்கியதை போலாகிவிடும். அதைவிட படிக்கும் பெண் பிள்ளைகளுக்கு கொடுத்தால் கூலிக்கு கூலியும் ஆகும். நமக்கு புண்ணியமும் ஆகும் என்று அவரது மனைவி கூறியதையும் யோசித்துப்பார்த்ததில் அதுதான் சரியெனபட்டது.

அவரது நண்பர்கள் சிபாரிசு செய்த பல்கலைக்கழக மாணவியர் நால்வருக்கு அந்த அறைகளை கூலிக்குக் கொடுத்தார். குறிப்பிட்ட அந்த மாணவியர் நால்வரும் வீட்டாருடன் நன்றாக பழகினார்கள். அவர்களுக்கான இரவு உணவையும் வீட்டாரே வழங்கினர்.

இந்த வீட்டக்கு அடுத்து இருந்தது ஒரு சிறிய பழைய வீடு. வீடு கட்டும் பாஸ்மார் சிலர் அந்த வீட்டில் தற்காலிகமாக தங்கியிருந்தனர்.

அவர்களில் ஒருவர் நடுத்தர வயதானவர். ஆனால் ஒரு முசுப்பாத்துப் பேர்வழி. அந்தி நேரத்தில் சில்க் சேர்ட்டும் வெள்ளை டிரவுசரும் கையில் சிகரட்டுமாகத்தான் திரிவார். கிட்டத்தட்ட ஐம்பது வயதிருக்கும். ஆனால் தன்னை இளைஞராகத்தான் நினைத்துக் கொள்வார்.

அடுத்த வீட்டு அனெக்ஸ் கொஞ்ச காலமாகவே பூட்டிக்கிடந்தது. அங்கிருந்து ஏதோ பெண்கள் குரல் கேட்கிறதே என்று யோசித்தார் அந்த மைனர் பேர்வழி. நமது ஆட்கள் தூங்கட்டும், பிறகு பார்ப்போம் என்று எண்ணிக்கொண்டார்.

சாதாரணமாகவே அங்கு இருந்த நான்கு பாஸ்மாரும் இரவு 9 மணிக்கு தூங்கிவிடுவார்கள். அன்றும் அதே போல் தூங்கியதும் மைனர் பாஸ் மட்டும் கொட்டு கொட்டென்று விழித்திருந்தார்.

மற்றைய மூவரும் நன்றாக தூங்கியதை உறுதிப்படுத்திக்கொண்டதும் தயாராக வைத்திருந்த ஏணியை முன் வீட்டு சுவரில் சாத்திவிட்டு மேலே ஏறி பார்த்தார்.

அவரது கண்களையே அவரால் நம்பமுடியவில்லை.

மேலே இருந்து திறந்திருந்த ஜன்னல் வழியே அவரது பார்வை உள்ளே சென்றது.

குறைந்த வோல்ட் பல்ப் (இரவு பல்ப்) வெளிச்சத்தில் அறைக்குள் இரண்டு இளம் பெண்கள் படுத்திருந்தனர்.

அந்தக்காட்சியை சுமார் அரை மணி நேரம் அள்ளிப்பருகிய பின்னர் தான் அவர் கீழே இறங்கினார். அதற்குப்பிறகு நேரம் கிடைக்கும் போதெல்லாம் அந்தக்காட்சியை பார்ப்பது அவருக்கு வாடிக்கையாகிவிட்டது. ஆனால் தனது நண்பர்களிடம் வாயே திறக்கவில்லை.

ஒரு நாள் இரவு எதேச்சையாக மேலே பார்த்த பல்கலைக்கழ்க மாணவி ஒருவர், சுவற்றுக்கு மேல் அப்பால் இருந்து ஒருவர் தங்கள் அறையை நோட்டம் விடுவதை கண்டிருக்கிறார். ஒருவருக்கும் தெரியாமல் ரகசியமாக வீட்டுக்காராரிடம் அது பற்றி சொல்லிவிட்டார்.

வீட்டுக்காரருக்கு அடுத்த வீட்டு மைனர் பாஸ் பற்றி ஏற்கனவே தெரிந்து தான் இருந்தது. இப்போது அது ஊர்ஜிதமாகியது. இந்த விடயம் வெளியில் கசியவும் கூடாது. ஆனால் ஏதாவது செய்யவும் வேண்டும்.

அடுத்த வீட்டுடன் இருந்த மதிலை மேலும் 5 அடி உயர்த்திக்கட்டி விட்டார்.

ஆடிப்போய்விட்டார் மைனர் பாஸ். கிழமைக்கு ஒரு தடவைக்கு கிடைத்த இலவச காட்சி இல்லாமல் போய்விட்டதே என்று மிகுந்த வருத்தம் ஏற்பட்டது.

இப்போது மதிலை உயர்த்திக்கட்டி விட்டார்களே என்ன செய்வது?

தான் எட்டிப்பார்த்து அனுபவித்த இன்பத்தை பற்றி அவர்களுக்கு தெரிந்திருக்குமோ? அல்லது எதேச்சையாகத்தான் மதிலை உயர்த்திக்கட்டினர்களோ?

ஒரு வாரம் இதே யோசனைதான்.

அவர் ஏற்கனவே பார்த்த காட்சிகள் மனத் திரையில் ஓட ஓட அவரால் தாங்கமுடிய வில்லை. மீண்டும் அந்த காட்சிகளை கண்கள் கேட்டன. மனது சும்மாயிருக்குமா?

காட்டேன், காட்டேன் என்று அவரை பிடுங்கித்தின்றது.

யோசித்தார். ஐடியா பிறந்தது.

ஏணியை உயர்த்திவிட்டார். மதில் உயரத்தை அது தொட்டது. முன்னர் பார்த்த காட்சியை அவர் மீண்டும் பார்க்க முடிந்தது.

ஒரு மாதத்துக்கு மேல் சென்றிருக்கும்.

ஏற்கனவே அனுபவப்பட்ட மாணவி கவனித்ததில் மைனர் பாஸ் மீண்டும் பழைய விளையாட்டில் இறங்கியிருப்பது தெரிந்தது. வீட்டுக்காரரிடம் தகவல் கூறப்பட்டது.

சொல்லித்தெரிவதில்லை இந்த மைனர் பயலுக்கு ஏதாவது செய்தால் தான் சரி என்ற யோசனையுடன் தெரிந்த ஒருவரிடம் ஆலோசனை கேட்டார்.

இவர் ஆலோசனை கேட்டவர் ஒரு முன்னாள் பொலிஸ் அதிகாரி. அவர் கூறிய ஆலோசனை கொஞ்சம் பாரதூரமாகத்தான் இருந்தது. ஆனால் அதுதான் சரியெனப் பட்டது வீட்டுக்காரருக்கு. உடனே அதனை செயல்படுத்திவிட்டார்.

அந்த செயல்பாடு இவ்வளவு பாரதூரமாக இருந்திருக்கும் என்று அவர் நினைத்திருக்கவில்லை. நினைத்திருந்தால் அதை செய்திருக்கவும் மாட்டார்.

திட்டத்தை செயல்படுத்திய மறுநாள், இரவு பத்து மணியளவில்...

தடார் என்று ஒரு சத்தம்..

தூங்கிக்கொண்டிருந்த பாஸ்மார் வெளியே ஓடிவந்து பார்த்தனர்.

மைனர் பாஸ் விழுந்து கிடந்தார். லேசாக மூச்சு இருந்தது. தூக்கிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினர். இடையிலேயே அவரது உயிர் பிரிந்தது.

பாஸ் ஏன் வெளியே வந்தார்? இரவு நேரத்தில் வெளியே வந்த அவரை ஏதாவது பேய் அல்லது கெட்ட ஆவி தான் அடித்துத்தான் கொன்றிருக்க வேண்டும். ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் செல்லும்போது கூட அவரிடம் பேசி எதையும் தெரிந்துகொள்ள முடியாமல் போய்விட்டதென அவர்கள் பெரிதும் ஆதங்கப்பட்டனர்.

உண்மையில் நடந்தது என்ன தெரியுமா?

மதிலின் மேல் ஓரங்களில் ஒரு வயரை தொங்க வைத்து அதில் மின்சாரத்தை பாய்ச்சிவிடுங்கள் என்பதுதான் வீட்டுக்காராரின் போலிஸ்கார நண்பர் கூறிய யோசனை.

அந்த வயரில் ஏதோ ஒரு மின் கசிவு ஏற்பட்டிருக்கிறது. அன்று பெய்த தூறல் மழையில் மதிலும் நனைந்திருந்ததால் மைனர் பாஸ் மதிலை தொட்டதுமே அவர் மீது மின்சாரம் பாய்ந்திருக்கிறது. அந்த அதிர்ச்சி யில் ஏணியில் இருந்து விழுந்ததாலேயே மைனர் பாஸ் உயிரிழந்திருக்கிறார்.

மைனர் பாஸ் விழுந்ததை அறிந்த வீட்டுக்காரார் நன்றாக பயந்து விட்டார். உடனடியாக மேலே சென்று வயருக்கு கொடுத்திருந்த மின்சார இணைப்பை நிறுத்திவிட்டு வயரையும் அப்புறப்படுத்திவிட்டார்.

மைனர் பாஸ் ஏன் இறந்தார் என்று வீட்டுக்காரருக்கும் அவரது பொலிஸ்கார நண்பருக்கும் மாத்திரமே தெரியும்.

பேய் அடித்து இறந்தார் என்று தான் எல்லோரும் நம்பினர்.

வீட்டுக்காரர் கீழே இருந்த ஏணியையும் சரியான நேரத்தில் அப்புறப்படுத்தியிருந்ததால் மைனர் பாஸ் எதையோ பார்த்த அதிர்ச்சியில் ஏற்பட்ட மரணம் என்று தான் பொலிஸிலும் மரண விசாரணை அறிக்கையிலும் எழுதப்பட்டது.

ஏ. மதுரை வீரன்


வண்ண வானவில்

*விளம்பரக் கட்டணங்கள்*

| | |
|---|---|
| முழுப்பக்கம் (கறுப்பு வெள்ளை) | - ரூ 25,000.00 |
| கறுப்பு மற்றும் ஒரு கலர் | - ரூ 28,000.00 |
| கறுப்பு மற்றும் இரண்டு கலர் | - ரூ 30,000.00 |
| முழு வர்ணப் பக்கம் | - ரூ 32,000.00 |

**சாதாரண விளம்பரங்கள்**

| | |
|---|---|
| கறுப்பு வெள்ளை | - ரூ 125.00 கலம் செ.மீ |
| கறுப்பு மற்றும் ஒரு கலர் | - ரூ 140.00 கலம் செ.மீ |
| கறுப்பு இரண்டு கலர் | - ரூ 150.00 கலம் செ.மீ |
| முழு வர்ணம் | - ரூ 160.00 கலம் செ.மீ |

12% வட் வரி சேர்க்கப்படும்.

தொடர்பு கொள்க : 0112429367
ப(f)க்ஸ் : 0112429320




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் இளமை








கமலுக்கு நடிப்பு சொல்லித் தருபவர் பாலசந்தர். அருகே சரிதா







விஜயகாந்துடன் ராதிகா, அருகே டைரக்டர்

## கோப்பிக்காலத்தில்...

# முதல் தேயிலை ஏற்றுமதி: 23 இறாத்தல்



இலங்கையில் கோப்பித்தோட்டங்களை இலை நோய் 1869 இல் தாக்கத்தொடங்கியது. இந்நோய்க்கு எதிராக பல நடவடிக்கைகளை மருந்துகளை, இயற்கை வழி நோய் எதிர்ப்பு முறைகளை தோட்ட உரிமையாளர்கள் தொடர்ச்சியாக பிரயோகித்து பார்த்தனர். பலன் எதுவும் கிட்டவில்லை. ஆயிரக்கணக்கான ஏக்கர் கோப்பிச்செய்கை பாதித்திருக்க பட்டிருந்தது. இது பெருந்த நஷ்டத்தை முதலீட்டாளர்களுக்கு ஏற்படுத்தியது. பல வெள்ளையர்கள் தமது தோட்டங்களை வந்த விலைக்கு விற்று விட்டு இங்கிலாந்து திரும்பினர். 1870, 80, 90 களில் இது தொடர்ந்தது. சில உரிமையாளர்கள் தேயிலை செடிகளுக்கு தீ வைத்து கொளுத்தினர். நூற்றுக்கணக்கான ஏக்கர் காணி இவ்வாறு தீயிடப்பட்டது. சில உரிமையாளர்கள் தேயிலைச்செடிகளை பிடுங்கி அதன் அடிப்பகுதியை வெட்டி எடுத்தனர். செடிகள் எனக்குறிப்பிட்டாலும் அவை இருபது அடி வளரக்கூடிய மரங்கள். இந்த அடி மரத்துண்டுகள் லண்டனுக்கு கப்பலில் அனுப்பப்பட்டன. கோப்பி உறுதியான மரம் என்பதால் மேசை நாற்காலிகளுக்கான கால்களாக இவை பயன்படுத்தப்பட்டன. ஏனையவை விறகாகக்கொள்ளப்பட்டன.

இது இப்படியிருக்க, என்னவானாலும் பரவாயில்லை, இறுதி வரை முட்டிப்பார்த்து விடுவது என்று சில கோப்பித்தோட்ட உரிமையாளர்கள் தமது தோட்டங்களை விற்காமல் இருந்தனர். இவர்களுடன் தமிழ் தோட்டத்தொழிலாளர்களும் கேழ்வரகுடன் அரைவயிறு சாப்பாட்டுடனும் எஜமான் விசுவாசத்துடனும் நின்று பிடித்தனர். இக்காலத்தில் இவர்களுக்கு சம்பளமும் வழங்கப்படவில்லை.

இதே சமயம் மூடப்பட்ட தோட்டங்களில் வேலை செய்த தொழிலாளர்கள் தமிழகம் திரும்பிச்சென்றனர்.

இந்த தோட்டக்காணிகளை என்ன செய்வது? அப்படியே காடு வளர விட்டு விடுவதா? வேறு முயற்சிகளில் ஈடுபடுவதா? என்ற கேள்விகளுக்கு விடை காணும் வகையில் இத்தரிசு நிலத்தில் இருந்து புதிய பயிர் முளைவிட்டது. அது தான் தேயிலை.

ஏற்கனவே சீனாவில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் வரவழைக்கப்பட்ட தேயிலைக்கன்றுகள் பரீட்சார்த்த ரீதியாக பயிரிடப்பட்ட போதும், ஜேம்ஸ் டெய்லரே முதல் முறையாக வர்த்தக ரீதியாக தேயிலையை இலங்கையில் பயிரிட்டவர். 1867ஆம் ஆண்டில் லூல்கந்துர தோட்டத்தில் அவர் தேயிலையை பயிரிட்டு வெற்றி கண்டார். சரியாகச்சொன்னால், கோப்பி வர்த்தகம் செழித்திருந்த பொற்காலத்திலேயே தேயிலையை அவர் பயிரிட்டிருந்தார். மூன்று வருடத்தின் பின்னரேயே கோப்பித்தோட்டங்களை நோய் தாக்கியது.


லூல்கந்துரவில் தேயிலை பயிரிடப்பட்ட ஐந்து ஆண்டுகளின் பின்னர் 1872 ஆம் ஆண்டில் முதல் தடவையாக 23 இறாத்தல் தேயிலை இரண்டு பைக்கட்டுகளாக ஏற்றுமதி செய்யப்பட்டது.

இதன் விலை 58 ரூபா. 1877ஆம் ஆண்டு முதல் தடவையாக ஒரு தொகை தேயிலையை 'டியுக் ஒப் ஆர்கில்' என்ற நீராவி கப்பல் இங்கிலாந்துக்கு ஏற்றிச்சென்றது.



ஒரு ஆண் ஒரு பெண்ணுக்கு தாலி கட்டுவதை ஏற்றுக் கொண்டால் அதற்கு மூன்று காரணங்களே இருக்க முடியும்.

1. புது மனைவியாக இருக்கும்
2. புதுக் காராக இருக்கும்
3. அந்த பெண் மனைவியாக இருக்க முடியாது




பெண் வேடமிட்டு நகர்வலம் செல்ல வேண்டாம் என்று பலமுறை முன்பே சொன்னேன்..

அதுக்கென்ன இப்போது..?

கொள்ளையர்கள் அவளைக் கடத்திக் கொண்டு போய் விட்டார்கள்.

- ஜி.கோவிந்தன், ஹட்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

அது ஒரு றப்பர் தோட்டம். தோட்டத்தில் அரைப்பகுதி அரசாங்கத்துக்கும் மற்றைய பகுதி தனியாருக்கும் சொந்தமாக இருந்தன. தோட்டத்தின் பங்களாக்கள் அனைத்தையும் அரசாங்கம் எடுத்துக்கொண்டபோதிலும் தொழிலாளிகள் வசிக்கும் லயன் பகுதியை தனியாருக்கே விட்டு விட்டது.

எப்போதுமே தொழிலாளர்களிடையே ஏற்படும் சண்டை சச்சரவுகள் இதனால் ஒன்றும் குறைந்ததாக தெரியவில்லை. மாறாக அதிகரித்தே காணப்பட்டது. தோட்ட எல்லையில் இருந்த பலசரக்கு கடையில் 'பல்லேலக்கா' சரக்கும் கிடைத்தது. அந்த கடைக்காரருக்கு வியாபாரம் நடக்க வேண்டும் என்பதால் தொழிலாளர்களை பிரித்தாளும் கொள்கையை நன்றாகவே கடைப்பிடித்தது.

அரசாங்கம் தனியார் ஆகிய இரண்டு தரப்பினரும் தமக்குரிய ஆவணங்கள் மட்டுமன்றி இந்தியாவுக்கான தமது உறவினர்களுக்கு கடிதம் எழுதவும், உறவினர்கள் அனுப்பிய கடிதங்களை வாசித்து அறிந்துகொள்ளவும் என்னிடம் தான் வருவார்கள்.

எனது தந்தையார் தனியார் பிரிவு தோட்டத்தை நிர்வகித்து வந்தார். நான் அப்போது படித்து முடித்து வீட்டில் தங்கியிருந்த காலம். ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று பேர் என்னைத்தேடி வராமல் இருக்க மாட்டார்கள்.

சுமார் 30, 40 குடும்பத்தினர் இவ்வாறு ஆவண, கடித உதவிகளுக்கு என்னைத்தேடி வந்தபோதும் இரண்டு குடும்பத்தினர் என்னை அடிக்கடி தேடி வருவார்கள்.

இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு சென்று விடும் நோக்கத்தில் அவர்கள் அடிக்கடி மாதம் 3 முறையாவது இந்தியாவில் உள்ள தங்கள் உறவினர்களுக்கு கடிதம் எழுதுவார்கள். அத்துடன் அவர்களுக்கு வரும் கடிதங்களையும் நான் தான் அவர்களுக்கு வாசித்து காட்டவேண்டும். அந்த கடிதங்களை எழுதவும் வாசிக்கவும் நேர்ந்ததால் இரண்டு குடும்பங்களின் சொந்தபந்தங்கள் விருப்பு வெறுப்புகள் தாபங்கள், குறைகள் எல்லாம் அவர்களை விட எனக்குத்தான் நன்றாகத் தெரிந்திருந்தன.

அந்த இரண்டு குடும்பங்களினதும் மூத்தவர்கள்தான் செங்கோடன், தம்பிராஜா ஆகியோர். செங்கோடன் குடும்பத்தில் அவர், (அவரது மனைவி முன்பே தவறிவிட்டார்) ஆண் பிள்ளைகள் 4 பெண் பிள்ளைகள் 4 பேர்.

# இந்தியா சென்ற



# செங்கோடனும் தம்பிராஜாவும்

இவர்கள் இந்தியாவுக்கு போவதற்கு ஆரம்ப விண்ணப்பங்களையும் தோட்டத்தை விட்டு செல்லும் வரை ஆவணங்களையும் நிரப்பிக்கொடுத்தது நான்தான்.

ஆரம்ப விண்ணப்பத்தில் 9 பேரும் இந்தியா செல்வதாக தான் விண்ணப்பிக்கப்பட்டது. ஆனால் விண்ணப்பித்த 4 வருடங்களின் பின்னரே இந்தியா போக வாய்ப்பு கிடைத்தது.

இதற்கிடையே மூத்த மகன் நீர்கொழும்பு பகுதி பெண்ணொருத்தியை திருமணம் செய்துகொண்டான். அடுத்தவன் இந்தியா போக முடியாது என்று இலங்கையிலேயே தெரிந்தவர்களுடன் தங்கிவிட்டான். மூத்த மகளும் திருமணம் செய்துவிட்டாள். எனவே இவர்களைப்பிரிந்தே செங்கோடன் இந்தியா செல்ல வேண்டியிருந்தது. எஞ்சியவர்களுக்கு இந்தியாவுக்கு சென்றுதான் திருமணம் செய்து வைக்கவேண்டும் என்பது இவரது எண்ணமாக இருந்தது.

தம்பிராஜாவுக்கு மொத்தம் 6 பிள்ளைகள்.

செங்கோடனைப்போலவே விண்ணப்பித்து 4 வருடங்கள் கடந்த நிலையில் மூத்த மகன் இங்கேயே திருமணம் செய்ததால் அவர்களை இங்கேயே விட்டுச்செல்ல நேர்ந்தது.

இந்த இரு குடும்பங்களும் ஒரே நாளில் இலங்கையை விட்டு செல்ல வேண்டியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இரு குடும்பங்களும் என்னிடம் விடைபெற்று செல்ல வந்ததை நினைக்கும் போது இப்போதும் எனது கண்கள் மட்டுமல்ல, மனதும் கண்ணீர் வடிக்கிறது.

தோட்ட மக்கள் அவர்களை கட்டித்தழுவி விடைபெற்ற காட்சி என்றுமே மறக்க முடியாதது.

செங்கோடனுக்கு தமிழ் நாட்டில் சுங்கராம்பட்டி என்பது சொந்த ஊர். தம்பிராஜாவுக்கு தஞ்சாவூர் பக்கம் ஒரு கிராமம். பெயர் நினைவில்லை.

இப்போது இவர்கள் இருவருமே உயிருடன் இருப்பார்கள் என்று நம்பவில்லை. ஆனால் பிள்ளைகள் இருப்பார்கள்.

இவர்களுடன் சுமார் ஐந்து வருட காலம் கடிதத்தொடர்பு இருந்தது. பின்னர் தொடர்பு படிப்படியாக அறுந்து விட்டது.

ஆனால் அவர்களது நினைவுகள், மனதை விட்டு என்றும் அகலாது.

- தம்பிராஜா, கட்டுகஸ்தோட்டை.

அவர்கள் எப்படி இருக்கிறார்கள்

# தலைகவிழ்ந்து புன்னகைத்த அந்த கிளிநீக்கு காதலி

கண்டியைச் சேர்ந்த அவள் பெயர் கலையுடன் சம்பந்தப்பட்டது. மெலிந்த அளவான உடல்வாகு. ஐந்தடி உயரமிருக்கும். அவளது அழகிய மூக்கு தான் என்னை முதலில் வசீகரித்தது. எனக்குத் தெரிந்த ஒரு கண்டிப் பெண் தான் அவளை எனக்கு பேனா நண்பியாக அறிமுகம் செய்தாள். பேனா நட்பு காதலாக உருவெடுத்தது. காதலிப்பதற்கு ஆள் தேடுவது அந்தக் காலத்தில் பேனா நண்பர்கள் மூலம் தானே..! அப்போது மின்னஞ்சலும், செட்டிங்கும் எஸ்.எம்.எஸ் உம் இல்லையே..!

நான் அப்போது நன்றாக எழுதுவேன். அவளை அப்படித்தான் பேனாவால் வீழ்த்தினேன். சில எழுத்துப்பிழைகளுடன் அவள் எனக்கு கடிதம் அனுப்புவாள். அதை எத்தனை தரம் படித்தாலும் சலிப்பே வராது. அதுதான் இளமை வேகம் என்பது இப்போது புரிகிறது. அவள் எழுதிய கடிதம் ஒன்று சமீபத்தில் என் கைக்குக் கிட்டியது. ஆர்வத்துடன் வாசித்தேன். சிரிப்பாக வந்தது. அன்றைய ஸ்பீடு இன்றைக்கு இல்லை. எல்லாமே காலம் செய்யும் கோலம் தான்.

ஒரு நாள் அவள் என்னை கண்டி பேராதனை பூங்காவுக்கு வரச்சொன்னாள். வீட்டில் பொய் சொல்லிவிட்டு கண்டி பூங்காவை அடைந்தபோது காலை 9.30. கொஞ்ச நேரம் வரை வாசலில் நாயாக காத்திருந்தபோது மண் நிற போர்டருடன் கூடிய வெளிர் மஞ்சள் சாரி அணிந்த அவள் தன் நண்பியுடன் வந்தாள். இது தான் முதல் சந்திப்பு. நண்பி எங்களை அறிமுகம் செய்து வைத்தாள்.



நான் ஏதோ கேட்க அவள் மறுமொழி சொல்லாமல் 'டிம்' கொட்டினாள். நேர் பார்வையை தவிர்த்தாள். டிக்கட் வாங்கி உள்ளே போனோம். அவள் என் பக்கத்தில் நடக்காமல் என் நண்பி பக்கமாக நடந்து சென்றதும் அவள் மௌனம் காக்க, நண்பியே என்னுடன் சளசளவென பேசிக்கொண்டு வந்ததும் ஞாபகத்தில் இருக்கிறது.

நாங்கள் ஒரு மூலையில் புதர் பக்கமாக வந்ததும் என் நண்பி, இங்கே கொஞ்சம் பேசிக்கொண்டிருங்கள்.. ஒருத்தரை பார்த்துவிட்டு வருகிறேன் என்று கழன்று கொண்டாள். நாங்கள் புதர் மறைவில் அருகருகே அமர்ந்துகொண்டோம். அவள் விரல்களை எடுத்து என் விரல்களுடன் மென்மையாக பிணைத்து கொண்டபோது அவள் ஒன்றும் சொல்லவில்லை. நான் ஒரு பைத்தியம்போல திரும்ப திரும்ப ஐ லவ் யூ சொன்னபோது அவள் முகம் சிவந்து தலை கவிழ்ந்து சிரித்தாள். என்னை அவள் ஒரு பேக்கு என எண்ணித்தான் புன்னகைத்திருக்க வேண்டும் என்பது இப்போது தான் புரிகிறது. நான் என்ன பேசினேன் என்பது இப்போது ஞாபகத்தில் இல்லை. அவள் கொஞ்சம் தான் பேசினாள். யாராவது தன்னைப்பார்த்து விடுவார்களோ என்ற பயம்தான் அவளிடம் இருந்தது. மகாவலி ஆற்றுக்கு எதிர்க்கரை பாதையில், தூரத்தில் நடந்து செல்பவர்களையும் சுட்டிக்காட்டி 'பார்த்து விடுவார்கள்' என்று பயந்து கொண்டிருந்தாள். முதல் நாள் தொடக்கம் நான் மனதில் திட்டம் போட்டு வைத்திருந்த எந்த ரோமான்ஸும் அவளிடம் எடுபடவில்லை.

திடீரென தன் அப்பா கண்டி பொலிஸில் கிளார்க் வேலை பார்ப்பதாக என்னிடம் சொன்ன போது என் தலையில் இடி இறங்கிய மாதிரி இருந்தது. பொலிஸைக்கண்டால் இயல்பாகவே எனக்குப் பயம். "அப்பா ரொம்ப கண்டிப்பு. தெரிந்தால் தோலை உரித்து விடுவார்" என்று அவள் சொன்னதும் ரோமான்ஸ் எண்ணங்கள் எல்லாம் பறந்துவிட்டன. இருவரும் எழுந்துகொண்டு நண்பியைத் தேடத்தொடங்கினோம்.

பின்னர் எங்கள் இரண்டாம் சந்திப்பு நிகழவே இல்லை. கடிதங்கள் தொடர்ந்தன. வீட்டுக்கு வந்து பெண் கேட்கச்சொன்னாள். என்னிடம் நல்ல தொழிலும் நெஞ்சில் திராணியும் இருக்கவில்லை. அப்போது தான் 83 கலவரம் வந்தது. தொடர்பு துண்டித்துப்போனது. நண்பி குடும்பத்துக்கும் என்னவானது என்று தெரியவில்லை. கண்டி சென்று தேடிப்பார்க்கவும் துணிச்சல் இல்லை என்பதால் எங்கள் காதல் முடிவுக்கு வந்தது.

அவளது குடும்பம் இலங்கையில் தான் வசிக்கிறதா.. இந்தியாவுக்கு சென்றுவிட்டதா, தெரியவில்லை. எப்போதாவது அவள் கிளிநீக்கு முகம் ஞாபகத்துக்கு வரும். அவள் பிள்ளை குட்டிகளுடன் எங்கேயாவது நன்றாக இருப்பாள் என்பது என் நம்பிக்கை.

- தேவசகாயம், இரத்தினபுரி

இந்தப் பகுதியில், உங்கள் வாழ்க்கையில் ஒரு சமயத்தில் குறுக்கிட்ட காதல் அனுபவங்கள், சிறந்த நட்பு, சிறந்த மனிதர்கள் பற்றி நீங்கள் எழுதலாம். நீங்கள் அவரைத் தேடுவதாக இருந்தால் உங்கள் தொடர்பு இலக்கத்தை எமக்குத் தரலாம். இது உங்கள் மனதை திறப்பதற்கான பகுதி. மனம் திறந்து எழுதுங்கள். இல்லையேல் எங்கள் தொடர்பிலக்கத்துடன் பேசுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## குருவும் சிஷ்யனும்

இப் படத்தை நகல் செய்யும் போது அலுவலக பையன் சில தவறுகளைச் செய்து விட்டான். வலப்பக்க படத்தில் ஆறு தவறுகளை செய்திருக்கிறான். அவற்றைக் கண்டுபிடித்துச் சொல்கிறீர்களா? கண்டுபிடிப்பை எங்களுக்கு எழுதி அனுப்பினால் அறுவரின் பெயர்களை அடுத்த இதழில் பிரசுரிப்போம்.



போலீஸ் : ஏற்கனவே இரண்டு முறை திருடின வீட்டில் ஏன் இன்னைக்கும் திரும்பவும் திருடின?

திருடன் : காலண்டர்ல இன்று புது முயற்சிகளை தவிர்க்கவும்னு போட்டிருந்தது, அதுதான்..!

# ஹலோ தமிழகம் !



**சென்னை மதுரா டிரவல்ஸ் இந்தியாவின் முன்னணி சுற்றுலா நிறுவனங்களில் ஒன்று. இதன் அதிபர் கலைமாமணி வீ.கே.டி. பாலன், தமிழக சுற்றுலாத் தலங்களின் சிறப்புகளை இங்கே உங்களுடன் தொடர்ந்து பகிர்ந்து கொள்கிறார்.**

# சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரை

இலங்கையில் கண்டி மாநகரமும் தலதா மாளிகையும் சிங்கள மக்களுக்கு எவ்வளவு முக்கியமானதும் புனிதமானதுமோ, நல்லூரும் நல்லூர் கந்த சுவாமி கோவிலும் தமிழர்களுக்கு எவ்வளவு தூரம் கலாசார காவலனாகவும் புனிதமாகவும் விளங்குகிறதோ அவ்வாறே அனைத்துலக தமிழர்களுக்கும் மதுரை மீனாட்சியம்மன் திருக்கோவிலும் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரை மாநகரமும் மனதுக்கு மிக நெருக்கமானவை. மதுரையின சிறப்பை இப்படித்தான் புரிய வைக்க முடியும். தமிழ் செஞ்சங்களுக்கு மிக நெருக்கமான இம்மதுரை பல பண்டடைய சிறப்புகளைக் கொண்டது.

6,676 சதுர கி.மீ பரப்பளவு கெண்ட மதுரை 5,78,201 பேரை மக்கள் தொகையாக (2001 கணக்கெடுப்பு) கொண்டது. அழகர் கோவில், நாயக்கர் மஹால், திருப்பரங்குன்றம், சமணர் கோவில்கள், ஆராக்கியமாதா திருக்கோவில், தெப்பக்குளம், அரசு அருங்காட்சியகம், காந்தி அருங்காட்சியகம் என்பன கட்டாயம் தரிசித்து மகிழ வேண்டிய முக்கிய தலங்களில் சில.

உலகின் மிகப்பழைய நகரங்களில் மதுரையும் ஒன்று. 2500 வருடங்களை கடந்தது மதுரை வரலாறு. ஆரம்பத்தில் இது ஒரு கடம்ப மரங்கள் நிறைந்த காடாக இருந்தது. இங்கே சுயம்புலிங்கத்தை இந்திரன் வழிபட்டுக்கொண்டிருப்பதைக் கண்ட ஒரு விவசாயி, அதை குலசேகர பாண்டியனிடம் சொல்ல, அவன் காட்டை அழித்து லிங்கத்தை சுற்றி கோவில் எழுப்பினான் என்பது புராண வர்லாறு. மதுரம் என்பதன் திரிபாகவே மதுரை கொள்ளப்படுகிறது. மதுரம் என்றால் இனிமை என்று பொருள்.

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரை என்பதால் தமிழ் மொழி, இலக்கியததுடன் இந்நகரம் நெருக்கமாக வைத்து பார்க்கப்படுகிறது.


**மீனாட்சி அம்மன் கோவில் :**

அன்னை மீனாட்சி சுந்தரேஸ்வரருடன் மணக்கோலத்தில் கோலாகலமாக கொலுவீற்றிருக்கிறாள். அன்னைக்கான மூலக்கோயிலை ஒரு தந்தையின் அல்லது மைந்தனின் இடத்தில் நின்று அமைத்தவர் மாமன்னர் குலசேகர பாண்டியன். பின்னர் 16ஆம் நூற்றாணடு முதல் 18 ஆம் நூற்றாண்டு வரை ஆண்ட நாயக்கர் பரம்பரை இதை பெருங்கோயிலாக வடித்தது. அன்னையின் இக்கோயில் 12 கோபுரங்கள் உடையது. வெளிப்புறக்கோபுரம் மதுரைக்கான அடையாளம்.

**புராணச்செய்தி :** மலையத்துவசபாண்டியன் மதுரையை ஆண்டு வந்தான். நீண்ட நாட்கள் அவனுக்கு குழந்தைப்பேறில்லை. எனவே யாகங்கள் செய்தான். யாக நெருப்பிலிருந்து திடீரென மூன்று வயதுச்சிறுமி தோன்றி வந்தாள். அவளை மன்னன் தத்தெடுத்துக்கொண்டார். ஆனால் அவளுக்கு மூன்று மார்பகங்கள் இருந்தன. இது மன்னனுக்கு பெருத்த கவலையை அளித்தது. ஒரு நாள் ஓர் அசரீரி, இந்தப்பெண் தனது கணவனைச்சேரும்போது அவளது மூன்றாவது மார்பகம் மறைந்துபோகும் என்று கூறியது. பெண் பெரியவள் ஆனாள். வீரம் மிக்கவளாக போர்களில் வெற்றிவாகை சூடினாள். சிவபெருமானிடம் தமது உள்ளத்தை பறிகொடுத்தாள். அவரைக்கண்டதுமே அவளது மூன்றாவது மார்பகம் மறைந்துவிட்டது. இருவரும் தம்பதியராயினர். பின்னர் அவர்கள் சொக்கநாதராகவும் மீனாட்சியாகவும் மதுரை மாநகரில் திருக்கோயில் கொண்டெழுந்தனர்.



நாயக்கர் மஹால்



திருப்பரங்குன்றம்

**திருமலை நாயக்கர் மஹால்:**

மாமன்னர் திருமலை நாயக்கர் இத்தாலிய கட்டுமான கலைஞரின் உதவியுடன் இந்த வரலாற்று சிறப்புமிகு அரண்மனையைக் கட்டினர். இப்போது நாம் பார்க்கும் பிரதான மாளிகையில்தான் அந்த மாமன்னன் விசுவநாத நாயக்கன் வாழ்ந்தான். இப்போதுள்ளதைப்போல 4 மடங்கு பெரியது முதலில் கட்டிய மாளிகை வளாகம். இந்த மாளிகை சுவர்க்க விலாச, ரங்கவிலாச என்ற அரண்டு பிரதானப்பிரிவுகள் கொண்டது. இம்மாளிகையில் அரசர் முன்னிலையில் நாட்டியமும் இசையும் தினசரி நடக்கும். மாளிகையின் அருமை தெரியாத நாயக்க மன்னனின் பேரன் சொக்கநாத நாயக்கன் இதைச்சேதப்படுத்தி விலை மதிப்பான பொருட்களை அள்ளிப்பதுக்கினான்.

பார்வை நேரம் : காலை 9 மணி முதல் - மாலை 5 மணி வரை

**திருப்பரங்குன்றம்:**

மதுரையில் இருந்து எட்டு கி.மீ தொலைவில் இது அமைந்துள்ளது. இதன் உட்புறம் வைரம் பாய்ந்த பாறையில் இருந்து வெட்டி சீர் செய்யப்பட்டது. கந்தனின் அறுபடை வீடுகளில் ஒன்று.

**சமண நினைவுச்சின்னங்கள் :** மதுரை மாவட்டத்தில் கி.மு 3ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் சமண முனிவர்கள் மதுரையை சுற்றிலும் உள்ள ஆனைமலை, அழகர்மலை, கீழக்குயில்குடி, செட்டிப்புடவு, முட்டுப்பட்டி, அரிட்டாப்பட்டி, திருப்பரங்குன்றம் ஆகிய இடங்களில் வாழ்ந்துவந்ததாக தெரிகிறது. முட்டுப்பட்டியில் கி.பி 9ம் நூற்றாண்டை ஒட்டிய காலத்து தீர்த்தங்கரர் இருவரின் திருவுருவங்கள் சிலையாக வடிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது நிலக்கோட்டையிலிருந்து ஆறு மைல்களுக்கு அப்பால் உள்ள மேட்டுப்பட்டியில் சித்தர் மலை என்னும் ஒரு மலையில் உள்ளது. மலையின் தென் சரிவில் ஒரு பெரிய குகை உள்ளது. அங்கு தலையணைகளோடு கூடிய ஆறு படுக்கைகள் காணப்படுகின்றன.



மீனாட்சி அம்மன் - பொற்றாமரைக்குளம்

பார்க்கத்தகுந்த ஏனைய இடங்களாக, அதிசயம் விந்தைப்பூங்கா, தியாகி விஸ்வநாததாஸ் இல்லம், கொச்சடை ஐயனார் கோவில், குட்லாம்பட்டி அருவி, கூடல் அழகர் கோவில், திருவாதவூர் கோவில், நான்காம் தமிழ்ச்சங்கம், பழமுதிர்ச்சோலை, தைமாதம் நடைபெறும் ஜல்லிக்கட்டு, காமராசர் பல்கலைக்கழகம், இராஜாஜி பூங்கா, இராமகிருஷ்ண மடம், வண்டியூர் மாரியம்மன் கோவில் ஆகியவற்றை குறிப்பிடலாம்.

இலங்கைச் சுற்றுலாப் பயணிகளின் அனைத்துத் தேவைகளுக்கும் சென்னையில் சேவையாற்றும் நிறுவனம்,
மதுரா டிராவல் சர்வீஸ் (பி) லிட். Since 1986
25-3, காந்தி இர்வின் சாலை (கென்னத் லேன்), எழும்பூர் இரயில் நிலையம் எதிரில், எழும்பூர், சென்னை - 600 008
Phone : + 91 44 2819 2002 | Cell : + 91 98416 91234 | Fax : + 91 44 28191813 | email : india@maduratravel.com | web : www.maduratravel.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# என் அலை எப்போதும் ஓயாது

*எங்க நம்ம நமீதாவை ஆளையே காணோம் என்று நீங்கள் அங்கலாய்ப்பது எங்களுக்குப் புரிகிறது. அவரின் அலை ஓய்ந்து விட்டதாக அவரிடமே கேட்டோம்.*

**உங்களின் அலை எப்படி இருக்கிறது?**

என் அலைகள் எப்போதுமே ஓயாது. எனக்கு கொஞ்சம் இடைவெளி தேவைப்பட்டது. என்னை நானே சரிசெய்து கொள்ள.. எடையை குறைக்கும் முயற்சியையும் சரியான படங்களை தேர்வு செய்யவும் எடுத்துக்கொண்ட இடைவெளி தானே தவிர, எனக்கு தினமும் இரண்டு பட வாய்ப்புகள் வந்து கொண்டு தான் இருக்கிறது.

திறப்பு விழாக்களுக்கு செல்லும் போது கூட்டத்தை சரிசெய்ய முடியாமல் போலீஸார் திணறும்போது தான் என் அலை பற்றி யோசிக்க தோன்றும். அலை அப்படியே தான் இருக்கிறது. அதற்காகவே நான் என் மச்சான்களுக்கு சரியான படம் கொடுக்க வேண்டும்.

**மனம் திறந்து சொல்லுங்கள். உங்களுடன் நடித்த கதாநாயகர்களில் யாரை பிடிக்கும்?**

என்னுடன் நடித்த கதாநாயகர்களில் அஜீத்தின் நம்பிக்கை எனக்கு ரொம்ப பிடிக்கும். ஒரு பெரிய வெற்றியை கொடுக்க போராடிய குறிப்பிட்ட காலகட்டத்தில் அவரின் தன்னம்பிக்கையும், உழைப்பும், தளராத முயற்சியும் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்த சமயம் அவருடன் படம் பண்ணும் வாயப்பு மிகப்பெரிய தன்னம்பிக்கையை எனக்குள் விதைத்தது.

**நீங்களும் நயன்தாராவும் இணைந்து நடித்த படங்கள் வெற்றி பெறுகிறதே, எப்படி?**

உண்மை தான். நானும் நயன்தாராவும் இணைந்து நடித்த பில்லாவும் தெலுங்கில் சிம்ஹாவும் பெரிய வெற்றிப்படங்கள். பில்லா ஆரம்பித்தபோது, நானும் நயன்தாராவும் நல்ல மரியாதைக்குரிய சக நடிகைகளாகத்தான் பழக ஆரம்பித்தோம். ஆனால் அந்த படம் பாதியில் இருக்கும்போது ஏனோ எங்களுக்குள் நட்பு இல்லாமல் போனது. உண்மையிலேயே வருத்தப்பட்டேன்.

நயன்தாராவிடம் எனக்குப்பிடித்தது அவருடைய உச்சபட்ச நேசம். நேசித்தால் உயிரைக்கொடுத்து நேசிப்பார். நேசத்தின் உச்சத்துக்கே போய்விடுவார். விலகினாலும் அப்படித்தான். திரும்பிப்பார்க்கமாட்டார். அது போட்டும், நயன்தாரா திருமணம் செய்து கொள்ளப்போகிறாராமே.. அவருக்கு என் அட்வான்ஸ் வாழ்த்துக்கள்.

**சில்க் சுமிதா வேடத்தில் நடிக்க, இப்போதுள்ள நடிகைகளில் வித்யாபாலனை விட பொருத்தமானவர் நமீதா தான் என்று எல்லோரும் சொல்கிறார்களே?**

சில்க் சுமிதாவை நான் நேரில் பார்த்ததில்லை. அவர் நடித்த சில படங்களை டி.வி யில் பார்த்திருக்கிறேன். அவருடைய அழகு, திறமை, நடனம் பற்றி பல பேர் பேசி கேள்வி பட்டிருக்கிறேன். அவருடைய வேடத்தில் நடிக்க பொருத்தமானவர், வித்யாபாலன் தான். அவர் ஒரு மிகச்சிறந்த நடிகை. பாத்திரமாகவே மாறக்கூடியவர்.

**சொன்ன கதையை எடுக்காமல் சிலர் உங்களை ஏமாற்றியதாகவும், அவர்கள் மீது நீங்கள் கோபமாக இருப்பதாகவும் தகவல்கள் வருகிறதே?**

என்னிடம் கதை சொல்ல வரும்போது படத்தில் எனக்குத்தான் முக்கியத்துவம் இருப்பது போல் சிலர் சொல்வார்கள். ஆனால் படம் பார்க்கும்போது ஒரு பாட்டு நான்கு சீன்கள் தான் இருக்கும். சிலர் சொன்ன கதையை அப்படியே படமாக்குவார்கள். என்றாலும் படம் வரும்போது என் சம்பந்தப்பட்ட காட்சிகள் நீக்கப்பட்டிருக்கும்.

அதில், அவர்களுக்கு என்ன லாபமே? அப்படி எனக்கு சந்தோஷம் இல்லை. என்னுடைய எல்லா படங்களும் ஓட வேண்டும். என்னைப்பார்க்க வரு ஆடிப்பாடும் ஒரு பாட்டிலும் வந்து போகும் நான்கு சீன்களிலும் திருப்தி அடைபவர்கள் அல்ல, என் ரசிகர்கள். நமீதாவை முழுமையாக பார்க்க வே

**அப்படியானால் ஒரு பாட்டுக்கு ஆடவே மாட்டீர்களா?**

கடைசி வரைக்கும் அதைச்செய்யவே மாட்டேன். அது என் சுதந்திரம். அதில் யாரும் தலையிட முடியாது. அப்படி ஆடித்தான் ஆகவேண்டும் என்கிற மாட்டேன். இருக்கவே இருக்கிறது ரியல் எஸ்டேட் பிஸ்னஸ். சந்தோஷமாக அதைப்பார்க்க போய்விடுவேன்.




குப்பத்து மக்களுக்காக குரல்கொடுக்கும் சேரி இளைஞனின் கதை தான் பாலமுருகன் பிலிம்ஸ் தயாரிக்கும் காசிகுப்பம். குப்பத்து மக்களின் ஒரே சொத்து உழைப்பு மட்டுமே. உழைக்கத்தயங்காத அவர்களின் அறியாமையை பயன்படுத்தி உடல் உறுப்புக்களை கயவன் ஒருவன் திருடி விற்கிறான். சமூகத்தில் நல்லவன் என்ற போர்வையில் வாழ்ந்து கொண்டிருக்கும் அவனுடைய தில்லு முல்லுகளை மக்களிடம் நாயகன் எப்படி தோலுரித்துக்காண்பிக்கிறார் என்பதை பரபரப்பான திரைக்கதையில் சொல்லியிருக்கிறேன். நாயகியாக கீர்த்தி சாவ்லா நடிக்கிறார். யதார்த்தமான கதைகள் தமிழ் சினிமாவில் பெரிய வெற்றியடைந்துள்ளன. அந்த வரிசையில் இந்தப்படமும் ரசிகர்களிடையே ஒரு அழுத்தத்தைக்கொடுக்கும் என்கிறார் நாயகனும் டைரக்டருமான அருண்.



## எந்திரனை தொட்ட 7ம் அறிவு

வியாபார விஷயத்தில் எந்திரனை தொட்டு விடும் என்று அரசல் புரசலாக பேசப்பட்டு வந்த 7ஆம் அறிவு அதிகாரபூர்வமாக தொட்டே விட்டது. கிட்டத்தட்ட 90 கோடி ரூபா வியாபாரம் ஆகியிருக்கிறதாம்.

சிட்டி, என்.எஸ்.சி திருச்சி உள்ளிட்ட ஐந்து ஏரியாக்களை பெரும் விலை கொடுத்து வாங்கியிருக்கிறது. ஜெமினி லேப் நிறுவனம் எந்திரன் படத்தை வெளியிட்டதும் இவர்கள் தான் வெறும் சூர்யா நடித்த படத்திற்கு இத்தனை மாஸ் இல்லை. கூடவே முருகதாஸும் இருப்பதால் தான் இந்த மாஸ் என்கிறார்கள். கோடம்பாக்கத்தில் இதே முருகதாஸ் அடுத்து விஜய் நடிக்கும் படத்தை இயக்கப்போகிறாராம்.

சம்பளம் தெரியுமா? 12 கோடி. இது ஷங்கரின் சம்பளத்தை விட ரெண்டு கோடி அதிகம். ஒரு விழாவில் எவ்வளவு தான் சம்பாதிச்சாலும் காலையில் நாலு இட்லிக்கு மேல் சாப்பிட முடியுமா? என்று தத்துவம் பேசுகிறார் முருகதாஸ்.

சீமான் இயக்கத்தில் விஜய் நடிக்கும் பகலவன் படத்தில் விஜய்க்கு டொக்டர் வேடமாம்.





சல்மான்கானுக்கு கேரள ஆயுர்வேத சிகிச்சையின் பலன்கள் குறித்து பாடம் நடத்தியிருக்கிறார் அசின்!



தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட நான்கு மொழிகளில் புட்டபர்த்தி சத்ய சாயிபாபாவின் வாழ்க்கை வரலாறு படமாகிறது, சாய் பாபா வேடத்தில் இந்த நான்கு மொழிகளிலும் பிரகாஷ்ராஜ் நடிக்கிறார்.



அங்காடித் தெரு அஞ்சலி பெரிய இடத்து பிரமுகரின் உறவினர் ஒருவரின் பிடியில் இருக்கிறாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனம் திறக்கிறார் நமீதா

ரும் ரசிகர்கள் ஏமாறக்கூடாது. நான்
வண்டும் என்று ஆசைப்படுபவர்கள் அவர்கள்.

ிற நிலைமை ஏற்பட்டால் சினிமாவில் இருக்க



விற்க முடிந்த அனைத்தையும் விற்று விடுவதுதான் வர்த்தக சூத்திரம் என்பது இன்றைய சர்வதேச பாலபாடம். இதன்படியே கிரிக்கட் சூதாட்டம் ஆரம்பமாகி அது இன்று ஊழலில் நின்று கொண்டிருக்கிறது.இந்த ஆட்டக்காரார்கள், நடிகை ஐஸ்வர்யாவுக்கு பிறக்கவுள்ள குழந்தையையும் விட்டு வைக்கவில்லை. ஐஸ்வர்யாவின் குழந்தை இம்மாதம் எப்படியும் பிறந்துவிடும். அது எப்போது பிறக்கும்? பிறக்கப்போவது ஆணா, பெண்ணா? என்பவற்றை கூட காசாக்க நினைக்கிறார்கள் இந்த சூதாட்டக்காரர்கள். குழந்தை 11.11.11 என்ற அபூர்வ காலசேர்க்கை தினத்தன்று பிறக்க வேண்டும் என்பதிலும் கோடிகள் புரள்கின்றதாம். ஜோசியர்களும் ஜாதகம் கணித்து குழந்தை 11.11.11 இல் தான் பிறக்கும் என்று கூறியிருக்கிறார்கள். டெலிவரி 11ம் திகதிக்குள் நடக்கலாம் என்பது மருத்துவர்களின் கணிப்பு. பச்சன் குடும்பம் 11.11.11இல் பிரசவம் நிகழ்ந்தால் நன்றாக இருக்கும் என்றே எதிர்ப்பார்த்துள்ளது.

அப்பாவாகும் சந்தோஷத்தில் உள்ள அபிஷேக் பச்சன், கடந்த மாத இறுதிக்குள் எல்லா படப்பிடிப்புகளையும் முடித்து நவம்பர் ஐந்தாம் திகதிக்குள் ஃபிரீயாகி விடவேண்டும் என உழைத்துக்கொண்டிருந்தார். டெலிவரி சமயத்தில் மனைவி பக்கத்தில் இருக்கவேண்டும் என்பது அவர் விருப்பம். கடந்த ஒன்பதாம் திகதி தான் மும்பை வீட்டில் ஐஸ்வர்யாவுக்கு தடபுடலாக வி.ஐ.பி புடை சூழ வளைகாப்பு நடைபெற்றது.

சரி, 11.11.11 அன்று ஐஸ்வர்யாவுக்கு பிரசவம் நிகழ்கிறதோ இல்லையோ, உலகெங்கும் பல்லாயிரக்கணக்கான ஊர் பேர் தெரியாத தாய்மாருக்கு எந்த ஜோசியர் கணிப்புமின்றி இதே திகதியில் குழந்தைகள் பிறக்கத்தான் போகின்றன. தகப்பன் பெயர் தெரியாமலும் கஞ்சிக்கும் வழியில்லாத குடும்பங்களிலும் இந்த அதிஷ்ட குழந்தைகள் பிறக்கும் என்பதையும் மறந்துவிட வேண்டாம்.

# 11.11.11 அதிஷ்ட நாளில் ஐசுக்கு பிரசவவம் நிகழுமா?



# ஒரு நடிகையின் கதை

ரசிகர்களுக்கு நட்சத்திரங்களாக ஜொலிக்கும் நடிகைகளுக்கும் வாழ்க்கை, குடும்பம், உறவுகள் உண்டு என்பதை உணர்வு பூர்வமாக சொல்லும் படம் தான் எஸ்.ஜி.பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட் 'புன்னகைப்பூ' கீதா தயாரிக்கும் ஒரு நடிகையின் வாக்குமூலம். சராசரி பெண்ணாக இருக்கும் ஒரு பெண் எப்படி நடிகையாகிறாள், நடிகையான பிறகு அவருடைய வாழ்க்கை எப்படி மாறுகிறது என்பதை சொல்லி இருக்கிறோம். நடிகையான பிறகு அந்த நடிகையின் புகழும் பணமும் தான் உலகத்துக்கு தெரிகிறது. ஆனால் உண்மையில் திரைக்குப்பின் அவர்களுடைய வாழ்க்கையில் எத்தனையோ சோகங்கள் உள்ளது. அவர்களின் அந்த வேதனையான இன்னொரு பக்கத்தை சொல்லும் படமாக இந்தப்படம் இருக்கும். அஞ்சலி என்ற வேடத்தில் சோனியா அகர்வால் நடிக்கிறார். நான் ஒரு புது இயக்குனராக இருந்தாலும் முகம் சுளிக்காமல் நேரம் காலம் பார்க்காமல் படப்பிடிப்புக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்தார். படப்பிடிப்புக்கு வரும்போது நடிகையாக வராமல் அஞ்சலியாகத்தான் வருவார். இன்னொரு நடிகை வேடத்தில் நிக்கோல் நடிக்கிறார். படத்தின் தயாரிப்பாளர் புன்னகைப்பூ கீதா தலைமை நிருபராக நடிக்கிறார். அவரைப்பற்றி சொல்வதாக இருந்தால் ஒரு தயாரிப்பாளராக நிர்வாகத்திறமையும், ஒரு நடிகையாக நடிப்புத்திறமையும் உள்ள சிறந்த பெண்மணி.

தவிர, கஞ்சா கருப்பு, மனோ பாலா, யோகி தேவராஜ், மலேஷிய பாடகர் ராதாகிருஸ்ணன் நடிக்கிறார்கள். நிச்சயம் இந்தப்படம் ஆபாசம், இல்லாத நல்ல படமாக இருக்கும் என்கிறார் இயக்குனர் ராஜ்கிருஷ்ணா.



# சினிமாவில் களமிறங்கும் கவிஞர்கள்


கவிஞர்கள் கதாநாயகர்களாக மாறிவரும் சூழ்நிலையில் கவிஞர் தபு சங்கர் லைலா மஜ்னு விளையாட்டு படம் மூலம் இயக்குனராக மாறியுள்ளார். அதுவும் எப்படி? சுந்தர்.சி, சுராஜ், செல்வபாரதி ஆகியோரிடம் டைரக்ஷன் பயின்று டைரக்டராகியுள்ளார்.

இது முழுக்க முழுக்க காதல் கதை. தன்னை காதலித்த பெண் வேறு ஒருவனை திருமணம் செய்து கொள்கிறாள். காதலியின் இந்த முடிவை எதிர்ப்பார்க்காத ஹீரோ சோகத்தின் உச்சிக்கு செல்கிறார். நாயகனின் நிலையை கண்ட நண்பன் உன்னை ஒரு பெண் ஏமாற்றியது போல் நீயும் ஒரு பெண்ணை ஏமாற்றி அந்த வலியை இன்னொரு பெண்ணுக்கு ஏற்படுத்து. அப்போது தான் உன் வலிக்கு மருந்து கிடைக்கும் என்கிறார். நண்பனின் ஆலோசனைப்படி ஹீரோ மீண்டும் ஒரு பெண்ணை காதலிக்கிறார். திட்டமிட்டபடி அந்தக்காதல் தோலிவியில் முடிந்ததா? இல்லையா? என்பது தான் சில்வர் ஜுப்ளி பிலிம்ஸ் சார்பில் ராமசந்திரன் தயாரிக்கும் லைலா மஜ்னு விளையாட்டு. நாயகனாக அசோக் நடிக்கிறார். நாயகிகளாக தர்ஷணா, கிருத்திகா நடிக்கிறார்கள். அனைத்துப்பாடல்களும் 'ஹிட' எனுமளவுக்கு இமான் இசையமைத்துள்ளார். இந்தப்படம் பொழுதுபோக்கு படமாக இருக்கும். என்கிறார் இயக்குனர் தபுசங்கர்.



# ஒரு பெண்ணின் சதி

ஒரு அலுவலகத்தில் உயர் பதவியில் பணிபுரியும் நாயகன், நாயகியை காதலித்து திருமணம் செய்து கொள்கிறார். ஆனால் நாயகன் முதலிரவு கொண்டாடாத வகையில் ஒரு பெண் சதி செய்கிறாள். ஏன், எதற்காக என்பதை திடீர் திருப்பங்களுடன் கூறும் கதை தான் கோகுல் ஆர்ட்ஸ் கிஷோர் பாபு தயாரிக்கும் 'மதனா மன்தனமா'. ஆதித்யா, வந்தனா, பிரியா நடிக்கிறார்கள். இன்றைய இளைஞர்களை குஷிபடுத்தும் வகையில் திரைக்கதை விறுவிறுப்பாக இருக்கும் என்கிறார் இயக்குனர் நிவாஸ்.




குஜராத் மாநிலம் சூரத் நகரில் ஜவுளி வியாபாரத்தில் பிரபலமான முகேஷ்குமார் வங்காலாவின் மகளாக மே 10 இல் பிறந்தவர் நமீதா. அம்மா ஹவுஸ் வைஃப், ஒரு அண்ணன், ஆறடி உயரம் அழகிய உருவம் கொண்ட நமீதா பீ.ஏ ஆங்கில இலக்கியம் படித்தவர்.

கறுப்பு நிற ஆடைகளை அணிவது நமீதாவுக்கு பிடித்தமானது! ஜீன்ஸ் டவுசரும், டாப்ஸும் தான் இஷ்ட உடை.

வெள்ளை நிற லில்லி மலரை எதிரிகள் கொடுத்தால் கூட.. வாங்கிக்கொள்வார். அந்த அளவுக்கு லில்லி மலர் மேல் ரொம்ப ஆசை இந்த அல்லி மலருக்கு.

நமீதாவுக்கு வைர நகைகள் ரொம்ப பிடிக்கும்! தானே டிஸைன் வரைந்து வைர நகை செய்பவர்களிடம் கொடுத்து நகைகளை செய்யச்சொல்வார்!





வெயில் பிரியங்காவுக்கு செங்காத்து பூமியிலே தவிர தமிழில் வேறு படங்கள் இல்லாததால், அம்மணி கேரளா விலேயே டேரா போட்டிருக்கிறார். பெரிய வாய்ப்பு கிடைத்தால் குடும்பப்பாங்கில் இருந்து கொஞ்சம் கவர்ச்சிக்கும் மாறலாம். எனும் உத்தேசமும் இருக்கிறது.





சிம்பு இழுத்தடிப்பதால் ஷூட்டிங் முடியாத போடா போடி படத்தை கைமாற்றிவிட முடிவு செய்திருக்கிறதாம் தயாரிப்பு தரப்பு..!

நெஞ்சில் பச்சை குத்தியிருந்த த்ரிஷா இப்போது கை விரலிலும் குறியீடு ஒன்றை பச்சை குத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முற்றம்



## உனக்காக

உன்
வரவுக்காக
காத்திருக்கும் கன்னி இவள்
எண்ணமெல்லாம்
வசந்த
நிலவின் வதனத்தில் பூத்த
புதுமலர் போல
என்னை நீ
உன் தாரமாக்கிடும்
நாளுக்காய்
கன்னியிவள்
காலமெல்லாம்
காத்திருப்பாள்
உனக்காக

ப.ஸ்ரீஜெர்மிளாகுமாரி, கண்டி (கல்ஹின்னா இருப்)



## காலமெல்லாம் கூட இருப்பவள்

காதலித்துப்பார்
கவிதை வரும் என்றார்கள்
பார்த்தேன், காதலித்து அல்ல
காதலிப்பவர்களை!
யாரும் கவிஞனாக இல்லையே!

கள்ளிச்செடியை அழித்துவிடலாம்
நிலத்தில்
கண்ணை பறித்தவளை
அழிக்க முடியாது
மனதில்

ஏன் அழுகை என்றால்
என் காதலியை நினைத்த மனதை
யாரும் தொட்டுவிடக்கூடாது என்
மனைவியும் கூடத்தான்

ஆனால்
உன் மனதை தொட்டவளை
மனைவியாக்குவதை விட
மனைவியை காதலித்துப்பார்
நிறையும், மனம் மட்டுமல்ல
உன் உள்ளமும் தான்

உன் நினைவை
காலி செய்பவள் உன் காதலி
உன் குழந்தைக்காக வாழ்பவள்
உன் மனைவி

பிறரை பாராட்ட உனக்கு
பெரிய மனது வேண்டும்
உன் மனைவியை பாராட்ட
விசாலமான இதயம் வேண்டும்

இ.டிலாஜினி,
யாழ்ப்பாணம்

## என் கவிதை

மன முற்றத்தில்
கருவாகி...
நிலா முற்றத்தில்
பிறந்து..
அஞ்சல் முற்றத்தில்
தவழ்ந்து..
கவி முற்றத்தில்
சங்கமித்தது
என் கவிதை..

- ஆஷிகா,
கொழும்பு 12

## பேனா



என் எண்ணங்களுக்கு
உயிர் கொடுத்தாய்
என் ஆற்றலுக்கு
உருவம் படைத்தாய்
எனக்காய் உன்னை நீ
கொஞ்சம் கொஞ்சமாய்
அழித்துக்கொண்டாய்
உன்னுயிரை எனக்காய்
அர்ப்பணித்தாய்
நீ உண்மையில்
பெரிய தியாகி தான்
நான் சொல்லா விட்டாலும்

- எப்.எஸ்.பாஹிரா, ஹாலிஎல

## பிரிவு



பத்து மாதம்
என்னை சுமந்த
என் அன்னையே
பசிக்கும் போது
ரத்தத்தை பாலாய்
தந்த
என் ஆருயிரே
படிக்கும்போது
ஆசிரியராய் இருந்த
என் தாயே
விளையாடும்போது
தோழியாயிருந்தது
என் அம்மாவே
கடைசியில் என்னை
தன்னந்தனியே
தவிக்க விட்டதற்கு
பெயர் தான்
பிரிவா?

க.சசிரேக்கா, சமர்செட், நாவுலபா

## எண்ணமெல்லாம் இனிக்கும் வண்ணவானவில்!

வண்ணமுறும் விடயதானங்கள் வானவில்லாய் வளைத்ததில்
எண்ணமதை திருடியாம் எட்டுத்திக்கும் - விண்ணதிர
வாசகரை கட்டியெழு வண்ணவானவில் மாசிகையும்
மாசமிருமுறை வருதல் மாதோ!

ஆண்டொன்று கடந்துதான் இரண்டாண்டில் கால்பதிக்கும்
தூண்டாமணி விளக்கம் தூயதமிழ் - பூண்டிதழ்
பரப்புகின்ற வண்ணவானவில் பருவ இதழ் பாரெல்லாம
நிரப்பிடுமே அறிவுலகை நீடு!

மறைகின்ற பண்பாடு மண்ணகத்தே மீண்டெளவும்
குறை நிரப்பு பணியதனை குணமார்செயல் - பறையறையும்
சிறுகதைகள் நெடுமாய்வும் சின்னச்சின்ன கவிதைகளும்
விறுவிறுப்பை தூண்டியே விடும்!

இந்தக்கால சிந்தனைகள் ரம்மியமாய் வானவில்லில்
அந்தரத்தே வண்ணமுற அலங்கரிக்கும் - முந்தியதாம்
கொழும்பு நகர் கோலங்களை கொணர்கின்ற புகைப்படங்கள்
எழும்நினைவூட்டலுக்கே ஏது!

கற்பழிப்பு கொலைசார் கட்டுரைகள் எடுத்தியம்பும்
பொற்பரிய புத்திமதிகள் படித்திடுவீர் - கற்றதனை
மூலதனமாய் வைத்து தான் மீட்சியுறும் வாழ்வியலை
காலமெல்லாம் கொண்டடிக்காண்!

கணனிகற்கை உலகப்புதினம், காரமாகவே சினிமா செய்தி
பணவிரயம் எதுவுமில்லா படிப்பினைகள் - உணர்வதனை
தெளிந்த நல் நிலையதனில் தென்றலென வருடிச்செல்லும்
குளிகைவண்ணவானவில் குளம்!

நீராடலாம் மனங்களில் நீவிடுமாம் விடயங்கள்
பாராட்டப் பாராட்ட பூவுலகத்தே - ஆராட்டலாய்
வண்ணவானவில் மாதமிருமுறை வந்து தான் வளரட்டும்
எண்ணமெல்லாம் இனிக்கும் எனின்!

நாவலியூர்க் கவிராயர்

## தாய்மை



தாய்மை அடையவில்லையென
களங்காதே பெண்ணே
தாய்மை உணர்வை எத்தனை
தாய்மார்கள் இன்று மதிக்கிறார்கள் - எதனால்
தாய்மை என்ற பெயர் கிடைத்ததோ அதை மறந்ததால்
தவழ்கிறது குப்பைத்தொட்டிகளில்
தாய்மைக்கு கிடைத்த பரிசுகள்

- சுகன்யா கணேஷன், நீர்வேலி, யாழ்ப்பாணம்

## வலியும் வலிமையும்



வலியும்
வலிமையும்
நிறைந்தது
காதல்
பிரிந்து சென்றால்
வலியானது
புரிந்து கொண்டால்
வலிமையானது

- நா.கவின் வினோத்
மன்னம்பிட்டி

## கவித்துளிகள்

நீ தந்த நினைவுகளில்
நானும் வாழ்ந்து
வருவதால்
உன் காலங்களும்
விரைகிறது

நான் திடமாகத்தான்
இருந்தேன்
என் உணர்வுகளை
தின்று விட்டாய்
இளசுகளின்
வனப்புகளிலே
வண்டாக குடித்து
முடித்தாய்

நான் மட்டும்
தனிமையிலே
என்றென்றும்
வாழ்வதற்கு
அவள் நினைவுகளை
எப்போதும்
சுமந்திரு மனமே!



வீட்டுக்குள்ளே
வாழ்வில்லையெனில்
சிறகு விரித்து
பறந்திடு
இன்பங்கள்
பல
இருப்பதால்
எங்கும்
உலாவி வா

- மருதங்கேணியூர்
வே.வே.அகிலேஸ்வரன்

## உயிர்



அன்பே!
உன்னை என் உயிர்போல்
நினைத்தேன்
இப்போ உயிரே இல்லாதது போல்
ஆக்கி விட்டாயே
உன்னை நினைத்த பாவத்துக்கு
இதுதான் தண்டனையா?

- ஜே.ஏ.சுகந்தி,
கரோலினா, வட்டவளை

## தட்டுங்கள் மேளத்தை



முதுகு சொறிவதிலும்,
முகத்துதி சொல்வதிலும்
காக்காய் பிடித்து
காரியத்தை வெல்வதிலும்
இலக்கிய உலகத்தில்
எனக்கு நிகர் எவருண்டு?
என்னுடைய படைப்புக்கள்
எதுவாக இருந்தாலும்
அவைகளையெல்லாம் ஆழமென்று சொல்லி
போற்றிப் புகழ்வதற்கும், புதுமையென்று சொல்வதற்கும்
பேர்போன கல்விமான்கள் பத்திரிகை ஆசான்கள்
எல்லோரும் என் கையில் இருப்பதினால் இன்று நான்
சாகித்திய மண்டலத்தால்
தரம்கண்ட படைப்பாளி
பொன்னாடை போர்த்தியென்னை
புகழுங்கள் வானுயர
இலக்கிய உலகத்தில்
இவையெல்லாம் சகசம் தான்
பாரதியும், பாரதிதாசனும்
படைப்பாளி புதுமைப்பித்தனும்
என் எழுத்துக்கு முன்னாலே, மண்
தூசென்று பேசுங்கள் - இன்று இங்கே
கேட்பதற்கு யாருமில்லை, ஒலிவாங்கி உங்களுக்கே
பெருமைக்காய் முற்போக்கை, வாழ்வில் பேசிக்கிழிக்கின்ற
குக்கல்கள் நானல்ல
சித்தாந்தம் பேசி, சீரழிய நானென்ன
முட்டாளா? அல்லது விட்டில்களா?
ஞானமுள்ள படைப்பாளி
நானென்று பேசுங்கள்
வங்கக்கவி தாகூரென்று
என்னை வாய்குளிர புகழுங்கள்
எத்தனையோ பத்திரிகை இதழ்களெல்லாம்
எனக்காக இருக்கின்றன அவை
அத்தனையும் பிரசுரிக்கும் நன்றி செய்யும்
தட்டுங்கள் மேளத்தை தடபுடலாய் மேடையிலே
பொன்னாடை போர்த்தி புகழுங்கள் வானுயர

எஸ்.முத்துமீரான்

## கையெழுத்து

அழகாக இருக்கிறது
உன் கையெழுத்து - அதனால்
பாழாகி போனது
உன் தலையெழுத்து - ஏனெனில்
உன் கையெழுத்தை பார்த்து
அவனுக்கு உன்னில்
காதல் வந்ததினால்

## நினைவுச்சுமைகள்

காதலியை தொலைத்த
காதலனுக்கு
இறைவன் இனாமாக கொடுத்த
தாடியே அவனுக்கு
நினைவுச்சுமையாகின்றது

- சுகன்யா கணேசன், கிறுப்பிட்டி
வடக்கு, யாழ்ப்பாணம்

### வாசக கவிஞர்களுக்கு...

பதினைந்து வரிகளுக்கு மேற்படாத வகையில் நச் கவிதைகளை எழுதி எங்களுக்கு தபாலிலோ, இ-மெயிலிலோ அல்லது எஸ்.எம்.எஸ்.சிலோ அனுப்பி வையுங்கள்

கவிமுற்றம்,
ஆசிரியர், வண்ண வானவில்,
த.பெ இல 1218, கொழும்பு.

மின்னஞ்சல் - vannavaanavil@gmail.com
தொலைபேசி - 0778021501



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்களத் தாயாரை... (3ஆம் பக்கத் தொடர்)

தாய் சிங்களத்தில் பேசும்போதும் அதை விளங்கி பதில் சொல்ல முடியாமல் சந்திரா தவித்தது அங்கு கூடியிருந்தவர்களை கலங்க வைத்தது. இருவரும் முகபாவங்களில் தமது அன்பை வெளிப்படுத்திக்கொண்டிருந்தார்கள். நாற்பத்தைந்து ஆண்டு காலமாக பிரிந்தவர்கள் ஒன்று சேர்ந்தால் பேச்சுவா வேண்டும்..!

எலிஸ் நோனாவிற்கு வயது போயிருந்தாலும் அவரது அந்த மிரட்டும் குரல் தொனி இன்னும் அப்படியே தான் இருக்கிறது. ஆச்சி இப்பவும் சண்டி தான் என்று அவரை அழைத்து வந்தவர்கள் கூறினார்கள். பிறகு எலிஸ் நோனா தனது மகளை சில நாட்கள் தம்முடன் வந்து தங்கும்படி அழைக்க, சந்திராவும் தாயுடன் கம்பஹாவுக்கு சென்றார். அங்கே தனது உறவினர்களுடனும் தாயுடனும் ஒரு வாரத்தை கழித்துவிட்டு திரும்பியிருக்கிறார். இப்போது சந்திரா ஓரளவுக்கு சிங்களம் பேசுகிறார்.

"நான் சின்ன வயதில் கம்பஹாவில் தான் இருந்தேன். அங்கே உள்ள ஒரு சிங்கள ஆரம்ப பாடசாலையில் தான் படித்தேன். எனது பாட்டி சந்தையில் வியாபாரம் செய்து வந்தார். அவருடன் காலை மூன்று மணிக்கே காய்கறி கூடையை தூக்கிக்கொண்டு சந்தைக்கு புறப்பட்டுவிடுவேன். பாட்டி பெரிய தீப்பந்தத்துடன் முன்னால் செல்ல நான் பின்னால் கூடையை தலையில் வைத்து தூக்கிச்செல்வேன். ஒரு நாள் எனது சின்னம்மா வீட்டில் இருந்து ஒரு பத்து ரூபா நோட்டை திருட்டுத்தனமாக எடுத்து வந்து எனது நண்பிகளுக்கு வளையல், இனிப்பு போன்ற பொருட்களை வாங்கிக்கொடுத்து விட்டு மிச்சமிருந்த ஆறு ரூபாவை எனது பாடப்புத்தகத்தில் வைத்துவிட்டேன். இதை கண்டுவிட்ட எனது சின்னம்மா என்னை அடி பின்னியெடுத்துவிட்டார். வலி தாங்காமல் எனது பாட்டி வீட்டிற்கு ஓடினேன். நான் எவ்வளவு பணம் எடுத்தேன் என்பது எனக்குத் தெரியாது. அதனால் எனது பாட்டி அவரிடம் இருந்த பணத்தையெல்லாம் தரையில் போட்டு இதில் எந்த பணத்தை எடுத்தாய் என்று கேட்டு அடித்தார்.

பிறகு என் அம்மாவை வரச்சொல்லி கடிதம் போட்டார்கள். இங்கிரியாவிலிருந்து அம்மா வந்தவுடன் நானும் அம்மாவுடனே-யே புறப்பட்டு சென்றுவிட்டேன் என்கிறார் சந்திரா. இத்துடன் அவரது கம்பஹா வாழ்க்கை முடிவுக்கு வந்துவிட்டது.

"இதைக் கேட்டதும் அன்று என் அக்காவுக்கு அப்படி அடி கிடைத்ததினால் தான் அவர் செல்லத்துரைக்கு மனைவியாகக் கிடைத்தார். என்று சிரிக்கிறார் சந்திராவின் சின்னம்மாவின் மகளான சிரிவர்தன.

"அக்கா அந்த நாட்களில் என்னை அவரின் மடியில் அமர வைத்துக்கொண்டு எனக்கு பாட்டு சொல்லித்தருவார்" என்ற சிறிவர்தன இன்னொரு உண்மையையும் மெக்குச்சொன்னார்.

"உங்கள் ஊருக்கு வருவதற்கு எங்களுக்கு அச்சமாகத்தான் இருந்தது. தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் இந்தப்பகுதிக்கு நாங்கள் வந்து ஏதும் ஆபத்தில் மாட்டிக்கொள்வோமா என்று பயந்தது உண்மை தான்.

பிறகு எனது பெரியம்மா (எலிஸ் நோனா) இருக்கும் தைரியத்தில் தான் வந்தோம். வந்த பின்னரேயே தமிழர்கள் எவ்வளவு நல்லவர்கள் என்பது தெரிந்தது. என் பெரியம்மா மீது அவர்கள் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறார்கள் என்பதும் புரிந்தது. நம்மை அரசியல்வாதிகள் தான் பிரித்துவிட்டார்கள்" என்று பெருமூச்சு விட்டார் சிறிவர்தன. நாமும் கம்பஹா ஒரு சிங்கள ஏரியா என்பதால் அங்கு வருவதற்கு ரொம்பவும் யோசித்தோம் என்று அவரிடம் மனம் திறக்கவும் சிரிப்புடன் சிரித்தார். ஒரே நாட்டில் வாழ்ந்தாலும் தமிழர்களும் சிங்களவர்களும் எவ்வளவு தவறான புரிதலையும் சந்தேகத்தையும் கொண்டிருக்கிறார்கள் பார்த்தீர்களா!

தாய்மொழி மற்றும் தாய் நாட்டைப் பிரிந்த சோகம் பற்றி சந்திரவதியிடம் வினவினோம்.

"தமிழ் நாட்டில் நான் வசித்தாலும் எனது மொழி, எனது உறவினர்கள் பற்றிய ஏக்கம் எனக்கு அடிக்கடி வந்து போகும். கடவுளின் கிருபையால் என் தாயையும், தாய் நாட்டையும் பார்க்கவும் என் தாய்மொழியை கேட்கவும் கிடைத்ததை பெரிய பாக்கியமாக நினைக்கிறேன்" என்றார் சந்திரவதி. தமிழகத்தில் வசித்துவரும் சந்திரவதிக்கு மூன்று பெண்கள் இரண்டு ஆண்கள். அவர்கள் தமிழ்நாட்டு தமிழர்களாகவே மாறிவிட்டார்களாம். சிங்களம் தெரியாது.

மீண்டும் தமது உறவுகள் இலங்கையில் கிடைத்த சந்தோசத்தில் சந்திரவதியும், இந்தியாவில் தமக்கு புது உறவு கிடைத்து விட்ட சந்தோசத்தில் எலிஸ் நோனாவின் உறவினர்களும் மகிழ்ச்சியுடன் விடைபெற்றார்கள்.

---

### அழியாத நினைவுகள்...?

உங்களுடன் அல்லது உங்கள் குடும்பத்துடன் தொடர்புடைய மறக்க முடியாத நிகழ்வுகளை பின்புலமாகக் கொண்ட பழைய புகைப்படங்கள் இருக்குமானால் அந்த சுவாரசியமான கதையை எங்களுக்கு படத்துடன் அனுப்பி வைத்தால் உங்கள் மகிழ்ச்சியை நாங்கள் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வோம்.



மத்துகமை கீகியனகந்த தோட்டத்து கோயில் திருவிழாவில் 1969 ஆம் ஆண்டு ஏகஸ்ட் மாதத்து நாளொன்றில் பேண்ட் வாசித்து விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தோம். அப்போது ஹொரணையிலுள்ள ஒரு ஸ்டுடியோவில் ஞாபகமாக இருக்கட்டுமே என்று இந்தப்படத்தை பிடித்தோம். இந்தப்படத்தில் (இ-வ) பழனியாண்டி, ராமையா, தர்மன், கோபால், கடைசியாக நான் முருகேசு ஆகியோர் காணப்படுகின்றனர். எங்கள் ஜவரிடம் இந்தப் படத்தின் ஒவ்வொரு போட்டோ பிரதி இருந்தது.

அப்போது நான் இங்கிரிய ஹரகம தோட்ட மேற்பிரிவில் வசித்து வந்தேன். கங்காணி வேலை செய்து இப்போது ஓய்வு பெற்று அங்கேயே வசித்து வருகிறேன். படத்தில் இருப்பவர்களில் கோபால் இந்தியாவில் குடியேறி அங்கே இறந்து விட்டதாக அறிந்தேன். ஆனால் பழனியாண்டி, தர்மன், ராமையாவுக்கு என்ன நடந்தது என்பது தான் தெரியவில்லை. இந்தப்படத்தை பார்த்து விட்டாவது அவர்கள் என்னுடன் தொடர்பு கொள்வார்களா?

**எம்.முருகேசு - இங்கிரிய**



இலங்கை தமிழக இலக்கிய நட்புறவு பேரவை உலக சிற்றிதழ்கள் சங்கம், புரவலர் புத்தக பூங்கா இணைந்து நடத்திய இலங்கை - சிங்கப்பூர் மலேசிய தமிழ் இலக்கிய பயணம் மேற்கொண்ட தமிழக உறவுகளை வரவேற்று வாழ்த்தும் நிகழ்வு அண்மையில் கொழும்பு தமிழ்சங்கத்தில் நடைபெற்றபோது கலந்துகொண்ட பேராளர்கள். (படம் - கே.வசீகரன்)

---

### ஊருக்கு வெளியே...



சரியான விடை:

**லோரன்ஸ்**

1. எஸ்.ரேகா - மொரட்டுவை
2. ஜெனிபர் - மருதமுனை
3. தெ.தேனிகா - மிருசுவில்
4. மோனிஷா - ஹரகம
5. ஆர்.பிரியன் - வாழைச்சேனை
6. கே.கௌசல்யா - தெபுவனை
7. எஸ்.காயத்திரி - தெமட்டகொடை
8. கே.சூரியகலா - ஹரகம மே.பி
9. பி.துஷானி - பலாங்கொடை
10. அமுதா - நோர்வுட்
11. வித்தியசாந்தினி - கிளிநொச்சி
12. தீபா - கிளிநொச்சி
13. சசிக்கலா - அவிஸ்ஸாவலை
14. கே.கௌரி - நுவரெலியா
15. எச்.ரியாஷா - கஹாவத்தை
16. பாத்திமா நசீரா - கொழும்பு 15
17. ஜி.ஹேமா - நீர்கொழும்பு
18. கோமதி - அழிபுரம்
19. சுதர்சனி - மானிப்பாய்
20. எம்.தவமணி - புலக்கிட்டிய
21. பி.சுவேதா - புத்தூர்
22. மாதவன் - நம்பொன
23. எஸ்.கவிசாந்தன் - அட்டன்
24. கோபி - இரக்குவானை
25. எம்.லோகேஸ்வரன் - நாவலப்பிட்டிய
26. முரளி - நோர்வுட்
27. எஸ்.தர்ஷினி - இரத்தினபுரி
28. ரஞ்சித்குமார் - மேத கஹத்துவ
29. ஜெகன் - வவுனியா
30. எஸ்.பிரமிளா - சாமிமலை

### குறுக்கெழுத்து போட்டி - 11

விடைகள்

**இடமிருந்து வலம்**

திருகோணமலை, வாகம், திக்கு, காவிரி, வலம், வைரமுத்து, பாபம், ஈவெரா, நம்நம்தம், ராஜ்ய சபா, பிகாசோ, இனம், நிதம், இல்லாள்

**மேலிருந்து கீழ்**

திகி, குவாணி, கோகுலம், மணி, கரிகாலன், காரம், மனா, வைபவம், முத்தம், துவரம், பாண்டு, சசன், வெங்காயம், ராமராஜன், வாசம், தம்பி, போய், சம்சாரி, பிள்ளை, காதல், சவாரி, இனம்

சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

ஏ.ஜே.பாத்திமா பஸ்னா - கொட்டகாவத்தை

பிரமிளா முத்துகிருஷ்ணன் - பசுப்பானம்

எம்.ஜியாஸ்மேன் - பேருவளை

---



இரத்தினபுரி மாவட்டத்தில் தமிழ் மொழி மூல சிறந்த ஆசிரியையாக காவத்தை பொறலுவ தமிழ் மகா வித்தியாலயத்தை சேர்ந்த டி.தேவிகாராணி 'பிரதீபா பிரபா' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அவர்களால் அண்மையில் இந்த விருது வழங்கல் நிகழ்வு இடம்பெற்றது. இரத்தினபுரி மாவட்டத்தில் பிரதீபா பிரபா விருதை வென்ற ஒரேயொரு தமிழ்மொழி மூல ஆசிரியை இவராவார்.

### சொல் விளையாட்டு - 11

சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**

களனி கங்கை, டில்லி, தாமிரபரணி, கனி, சிவாஜி

**மேலிருந்து கீழ்**

கண்டி, கதலி, கைகேயி, தாகம், மினி, ரசிகை, பவானி, ரஜினி

சரியான விடை அனுப்பியோரில் பெயர்கள் இடம்பெறும் ஆறு அதிர்ஷ்டசாலிகள்

பாத்திமா பஸ்னா - கொட்டகாவத்தை
கே.இந்திராணி - கொட்டகலை
எம்.ராஜதுரை - மட்டக்களப்பு
ஆர்.கிஷான் - நவகம்புர
கே.கோகுல் - வாழைச்சேனை
சி.ராம்பிரபு - மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மருத்துவ இலக்கியவாதியான டாக்டர் முருகானந்தன்



பதுளையிலும் அதன் பிறகு மந்திகை அரச மருத்துவ மனையிலும் ஒரு நான்கு வருடம் பணியாற்றிய பிறகு ஒரு அசைக்கமுடியா மனத்துணிவுடன் பருத்தித்துறையில் அவர் நிறுவிய தனியார் மருத்துவமனையில் தான் இப்போது அமர்ந்திருக்கின்றேன். உடன் வந்த இலக்கிய நண்பர்களுடன் மார்ச் 1980 இல்.

ஒரு அசாத்திய மன தைரியத்துடன் அவர் ஆரம்பித்த மருத்துவமனை இது என்று நான் கூறுவதற்கான காரணங்கள் பல உண்டு. முக்கியமானது இரண்டு. ஒரு டொக்டராகி, அரச ஆஸ்பத்திரியில் பணி ஏற்றுக்கொள்வது எத்தனை பெரிய சாதனையோ அதைவிட பெரிய சாதனை தான் பென்ஷனுக்காகவென்று தனது சுயமரியாதை அனைத்தையும் விட்டுக்கொடுத்து மருத்துவத்துறைக்கு அப்பாலான அரச அதிகாரிகளுடன் ஒத்துப்போய் மாரடிப்பது.

பென்ஷன் பணத்துக்காக பெருமாள் மாடாக எல்லாருக்கும் எல்லாவற்றிற்கும் தலையாட்டிக் கொண்டிருக்காமல் ஒரு துணிச்சலுடன் அரச டொக்டர் பதவியை உதறி எறிந்துவிட்டு அவதியுற்று அல்லல் படும் தன் மக்களுக்கு மருத்துவ பணியாற்ற ஒரு டிஸ்பென்சரி தொடங்கிய முருகானந்தனது தைரியத்தையும் மனத்திடத்தையும் என்னவென்பது! இது முதலாவது காரணம்.


முருகானந்தன்

பருத்தித்துறையில் இவர் மருத்துவ மனை தொடங்கிய ஆண்டு 1980. எண்பதுகளின் யாழ் குடாநாட்டைப் பற்றி நாம் பேசத் தேவை இல்லை. 1977இல் எரிந்ததைப் போலவே எண்பதுகளிலும் எரிந்தது. இதற்குள்ளும் பருத்தித்துறையில் மருத்துவ மனை நடத்திய மனத்துணிவு இரண்டாவது காரணம்.

பருத்தித்துறை சந்தியை நான்கு முருகானந்தன் டிஸ்பென்சரியிடம் கார் நின்றபோது அடித்துத் திரும்பியபடி ஒரு மினி பஸ் நின்றது. முருகானந்தன் சந்தி இறங்கு, என்று பஸ் நடத்துனர் குரல் கொடுக்கின்றார்.

டிஸ்பென்சரியை வைத்து டொக்டரும் டொக்டரை வைத்து சந்தியும் பெயர் கொண்டு விட்டன. டிஸ்பென்சரியும் பார்மஸியும் என்று தான் பெயர் பலகை இருக்கிறது. ஆனாலும் மக்களால் முருகானந்தன் பாமஸி என்றே பெயர் பெற்றுவிட்ட மருத்துவ மனை டொக்டர் முருகானந்தனுடையது.

பஸ் ஓடிவிட்ட பிறகு, டிஸ்பென்சரிக்கு முன்னால் பாதையோரம் நிற்கின்ற லைட் கம்பத்தை காட்டி, பார்த்துக்கொள்ளுங்கள் அது பற்றிய கதையை பிறகு கூறுகின்றேன் என்றார்.




வடையும் தேனீரும் கதைத்துக்கொண்டிருந்தபோது அதைக் கூறினார். கட்டுக் கொள்ளப்பட்டு லைட் கம்பத்தில் தொங்கவிடப்படும் துரோகிகள் பற்றி அறிந்திருப்பீர்கள். கேள்விப் பட்டிருப்பீர்கள் வாசித்திருப்பீர்கள். அதில் ஒன்று தான் இதுவும்.

கசமுசா என்னும் பேச்சோசையுடன் சூட்டுச்சத்தம் கேட்கும். கதவு ஜன்னல்களை திறந்து பார்க்கவும் இயலாது. வெளியே வரவும் முடியாது. ஆனாலும் துரோகி என்னும் பட்டத்துடன் ஒரு சடலம் தொங்கவிடப்பட்டிருக்கும். இவற்றின் மத்தியில் தான் வாழ்கின்றோம் என்று கூறினார்.

(தொடரும்)

# பவளவிழா கண்ட பல்துறை வித்தகர் கே.எஸ்.சிவகுமாரன்

நம் நாட்டு கலை இலக்கிய துறையில் சிறுகதை எழுத்தாளராகவும், பத்தி எழுத்தாளராகவும், திறனாய்வாளராகவும் பலராலும் அறியப்பட்டவர் கே.எஸ்.சிவகுமாரன். இதற்கும் மேலாக வானொலி அறிவிப்பாளராகவும், பத்திரிகை ஆசிரியராகவும், மொழி பெயர்ப்பாளராகவும், ஆங்கில ஆசிரியராகவும் விளங்கிய பெருமைக்குரியவர். பல்துறை வித்தகரான இவர் கடந்த அக்டோபர் மாதம் முதலாம் திகதியன்று அகவை எழுபத்தைந்தை நிறைவுசெய்து பவளவிழா கண்டார்.

இவர் கலை, இலக்கியம், சினிமா சம்பந்தப்பட்டதாக இதுவரையில் 27 நூல்களை எழுதியிருக்கிறார். இவரது சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், திறனாய்வுகள் என்பன தமிழ் - ஆங்கிலப்பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவரது நூல்களுள் 'இருமை' என்ற பெயரிலான சிறுகதை தொகுதியொன்றும் இடம்பெற்றுள்ளது.

நான்கு தசாப்த காலத்துக்கு முன்னர் மனத்தியல் என்ற பெயரில் தினகரன் - வாரமஞ்சரியில் இவர் எழுதிவந்த பத்தி எழுத்துக்கள், அந்நாளில் பெருமளவு வாசகர்களின் அபிமானத்தை பெற்றிருந்தன.

இவர் இலங்கை வானொலியின் தமிழ், ஆங்கில மொழிகளில் அறிவிப்பாளராக ஏககாலத்தில் பணியாற்றிய பெருமைக்குரியவர். கலை, இலக்கியம், மற்றும் இந்து சமயம் சம்பந்தப்பட்ட இவரது பேச்சுகள் இலங்கை வானொலியின் ஆங்கில சேவையில் ஒலிபரப்பாகி வந்துள்ளன. ஓமான், மாலை தீவு போன்ற வெளிநாடுகளில் ஆங்கில ஆசிரியராக கடமையாற்றியுள்ளார். இப்போதும் கொழும்பு தெற்கு சர்வதேச கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகவிருக்கும் இவர், அதே கல்லூரியின் பகுதித் தலைவராகவும் பணியாற்றுகின்றார்.


கே.எஸ்.சிவகுமாரன்

## வண்ண வானவில் வாழ்த்துகிறது!

**யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பவளவிழா நிகழ்வு**

இவரது அகவை எழுபத்தைந்து நிறைவையொட்டிய பவளவிழா வைபவமும் ஜீவநதி பவளவிழா சிறப்பிதழ் வெளியீடும், அவரது பிறந்தநாளான கடந்த அக்டோபர் முதலாம் திகதியன்று இனியதொரு மாலைப்பொழுதில். ஜீவநதி - மாதாந்த சஞ்சிகையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அல்வாய் கலை அகம் மண்டபத்தில் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெற்ற இந்தச் சிறப்பு நிகழ்வின் தொடக்கமாக செ.கணேசன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பேராசிரியர் சிவலிங்கராஜா தலைமையுரையாற்றும்போது, கே.எஸ்.சிவகுமாரனின் எழுத்துக்கள் எனக்கு நன்றாக பிடித்திருக்கின்றன. நல்ல விஷயங்களை பாராட்டுவது என்பது இவரிடம் கண்ட முக்கியமான அம்சமாகும். சிறந்த ஆங்கில புலமைகொண்ட இவர் பன்முகமான ஆளுமை மிக்கவர். ஜீவநதி இவரது எழுபத்தைந்து வருட நிறைவையொட்டி விழா எடுத்திருப்பதுடன், பவளவிழா சிறப்பிதழாக வெளியிட்டிருப்பதும் பாராட்டப்பட வேண்டியன எனக் கூறினார்.

வெளியீட்டுரை நிகழ்த்திய மண்டூர் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அதிபர் முருகைசலிங்கம், இவர் மனிதம் நிறைந்த மனிதராக காணப்படுகிறார் என்றுரைத்தார். ஐம்பது வருடங்களுக்கும் மேலாக இலக்கிய சேவையை ஆற்றி வரும் இவர், நூல்கள் எல்லாவற்றையும் அவதானத்துடனும், பொறுமையுடனும் வாசித்து தனது திறனாய்வுகளை செய்து வந்திருப்பது போற்றத்தக்க முயற்சியாகும். ஜீவநதி பவளவிழா சிறப்பிதழின் ஊடாக இவரது பல்வகையான ஆளுமையை கண்டுகொள்ள முடிந்தது என்றும் குறிப்பிட்டார்.

இந்த வைபவத்தில் வாழ்த்துரை வழங்கிய எழுத்தாளர் தெணியான், ''இலக்கிய உலகில் பல துறைகளிலும் கால்பதித்த இவர், சிறந்த ஆளுமையும், புலமையும் கொண்டவர் என்றார். தமிழ் மற்றும் மேலைத்தேச திரைப்படங்களைப்பற்றி சிறப்பாக எடுத்துச்சொல்லும் திறமை இவரிடம் உண்டு. பொருத்தமான நேரத்தில் இந்த சிறப்பிதழை மிகவும் திறமையாக வடிவமைத்து வெளியிட்டிருக்கும் ஜீவநதி ஆசிரியர் பரணிதரன் பெரிதும் பாராட்டப்படவேண்டியவர்'' என்று மேலும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வின்போது எழுத்தாளர் அ.யோகராசா, கலாநிதி த.கலாமணி ஆகியோரும் வாழ்த்துரைகள் வழங்கினார்கள். பவளவிழா நாயகன் கே.எஸ்.சிவகுமாரன் 'எனது திறனாய்வு அணுகுமுறை' எனும் பொருளில் சிறப்புரையாற்றினார். இதன் பின் இடம்பெற்ற கலந்துரையாடலைத்தொடர்ந்து, ஜீவநதி ஆசிரியர் க.பரணிதரனின் நன்றியுரையுடன் சிறப்பு நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது. இலக்கிய ஆர்வலர்கள் பலர் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.


**ஜீவநதி - கே.எஸ்.சிவகுமாரனின் பவளவிழா சிறப்பிதழ்**


வடமராட்சியிலுள்ள அல்வாய் கிராமத்திலிருந்து கலை இலக்கிய சஞ்சிகையாக மாதந்தோறும் வெளிவந்து கொண்டிருக்கிறது. வெ.துஷ்யந்தன் துணை ஆசிரியராகவும் கலாநிதி த.கலாமணி பதிப்பாசிரியராகவும் பணியாற்றுவதுடன் பிரபல எழுத்தாளர் தெணியான், கிருபாராஜா ஆகியோர் சஞ்சிகையின் ஆலோசகர்களாகவும் இருக்கிறார்கள்.

கே.எஸ்.சிவகுமாரனின் பவள விழா சிறப்பிதழாக மலர்ந்துள்ள அக்டோபர் மாத ஜீவநதி சஞ்சிகை வழமையான அம்சங்களுக்கு பதிலாக முற்றுமுழுதாக பவளவிழா நாயகனைப்பற்றிய விடயங்களை தாங்கியதாகவே வெளிவந்திருப்பதை சிறப்பாக குறிப்பிடவேண்டும்.

இதன்பொருட்டு க.பரணிதரன் மற்றும் சஞ்சிகை வெளியீடு சார்பான ஏனையோரும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

- அ.கனகசூரியர்


கொழும்பு கிராண்ட்பாஸ் ஸ்ரீ நாராயண குரு மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீ நாராயண குருவின் 157 வது ஜயந்தி விழாவில் நடைபெற்ற வாணி ஷேத்திரா நடன அகடமி மாணவிகள் மேடையேற்றிய நடன நிகழ்வின் இரண்டு தோற்றங்கள்.
படப்பிடிப்பு : ஏ.மதுரைவீரன்


கொழும்பு பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் வாணி விழா சரஸ்வதி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் இடம்பெற்ற கொலு நடனக்காட்சியையும் நிகழ்வில் கலந்துகொண்ட இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப்பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் மற்றும் கல்லூரி அதிபர் கோதை நகுலராஜா ஆகியோரையும் படத்தில் காண்க.
படப்பிடிப்பு : ஏ.மதுரைவீரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் சமூக, கலை, கலாசார துறைகளில் சேவையாற்றும் ஏ.ஏ.ஏ நிறுவனம்




போர்க்கால சூழ்நிலைக்குப் பின்னர் வடபகுதி வழமை நிலைக்கு திரும்பியுள்ள நிலையில் கடந்த காலங்களில் பலவித துன்பங்களையும் இழப்புகளையும் சந்தித்த வட பகுதி வாழ் மக்கள் வாழ்வில் வசந்தம் வீச வேண்டும் என்பதற்காக அரசாங்கமும், அரச சார்பற்ற நிறுவனங்களும் மற்றும் தனியார் அமைப்புகளும் பல்வேறுபட்ட சமூக நலத்திட்டங்களுடன், மக்களின் பொழுதுபோக்கிற்கும் அவர்களது மகிழ்ச்சிக்கும் உரியதான செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றன.

இந்த வகையில் ஏஏஏ வென்சர்ஸ் பிரைவேட் லிமிட்டட் என்ற நிறுவனமும் கடந்த ஓராண்டுக்கும் மேலாக யாழ்ப்பாணத்திலிருந்து செயற்பட்டு வருகிறது. இதன் கீழ் இயங்கும் மற்றுமொரு அங்கமான ஏஏஏ மூவிஸ் இன்டர்நஷனல் திரைப்படம் மற்றும் ஆவணப்படத்தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறது. இதற்கும் மேலாக இந்த நிறுவனம் யுவர் பிரென்ட்ஸ் பவுன்டேசன் என்ற அமைப்புடன் இணைந்த வகையிலும் பன்முக சேவைகளை முன்னெடுத்து செல்கிறது.

யாழ்ப்பாணம், பிறவுன் வீதி 92ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள அலுவலகத்திலிருந்து செயற்பட்டு வரும் இந்த அமைப்பின் தலைவராகவும் நிர்வாக பணிப்பாளராகவும் க.செவ்வேள் விளங்குகிறார். இதன் நிர்வாக நிறைவேற்று அலுவலராக பா.நிரோஜன் பொதுசன தொடர்பு அலுவலராக ஆர்.துவாரகன் ஆகியோர் கடமையாற்றுகிறார்கள்.

நிர்வாக பணிப்பாளர் க.செவ்வேளை சந்தித்தபோது நிறுவனத்தின் செயற்பாடுகள் பற்றி அறிய முடிந்தது. பாலர் பாடசாலை மற்றும் ஆரம்ப பாடசாலை மாணவர்களது கல்விச்செயற்பாட்டுக்கு உதவுவதே தங்களது சமூகநலத்திட்டத்தின் ஆரம்ப கட்ட சேவையாக அமைந்துள்ளது என்கிறார் செவ்வேள்.


கேசவராஜன்


மிரோஜன்


துவாரகன்

இதன் பிரகாரம் யாழ் மாவட்டம், கிளிநொச்சி மற்றும் வன்னிப்பகுதிகளிலுள்ள பாதிக்கப்பட்ட பாடசாலைகளைச்சேர்ந்த வசதி குறைந்த மாணவர்களுக்கு சீருடைத்துணிகளும் துவிச்சக்கர வண்டிகளும், புத்தகப்பைகளும் பாதணிகள் மற்றும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள புன்னை நீராவி அரச தமிழ்க்கலவன் பாடசாலையின் விளையாட்டு மைதானம் மற்றும் மலசலகூடம் என்பனவற்றை திருத்தியமைப்பதற்கு இரண்டு இலட்சம் ரூபா நிதியுதவியுடன் இதே பாடசாலை மாணவர்களின் கணினி அறிவை விருத்தி செய்வதற்காக ஐந்து கணினிகளும், கிளிநொச்சி பாரதி வித்தியாலய மாணவர்களது கணினி அறிவை விருத்தி செய்வதற்காக பத்து கணினிகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன என்கிறார் செவ்வேள்.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கடந்த அக்டோபர் முதலாம் திகதியன்று சிறுவர் விவகார பெண்கள் அபிவிருத்தி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டு அலரிமாளிகையில் ஜனாதிபதி முன்னிலையில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வில் கலந்துகொள்வதற்காக எங்கள் நிறுவனத்தின் செலவில் போக்குவரத்து ஏற்பாடுகளைச்செய்து ஊரெழு கணேச வித்தியாலயம், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், கிளிநொச்சி பாரதி வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்களை அழைத்துச்சென்றோம். சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப்போட்டியொன்றையும் ஏற்பாடு செய்து நடத்தியிருக்கிறோம் என்றும் சொல்கிறார் க.செவ்வேள்.

வடபகுதியின் சில இடங்களில் சிறுவர்களுக்கான சர்வதேச தரத்திலான முன்பள்ளிகளை அமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்து வருவதாகவும் அவர் மேலும் கூறினார். கடந்த ஆண்டில் குறுந்திரைப்படப்போட்டியொன்றையும் நடத்தியிருந்தோம். சிறந்த படம் மற்றும் சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த இசையமைப்பாளர், சிறந்த கதைவசன கர்த்தா, சிறந்த இயக்குநர், சிறந்த குழந்தை நட்சத்திரம் என்போர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இது தவிர, விளையாட்டுத்துறை சாதனையாளர்களை தெரிவு செய்து அவர்களுக்கும் விருதுகள் வழங்கியிருந்தோம். என்று மேலும் தமது பணிகளை அவர் பட்டியலிட்டார்.

இவரது தலைமையில் இயங்கும் ஏஏஏ மூவிஸ் இன்டர் நஷனல் நிறுவனத்தின் தயாரிப்பாக வெளிவர இருக்கும் ''பனை மரக்காடு'' திரைப்படம் பற்றியும் செவ்வேள் தகவல் தந்தார். "பேசாத கண்ணும் பேசுமே, காதல் டொட் கொம், கோடம்பாக்கம் ஆகிய திரைப்படங்களை தென்னிந்தியத்தயாரிப்பாக வெளியிட்டிருக்கிறேன். இங்கிருந்து இப்போது பனைமரக்காடு என்ற பெயரில் திரைப்படமொன்றை தயாரித்து வருகிறேன். சொந்த மண்ணில் ஒரு திரைப்படம் தயாரிக்க வேண்டும் என்ற எனது நீண்ட நாள் விருப்பம் இப்போது நிறைவேறியிருக்கிறது. இத்திரைப்படம் விரைவில் வெளியாகும் என்கிறார்.


ஏ.ஏ.ஏ. வென்சர்ஸ் நிறுவனத் தலைவர் செவ்வேள்

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களை வெளிப்படுத்துவதாகவும் அவர்களது உண்மையான வாழ்வை சித்தரிப்பதாகவும் திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது. இந்த திரைப்படத்தின் இயக்குநராக ந.கேசவராஜன் பணிபுரிகிறார். தென்னிந்திய நட்சத்திரமான ஜெகதீஸ் கதாநாயகனாகவும் இலங்கையை சேர்ந்த அக்சரா கதாநாயகியாகவும் நடிக்கிறார்கள். யாழ் மண்வாசனை கொண்டதாகவிருக்கும் இப்படத்தில் இலங்கை கலைஞர்கள் பலரும் நடித்து வருகிறார்கள். படப்பிடிப்பு காட்சிகள் முற்றுமுழுதாக இலங்கையிலேயே இடம்பெற்று வருகின்றன. பாடல்களை நம்நாட்டு கவிஞர்களான பொன் சுகந்தன், அஸ்மின், தட்சாயணி, சி.பாலகுமார், ந.கேசவராஜன் ஆகியோர் இயற்றியிருக்கிறார்கள். தென்னிந்திய பாடகர்களே பாடல்களை பாடியிருக்கிறார்கள்.

விமல்ராஜ் இசையமைத்துள்ளார். திரைப்படத்தில் இம்பெறும் ஆறு பாடல்கள் அடங்கிய இறுவட்டு வெளியீடு கடந்த ஆகஸ்ட் மாதம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. என்று சொன்ன செவ்வேள், ஏஏஏ மூவிஸ் இன்டர்நெஷனல் ஊடாக தெய்வ வலம் என்ற பெயரில் ஆவணப்படமொன்றை வெளியிட்டிருப்பதாகவும், தொன்மைச்சிறப்பும் சரித்திரப்பிரசித்தியும் வாய்ந்த தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வரலாறு மற்றும் ஆலயக்காட்சிகளை சித்தரிக்கும் வகையில் அமைந்துள்ள இந்த ஆவணப்படம் இருபத்தைந்து நிமிடங்கள் கொண்டதாக உள்ளதது. வட பகுதியிலுள்ள இந்துக்கோயில்களை ஆவணப்படுத்தும் பணியின் முதல் முயற்சியாகவே இது அமைந்திருக்கிறது என்றார் செவ்வேள்.

அ.கனகசூரியர்


அமைச்சர் திஸ்ஸ கரலியத்த பாடல் இறுவட்டை வெளியிட்டு வைக்கிறார். நடுவில் செவ்வேள், கதாநாயகியும் இயக்குநரும் அருகே.

# மனிதன் உருவாக்கும் பஞ்சமும் பட்டினியும்

சோமாலியாவின் நிலவும் மிக மோசமான வறுமை தொடருமானால் எதிர்வரும் 4 மாதங்களுக்குள் பட்டினிச்சாவால் உயிரிழப்போர் எண்ணிக்கை ஏழு லட்சத்து 50 ஆயிரம் எண்ணிக்கையை தாண்டும் என ஐ.நா எச்சரித்துள்ளது.

கடந்த 60 வருடங்களில் கிழக்கு ஆபிரிக்காவில் ஏற்பட்டுள்ள மிக மோசமான பஞ்சம் இதுவெனவும் தெற்கு ஆபிரிக்காவின் பெரும்பாலான பகுதிகளை அல் கைதாவுடன் தொடர்புடைய அல் ஷாபாப் இஸ்லாமிய குழு தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதுடன், அங்கு இன்னமும் மிக மோசமான பட்டினி நிலைமை காணப்படுகிறது என்றும் ஐ.நா கூறியிருக்கிறது.

உடனடியாக 12 மில்லியன் சோமாலியர்களுக்கு உணவுதவி தேவைப்படுவதாக அவசர கோரிக்கை விடுத்துள்ள ஐ.நா, பே நகரத்தை சோமாலியாவின் ஆறாவது பஞ்சம் தலை விரித்தாடும் பிரதேசமாக அறிவித்துள்ளது. சுமார் 4 மில்லியனுக்கு மேற்பட்ட சோமாலிய மக்கள் வறுமையில் வாடிவருகின்ற போதிலும் 750,000 பேர் அடுத்து வரும் நான்கு மாதங்களில் இறக்கும் தருவாயில் உள்ளதாக தெரியவந்திருக்கிறது.

இதுவரை உயிரிழந்தோரின் அரைவாசிப்பேருக்கு மேல் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பட்டினி, பஞ்சம் என்பன ஜிபுட்டி, எரித்திரியா, எதியோப்பியா, கென்யா மற்றும் உகண்டா போன்ற நாடுகளையும் பாதிக்கத்தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பஞ்சம் தலைவிரித்தாடும் பகுதிகளை ஐ.நா மோசமான பஞ்சம் நிலவும் பகுதிகள் என உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

ஒரு பகுதியில் உள்ள 30 சதவீதத்துக்கு அதிகமான குழந்தைகள் ஊக்கச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டிருந்தால் மோசமான பஞ்சம் என்று அர்த்தம்.

தினந்தோறும் 10000 பேர்க்ளில் இரு ஆடவர்கள் அல்லது நான்கு சிறார்கள் உணவின்றி மரணமடைதல் மற்றும் தினந்தோறும் 2100 கிலோ கேலரி க்கு மேல் உணவு தேவைப்படும் அளவு சனத்தொகை இருத்தல் என்பனவும் மோசமான பஞ்சம் என்பதற்கான அளவீடுகளாகும். இந்தப்பஞ்சத்துக்கு இயற்கை மட்டும் காரணம் அல்ல. உலக நாடுகளில் ஏற்படும் பஞ்ச நிலை பெரும்பாலும் மனிதன் - அந்நாடுகளின் மோசமான தலைவர்கள் - உருவாக்குபவை என்பதே உண்மை. எதியோப்பியா ஒரு காலத்தில் செல்வம் கொழித்த நாடு. சம்சன் - டிலைலா வாழ்ந்த நாடு. அங்கே அரச ஆட்சியை கவிழ்த்துவிட்டு புரட்சியாளர்கள் பதவிக்கு வந்த பின்னரே சரியான பொருளாதாரக்கொள்கை கடைபிடிக்கப்படாத காரணத்தினாலும் அவர்கள் நேர்மையற்றவர்களாக இருந்ததாலும் விவசாயமும் தொழில்துறையும் பாழ்பட்டுப்போனது. எதியோப்பியா பஞ்ச நாடானது. பஞ்ச நாடுகளாகக்கருதப்படும் எரித்திரியா, ஜிபுட்டி, கென்யா, உகண்டா என்பன இயற்கை வரட்சியை தாங்கிக்கொண்டு விவசாய அபிவிருத்தியில் வெற்றி காணக்கூடிய நாடுகளே. எனினும் தொடர்ச்சியாக ஊழல், லஞ்சப்பேர்வழிகளால் இந்நாடுகள் ஆழப்படுவதும் உள்நாட்டு மோதல்களை முடிவுக்கு கொண்டுவரமுடியாத உள்நாட்டு சிக்கல்களும் இந்தக்குழப்பங்களை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி பணம் குவிக்கும் பண முதலைகளுமே இந்தப் பஞ்சத்தை நாடுகளில் உருவாக்குகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு: ஜெயா, ஹுனுப்பிட்டி



வானவில் மங்கை



# நம்ப வேண்டாம்! மைக்ரோவேவ் மூடநம்பிக்கைகளை!



### மைக்ரோவேவ் உங்கள் உற்ற தோழன் என்பதை உணர்த்தும் கட்டுரை இது

இல்லத்தரசிகளான நாம் சில விஷயங்களை புரிந்துகொள்வதில்லை. விஞ்ஞான ரீதியான விளக்கங்கள் இருந்தாலும் அவை பற்றி கவலை படாமல் வதந்திகளையும், யாரோ சொன்னவற்றையும் வேத வாக்காக கருதி அலட்டிக்கொள்வோம். ஏன், எதற்கு, எப்படி என்பது பற்றி யோசிக்காமல் நாம், கை, கால் சேர்த்து மற்றவர்களுக்கும் சொல்ல, புரளி கிளப்புவோம்.

இத்தகைய புரளிகளுக்கு ஆட்பட்ட ஒரு அப்பாவி உபகரணம் தான் மைக்ரோவேவ் அவன். மைக்ரோவேவ் அவனில் சமைத்தால் புற்று நோய் வரும். உணவில் உள்ள சத்துகள் அழிந்து விடும். நீண்ட கால விளைவுகள் தோன்றும் என்றும் இன்னும் பலவுமாக மைக்ரோவேவ் புரளிகள் நிலவி வருகின்றன. இங்கு மட்டுமல்ல. இந்தியாவிலும் இதே கதை தான். இதனால் இதைச்சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் அடிக்கடி மைக்ரோ வேவைப்பயன்படுத்தி என்னென்ன சமைக்கலாம் என்று டி.வி நிகழ்ச்சிகள் ஊடாக கிளாஸ் நடத்தி வரவேண்டியிருக்கிறது.

ஆனாலும் பாருங்கள், அனே-கமாக எல்லா வீடுகளிலும் மைக்ரோவேவ் அழகாக அவர்களின் சமையல் அறைகளில் உட்கார்ந்து கொண்டிருக்கும். அவர்களில் பெரும்பாலோனோர் உணவு பொருட்களை சூடாக்குவதற்கான உபகரணமாகவே மைக்ரோவேவை பயன்படுத்தி வருகிறார்கள். அதாவது ஒரு ஹீட்டராக, அதில் சமைப்பதில்லை. காரணம் மூடநம்பிக்கை எனினும், அழகுப்பொருளாக, கௌரவச்சின்னமாக இது உட்கார்ந்துகொண்டிருக்கிறது.

நோய் வரும் என்பது சுத்த பேத்தல். இந்த அவசர உலகில் அது நமக்கு ரொம்பத்தேவையானது. ஆரோக்கிய சமையலுக்கு உறு துணையாக இருக்கிறது மைக்ரோ.

இதில் சமைக்கும்போது உணவுப்பொருட்களில் உள்ள சத்துக்கள் அழியாது. முழுமையாக நம் உடலுக்குக்கிடைக்கும். அது மட்டுமா...? சிறிதளவே எண்ணெய் பாவிப்பதால் கொலஸ்ட்ரோல் ஏற்படாது. மிகவும் விரைவாகவும் களைப்பின்றியும் வியர்க்காமலும் சமைக்கலாம் என்பது கூடுதல் நன்மை. பாத்திரத்தை வைத்துவிட்டு பக்கத்திலேயே நின்று கொண்டிருக்க வேண்டிய அவசியம் கூட இல்லை. சமைத்த பாத்திரத்திலேயே உட்கொள்ளலாம். இதனால் கழுவும் சிரமம் கூட குறைவு தானே..! மைக்ரோ சமையலில் காய்கறிகளின் நிறம் மாறாது. மேசையில் வைத்தால் பார்க்க அழகாக இருக்கும். பாத்திரமான மண் சட்டியிலும் சமைக்கலாம். சுவை மாறவே மாறாது. மற்றும் பீங்கான் கண்ணாடிப்பாத்திரங்கள் போன்றவற்றில் சுற்றி உலோக டிசைன்கள் இல்லாவிட்டால், தாரா-ளமாக பாவிக்கலாம். இதில் இல்லத்தரசிகள் மட்டுமல்ல. ஆண்களும், சிறுவர்களும்கூட சமைக்கலாம். இதில் விதவிதமான உணவுகளை செய்யலாம்.

காலைச்சிற்றுண்டியான இட்லி, உப்புமா, பகல் உணவுக்கு சோறு, கறி வகைகள், ஒம்லட் பலகாரங்களான பொங்கல், கேசரி, வட்டிலாப்பம் போன்றனவெல்லாம் செய்யலாம். ஆனால் பொறித்து எடுக்கும் உணவுகளை பொறித்தெடுக்க முடியாது என்பது உண்மையே. பப்படத்தை பொறிக்க முடியாது. ஆனால் சுட்டெடுக்கலாம். இதுவும் சுவையாகவே இருக்கும். எனவே உங்கள் வீடுகளில் தூங்கிக் கொண்டிருக்கும் சூடு காட்ட மட்டும் பயன்பட்டு வந்த மைக்ரோ வேவை எழுப்பி நீங்களும் முழுப் பயன் பெறுங்கள்.

#### டிப்ஸ்

*மைக்ரோவேவில் சமைக்கும்போது முதலிலேயே காய்கறிகளுக்கு உப்பு சேர்க்கக் கூடாது. சேர்த்தால் காய்கறி வரண்டுவிடும்*

*தேசிக்காயை மைக்ரோவேவில்* High power *ல் 1 நிமிடம் வைத்தெடுத்து பிழிந்தால் சாறு நிறைய வரும்.*

*பப்படத்தை சிறிது தண்ணீர் பூசி மைக்ரோவேவில் 30 செக்கன் வைத்தெடுத்தால் ருசியான சுட்ட பப்படம் ரெடி.*




## மைக்ரோவேவ் சமையல்

### அன்னாசிப்பழ கேசரி

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| ரவை | - 1கப் |
| சீனி | - 1 கப் |
| கலரிங் | - சிறிதளவு |
| கொதி நீர் | - 2 1/2 கப் |
| அன்னாசிப்பழ துண்டுகள் | - அரை கப் |
| அன்னாசிப்பழ சிரப் | - 1/2 கப் |
| நெய் | - 3 மே.கரண்டி |
| கிஸ்மிஸ் | - சிறிதளவு |
| கஜு | - 10 |



**செய்முறை:**

ஒரு மைக்ரோவேவ் பாத்திரத்தில் 1 மேசைக்கரண்டி நெய் விட்டு கஜு சேர்த்து மூடியால் மூடாமல் மைக்ரோவேவில் ஹை பவரில் 3 நிமிடம் வைத்தெடுக்கவும். பின் கஜுவை எடுத்து மீதமுள்ள நெய்யில் ரவை, சீனி, சுடுநீர், மஞ்சள் கலர் சேர்த்து கலந்து மூடியால் மூடி மைக்ரோவேவில் ஹை பவரில் 7 நிமிடங்கள் வைத்து இடையில் ஒரு முறை கலந்து விடவும். பின்பு எடுத்து அன்னாசிப்பழத்துண்டுகளையும், சிரப்பையும் கிஸ்மிஸ், 2 மேசைக்கரண்டி நெய்யையும் விட்டு கிளறி பாத்திரத்தை மூடாமல் மைக்ரோவேவில் ஹை பவரில் 4 நிமிடங்கள் வைத்தெடுத்து கஜு சேர்த்து நெய் தடவிய தட்டில் கொட்டி ஆறியதும் பரிமாறலாம்.

### காளான் சூப்

**தேவையானவை:**

| | |
|---|---|
| பட்டன் காளான் | - 20 |
| வெங்காயம் | - 1 |
| பட்டர் | - 1 தேக்கரண்டி |
| இஞ்சி, பூடு விழுது | - 1/2 தேக்கரண்டி |
| உப்பு | - தேவைக்கேற்ப |
| மிளகு | - தேவைக்கேற்ப |
| கோன் பிளார் | - 2 தேக்கரண்டி |
| பால் | - 2 கப் |

**செய்முறை :**

மைக்ரோவேவ் பாத்திரத்தில் பட்டர், வெங்காயம் (பொடியாக நறுக்கியது) இஞ்சி, பூடு விழுது சேர்த்து முடியால் மூடி 2 நிமிடம் வரை மைக்ரோ ஹை யில் வைக்கவும். பின் காளானை சேர்த்து மூடியால் மூடி 5 நிமிடம் வரை வைக்கவும். கோன் பிளாரை சிறிது பாலில் கரைத்து அத்துடன் மீதமுள்ள பாலுடன் காளான் கலவையையும் சேர்த்து மைக்ரோ மீடியத்தில் 6 நிமிடம் வைத்து உப்பு மிளகு சேர்த்து பரிமாறலாம்.

# இளமையில் ஏன் தோல் சுருக்கம்?




இளம் வயதிலேயே சில பெண்களுக்கு முகத்தில் சுருக்கம் ஏற்படுகின்றது. இதற்குக்காரணம் 'பாஸ்ட் புட் உணவு வகைகளை, இவர்கள் அதிகம் உண்பதுதான் எனக்கூறப்படுகிறது. இது கட்டாயமாக தவிர்க்கப்பட வேண்டியது. இளமையிலேயே வயதானவர் தோற்றத்தை தவிர்க்க உணவு விடயத்தில் சிறிது கவனம் செலுத்த வேண்டும்.

வெந்தயக்கீரையை பாசிப்பருப்பு, சீரகம் சேர்த்து வேக வைத்து மசித்து வாரத்தில் 2 அல்லது 3 தடவை சாப்பிட்டு வந்தால் உடல் குளுமையாக இருக்கும்.

கறிவேப்பிலையிலுள்ள விட்டமின் ஏ இளமையான சருமத்தை தக்க வைத்துக்கொள்ள பெரிதும் உதவும். அடிக்கடி துவையல் செய்து சாப்பிடலாம். இவை தோல் சுருக்கத்தை தவிர்க்கிறது.

காய்கறி பழ வகைகளை தவறாமல் சாப்பிடுங்கள். இயற்கையான காய்கறி, பழ வகைகளில் உள்ள விற்றமின் மற்றும் சத்துக்கள் தோலில் சுருக்கம் ஏற்படுவதை தவிர்க்கக்கூடியவை.

நல்லெண்ணெய், பாதாம் எண்ணெய் இரண்டையும் சமமாக எடுத்து உடல் முழுவதும் தடவி, சிறிது ஊறவிட்டு கடலை மாவினால் தேய்த்துக்கழுவுங்கள். இது தோல் சுருக்கம் வருவதை தவிர்க்க உதவும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குருவிகளின் குரு

ஒரு பண்டிதர் ஒரு வயல் வழியாக போய்க்கொண்டிருந்தார். வாய்க்குள் ஏதோ இருப்பதுபோல் தோன்றவே, காறித்துப்பினார். ஒரு சிட்டுக்குருவியின் இறகு வந்து விழுந்தது. அது எப்படி தன் வாய்க்குள் வந்தது என்று அவருக்குத்தெரியவில்லை. வீட்டுக்கு வந்து தன் மனைவியிடம் விஷயத்தை சொன்னார். அத்தோடு ''இதைப்பத்தி யார்கிட்டேயும் சொல்லாதே'' என்றும் சொன்னார்.

பண்டிதரின் மனைவிக்கும் ஒன்றும் விளங்கவில்லை. எனவே தன் நம்பிக்கைக்கு உரிய பக்கத்து வீட்டு அம்மாளிடம் விஷயத்தை சொன்னாள். அவள் ரகசியமாக சொன்ன விதத்தை வைத்து பண்டிதரின் வாய்க்குள் பல இறகுகள் இருந்திருக்கும் என்று புரிந்துகொண்டாள் பக்கத்து வீட்டு அம்மாள். அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஆனாலும் பண்டிதரின் மனைவிக்கு ஆறுதல் சொன்னாள். இதை யார் கிட்டேயும் சொல்லாதே என்றாள் பண்டிதரின் மனைவி.



அய்யய்யோ, வாயை திறக்க மாட்டேன் என்றாள் பக்கத்து வீட்டு அம்மாள். ஆனால் இந்த விஷயத்தை யாரிடமாவது சொல்லாவிட்டால் தலையே வெடித்துவிடும் போலவும் இருந்தது. அப்போது துணி துவைக்கும் பெண் அந்த வழியாகப்போவதை பார்த்தாள். அவளை அழைத்து மொத்த விஷயத்தையும் சொன்னாள். ஒரு முழு சிட்டுக்குருவியே பண்டிதரின் வாயில் இருந்து வந்ததைப்போல் சொன்னாள். ''இப்பிடி ஒரு விசயத்தை நான் கேள்விப்பட்டதே இல்லை'' என்றாள் துணி துவைக்கும் பெண். அவள் வீட்டுக்கு போகும் வழியில் அவளது தோழி வந்தாள். ஆச்சர்யத்தோடு தான் கேள்விப்பட்ட விஷயத்தை அவளிடம் சொன்னாள். பரபரப்பாக சொல்லும்போது சிட்டுக்குருவி என்பதற்கு பதிலாக சிட்டுக்குருவிகள் என்று சொல்லிவிட்டாள். அந்தத்தோழி இதை தன் கணவனிடம் சொல்லும்போது அந்தப்பண்டிதர் வாயில் இருந்து சிட்டுக்குருவிகள் கூடுகளோடு வந்து விழுந்துச்சாம் என்றாள். இந்தச்செய்தி இன்னும் பரவியது.

பண்டிதரின் வாயில் இருந்து ராஜாளிப்பறவை வெளியே வந்தது.

அன்று மாலைக்குள்ளாக இந்த செய்தி பல கிராமங்களுக்கும் பரவியது.

எல்லாரும் இந்த அதிசயத்தை பார்க்க பண்டிதரின் வீட்டுக்கு வந்தார்கள். என் வாயில் இருந்து எந்தப் பறவையும் வெளி வரவில்லை. என்று பண்டிதர் எவ்வளவோ மறுத்தும் வெறும் வாயில் இருந்து பறவை வரவழைக்கும் அதிசயத்தை செய்து காட்டச்சொல்லி கெஞ்சினார்கள்.

என்ன செய்வது என்று தெரியாத பண்டிதர் அனைவரையும் தன் வீட்டுக்குள் உட்கார சொன்னார். ஒரே ஓட்டமாக ஓடி பக்கத்தில் இருந்த காட்டுக்குள் சென்று மறைந்து கொண்டார்.

இந்தச்செய்தி உண்மை அல்ல, வதந்தி என்பதை அனைவரும் அறிந்துகொள்ளும் வரை காட்டுக்குள்ளேயே வாழ்ந்தார்.

## பாப்பா பாட்டு



ஊஞ்சலாடு ஊஞ்சலாடு பாப்பா
உற்சாகம் பொங்குமே பாப்பா
நற்றமிழும் வாழ்ந்திடுமே பாப்பா
நனிசிறக்க ஊங்சலாடு பாப்பா!

பாட்டுப்பாடி ஊஞ்சலாடு பாப்பா
பரவசம் பொங்குமே பாப்பா
பண்பு சொல்லி ஊஞ்சலாடு பாப்பா
பயணம் சொல்லி ஊஞ்சலாடு பாப்பா!


களைப்பு நீங்க ஊஞ்சலாடு பாப்பா
களிப்பு பொங்க ஊஞ்சலாடு பாப்பா
ஆசை தீர ஊஞ்சலாடு பாப்பா
ஆனந்தம் பொங்க ஊஞ்சலாடு பாப்பா!

நேசம் கண்டு ஊஞ்சலாடு பாப்பா
நளினம் கொண்டு ஊஞ்சலாடு பாப்பா
சோம்பல் முறிய ஊஞ்சலாடு பாப்பா
சோகம் கலைய ஊஞ்சலாடு பாப்பா!

உற்றார் மகிழ ஊஞ்சலாடு பாப்பா
உறவினர் களிக்க ஊஞ்சலாடு பாப்பா
மகிழ்ச்சி பொங்க ஊஞ்சலாடு பாப்பா
மகிழ்ந்து மகிழ்ந்து ஊஞ்சலாடு பாப்பா!

- எல்.வேந்தன், கண்டி

## சொல் விளையாட்டு 12




### இடமிருந்து வலம்

1. பேசும்
5. கவலை
7. இலங்கையில் ஒன்பதில் உண்டு
9. வீண் தொல்லை
11. வந்தால் தாங்க முடியாது

### மேலிருந்து கீழ்

1. அடிக்கடி நிறம் மாறும்
2. கையால் பேசும் மொழி
3. பயம்
4. உதவிக்கு பதில் உதவி
6. கடிக்கும்
8. பாதுகாப்பு
10. மிருகம்

**சரியான விடை அனுப்பும் அறுவரின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். சொல்விளையாட்டு 11ன் விடைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்களும் 22ஆம் பக்கத்தில்...**

## ஸெக்ஸபோன்



ஸெக்ஸபோன்களில் 5 வகைகள் உள்ளன. ஸொப்ரானோ, ஆல்ட்டோ, டெனார், பாரிடோன், பாஸ் என்பவை தான் அவை. இதைக்கண்டுபிடித்தவர் அடால்ப் சாக்ஸ். இவர் இதை 1946இல் கண்டறிந்தார்.

ராணுவத்தினர் அணிவகுப்பு செய்யும் போது வாசிக்க ஆரம்பித்தனர். பிறகு சார்லி பார்க்கர் வெஸ்டர்யங் என்று எல்லாரும் வாசிக்க ஆரம்பித்துவிட்டனர்.

## இரவில் தூக்கம் வருவது ஏன்..?



இரவில் நன்றாக தூங்கும்போதுதான் பகல் பொழுது முழுவதும் உற்சாகமாக செயல்பட முடியும். பகலில் வெளித்தூண்டுதல்கள் அதிகமாக இருக்கும். அதனால் நிம்மதியான தூக்கம் வருவதில்லை. தூக்கத்தில் பல வகைகள் உண்டு. அதில் மூளைக்கு முக்கியமானது 'ரெம்' வகை தூக்கம். அதுதான் மூளையை அவ்வப்போது புதுப்பிக்கும் வேலையை செய்வதாக சொல்கின்றனர். அது வெளித்தூண்டல்கள் இல்லாத போது மூளை, தன்னைத்தானே தூண்டிக்கொள்ளும். அதற்கு இரவுப்பொழுது தான் மூளைக்கு வசதியாக இருக்கிறது. மூளைக்கு வெளியில் இருந்து வரும் சிக்னல்கள் குறையும்போதும் அதற்கு ஒக்சிஜன் வரத்து குறையும்போது தூக்கம் வந்துவிடுகிறது.

## வண்ணம் தீட்டுங்கள்



## மடகஸ்கர் தீவு



உலகிலேயே நான்காவது பெரிய தீவு மடகஸ்கர். இந்த தீவில் வாழும் மக்களுக்கு மலகாசிகள் என்று பெயர். சுமார் ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்பு ஆப்பிரிக்காவில் இருந்தும், இந்தோனேசியாவில் இருந்தும் குடிபெயர்ந்து வந்தவர்கள் இந்த தீவுகளில் சுமார் 18 பிரிவு மக்கள் வசிக்கின்றனர். 1960 வரைக்கும் இந்தத்தீவு பிரெஞ்சு ஆட்சியில் இருந்தது. அதன் பின் மடகாஸ்கர் தீவு சுதந்திரம் அடைந்தது.

## தெரிந்துகொள்வோம்

இலங்கையின் தேசிய பறவை - மைனா
சிப்பிக்குள் முத்து வளர எடுத்துக்கொள்ளும் காலம் - 15 முதல் 20 வருட காலம்
சட்டையில் முதன் முதலில் பட்டன்கள் வைத்தவர்கள் - சீனர்கள்
நீந்தத்தெரியாத மிருகம் - ஒட்டகம்
போக்குவரத்து சிக்னல் முறையை முதன் முதலில் அறிமுகப்படுத்திய நாடு - அமெரிக்கா 1918 - நியுயார்க்
வைரங்கள் அமிலத்தில் கரையுமா? - கரையாது, அதிக சூடுபடுத்தினால் மட்டுமே கரையும்.
இந்தியாவில் கலர் டெலிவிஷன் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு - 1982
மிக உயரமான அணை - பங்ரா நங்கல் (பஞ்சாப்)
அதிக மருத்துவ மனைகள் கொண்ட நாடு - சீனா (929)
முடியின் வளர்ச்சி விகிதம் - ஒரு வாரத்தில் 2.3 மி.மி



- கே.மனோஜ், யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜன்னலுக்கு வெளியே...



இவர் தமிழ் திரையுலகில் பிரபல்ய நடிகர்

A. முரளி
B. பார்த்தீபன்
C. சசிக்குமார்
D. ஜீவன்

சரியான விடையைக் கண்டுபிடித்தால் உங்கள் பெயர், முகவரியுடன் 0778021501 என்ற தொலைபேசி எண்ணுக்கு டைப் செய்து உடனே அனுப்பி வையுங்கள்



கோழி ஏன் முட்டை போடுது?

அதுக்கு 1,2,3,4 தெரியாது அதனால் முட்டை போடுது.

- ஆர்.செலினா, தொலபஸ்வலை, இரத்தினபுரி



எலிக்கும் மவுசுக்கும் என்ன வித்தியாசம்?

எலிக்கு வால் பின்னாடி இருக்கும் மவுசுக்கு வால் முன்னாடி இருக்கும்

- ஆர்.ரூபி, வத்தளை

## SMS பூக்கள்

நீங்கள் படித்தது, கேட்டது, கற்பனையில் உருவானது என்று உங்களுக்குப் பிடித்த எஸ்.எம்.எஸ். கதை, கவிதை, ஜோக்குகளை இங்கே பதிவு செய்யலாம். இப்போதே உங்கள் செல்போன்களை எடுத்துப் பதிவு செய்து உங்கள் பெயர் முகவரியுடன் அனுப்புங்கள். செல்போன் வசதியற்றவர்கள் தபாலட்டையிலும் அனுப்பலாம். முகவரி 3ஆம் பக்கத்தில்.

0778021501

### யூத் பஞ்ச்

கண்ணா நீ லவ் பண்ணும் பொண்ணும், நீ யூஸ் பண்ற செல்லும் ஒரே மாதிரி தான். ரெண்டுமே காசு இல்லன்னா பேசவே பேசாது.

- சம்சுதீன், அட்டாளைச்சேனை

10000 பேர்ல 9000 பேருக்கு லவ்வர் இருக்கு மீதி இருக்கும் 1000 பேருக்கு அறிவு இருக்கு!

ஆயிரத்தில் ஒருவன்
- பிரதீப், கண்டி

ஊசி போட நேர்ஸ் வேணும்
காசு போட பேர்ஸ் வேணும்
கோப்பி போட சுகர் வேணும்
எஸ்.எம்.எஸ் போட நல்ல மனசு வேணும்
அதைப்படிக்க உங்க மாதிரி லூசு வேணும்..
கொக்கரக்கே கும்மாங்கோ...

- எஸ்.கஜந்தனி, வவுனியா

விழிப்போம் என்ற நம்பிக்கையில் தூங்குவதை விட நாளைக்காவது காலையில் குளிப்போம் என்ற இலட்சியத்தோடு தூங்குக..

- ருக்கையா கண்டி

இதயமே இல்லாத கேர்ல்ஸ் ஏன் இன்னும் உயிரோட இருக்கிறாங்கள் தெரியுமா? இதயத்தை கொடுக்கும் நல்ல போய்ஸ் இருப்பதால் தான்

- அமான், காலி

கொசு கடித்தால் யானைக்கால் நோய் வரும் ஆனால் யானை கடித்தால் கொசுக்கால் நோய் வருமா?

- நந்து, யாழ்ப்பாணம்

கண்கள் பேசினால் காதல்,
கண்ணீர் பேசினால் நட்பு,
பணம் பேசினால் சொந்தம்
எல்லோரும் பேசினால் உலகம்
நீ மட்டும் பேசினால் லூசு

- சஹீர், பள்ளிவாசல்துறை



உங்கள் இல்லம் பெட்றோல், கேஸ், கோல்ட், விலைகளைப்போல உயரட்டும் உங்கள் துன்பம் நமீதா, சிரேயா, நயன்தாரா உடைகளைப்போல குறையட்டும்.

- ஜகீர், கல்முனை 01

காதலியே நீ என் இதயத்தை திருடிய கள்ளி என்று நினைத்து, உன்னை என் வீட்டிற்கு அழைத்து வந்தேன்.

இப்போது தான் தெரிகிறது நீ திருடியது என் இதயத்தை அல்ல என் வீட்டில் உள்ள பொருட்களை என்று!

- பி.சதிஸ்கா, களுதாவளை

### கிரிக்கட் பற்றி வள்ளுவரின் வாக்கு



சிக்ஸர் அடித்து வாழ்வாரே வாழ்வார்
மற்றெல்லாரும் சிங்கள் ஓடியே
சாவார்!

- பி.பிரவீன், யாழ்ப்பாணம்.

அடிக்கடி பார்க்கிற யாரையும் நேசிக்க முடிவதில்லை
நேசிக்கின்ற யாரையும் அடிக்கடி பார்க்க முடிவதில்லை
இது உண்மை

- எம்.சாந்தினி, பொகவந்தலாவை

நீயும் நானும் உலகத்திலேயே சிறந்த பிரண்ட்ஸ்
நான் விரல், நீ நகம், நான் கடல் நீ மீன்,
நான் நிலா, நீ வானம், நான் மரம்.. நீ...
குரங்கு... சீ...சீ... கீழே இறங்கு..

- எம்.பிரமிளா, யாழ்ப்பாணம்

மனசு இருந்தால் வருவேன் என்றது காதல்!
பணம் இருந்தால் வருவேன் என்றது சொந்தம்!
எதுவும் வேண்டாம் என்றது நட்பு

- பீ.தனுஜா, பன்னாகம்

நான் நேசிப்பது மலரையும் உன் மனசையும் மட்டும் தான். ஏன் என்றால் மலருக்கு வாசம் அதிகம், உன் மனசுக்கு பாசம் அதிகம்.

- சாந்தினி, பொகவந்தலாவை.

ஆபிரிக்கர்கள் தங்களுடைய நிலத்தை தோண்டினாங்கலாம். அப்போ 500 அடிக்கு கீழே மின்சார வயர் இருந்திச்சாம். அதை தங்களின் முன்னோர் மின்சாரம் பாவிச்சாங்க என்று ஆதார அறிக்கை விட்டாங்க.

அதுப்போல அமெரிக்கர்களும் தோண்ட 200 அடிக்கு கீழே கேபள் வயர் கிடைச்சதாம். உடனே அவங்களும் தங்களின் முன்னோர் டெலிப்போன் பாவித்தார்கள் என்று சொன்னாங்கலாம்.

உடனே நம்ம ஆசியாக்காரார்களும் தோண்ட பாவம் அவங்களுக்கு ஒன்னுமே கிடைக்கல. அவங்களும் நம்ம முன்னோர்கள் சேட்லைட் யூஸ் பண்ணினாங்க என்று சொன்னாங்கலாம். எப்படி?

- கே.ரமணன், வவுனியா




சும்மா இருக்கிறவங்க சும்மா இல்லாம சும்மா இருக்கிறவங்களுக்கு சும்மா சும்மா எஸ்.எம்.எஸ் அனுப்பினா சும்மா இருக்கிறவங்க சும்மா சும்மா எஸ்.எம்.எஸ் படிச்சிட்டு சும்மா இல்லாம அத சும்மா நாலு பேருக்கு அனுப்புவாங்க.
சும்மா சொல்றேன் இப்ப நீ சும்மா இருந்தா சும்மா இருக்கிறவங்களுக்கு இந்த மெசேஜை பார்வேட் பண்ணு இல்லேனா சும்மா இரு.
சும்மா தான் சொன்னேன். அதுக்கு போய் இப்படி சும்மா கோபப்பட்டா எப்படி? எனக்காக சும்மா சிரிச்சவங்களுக்கு தேங்க்ஸ்..
சும்மா போர் அடிச்சா தான் இப்படி சும்மா ஒரு எஸ்.எம்.எஸ். கூல்...!

- ஆர்.தர்ஸா, கொடிகாமம், யாழ்ப்பாணம்

### லவ் பண்ற நேரம் பாய்சுக்கு கேர்ல்ஸ் சொல்றது ரியல் மீனிங்

ஐ லவ் யூ டா
அப்படினா உனக்கு ஆப்பு கன்பார்ம் டா.
ஐ மிஸ் யு டா
அப்படினா உன்ன ஒழிச்சி கட்ட போரன்டா
யு ஆர் மை செல்லம் டா
அப்படினா நீ என் வீட்டு நாய் குட்டிடா
ஐ லைக் டு மெரி யு டா
அப்படினா உனக்கு சங்குடா மவனே..

சப்ரான்




என்னதான் நீங்க புத்திசாலியா இருந்தாலும் பிரஸ் பண்ற அந்த 3 நிமிஷம் நீங்க இழிச்ச வாயன் தான்..

- எம்.ஏ.எம்.ரிப்பாஸ், ஹெம்மாத்தகம

கல்லு 1.79, களிமண் 9.99 மணல் 1.59, சிறுமணல் 2.59 ஹலோ ரொம்ப யோசிக்கிறீங்களா? இது உங்க தலையோட ஸ்கேனிங் ரிப்போர்ட்.

- அனுஷா கனகசிங்கம், சோலை

டீ ராஜேந்தருக்கு ஒரு சிம்பு
சந்திரசேகரருக்கு ஒரு விஜய்
சிவகுமாருக்கு ஒரு சூர்யா
ஆனா பாவம் உங்க அப்பாவுக்கு மட்டும் ஏன் இப்படி ஒரு லூசு?



- ஜே.பியுவா, நுவரெலியா

பெண்கள் அருகில் இருந்தால் ஹோட்டல் பில்..
பெண்கள் தூரமாக இருந்தால் போன் பில்..
பெண் தூரமாகவே போய்விட்டால்..
பார் பில்..
சோ.. பீ.. கேர்புல்...!!!

- அனாஸ், லுணுகலை

### காதல் தத்துவம்

10 : பிஞ்சு வயசுல உனக்கு லவ் கேக்குதா?
10 - 18 : படிக்கிற வயசுல என்ன லவ்?
18 - 25 : இன்னும் உருப்படியா ஒரு ஜொப் இல்ல, அதுக்குள்ள லவ் கேக்குதா?
25 - 43 : கழுதை வயசுல என்ன லவ்? என்ன கொடுமை சேர்.. அப்போ எந்த வயசுல தான் லவ் பன்றது?



மதர் பெர்ஸ்ட்..
பிகர் நெக்ஸ்ட்..
லவ் இஸ் மம்மி..
பிகர் இஸ் டம்மி..
மதர்னா அம்மா..
பிகர்னா சும்மா..
அம்மானா பாசம்..
பிகர்னா வேசம்..
மம்மினா உயிர்..
பிகர்னா மயிர்..
அம்மானா அன்பு..
பிகர்னா வம்பு..
அம்மானா அகிம்சை..
பிகர்னா இம்சை..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எம்.எம்.பிபுட்டி
ஜெனிலியாவைத்தான் எனக்கு பிடிக்கும். அவர் எந்த இடத்துப்பெண்?
- கரிஷ் - யாழ்ப்பாணம்



ஜெனிலியாவின் முழுப்பெயர் ஜெனிலியா டி சூசா. 2003 ஆம் ஆண்டு போய்ஸ் படத்தில் அறிமுகமானவர். அப்போது அவரது பெயர் ஹரிணி. அவரது முதல் படம் 2003 இல் வெளியான Thuje Meri Kasam என்ற ஹிந்திப்படம். மும்பாயை சேர்ந்தவர் ஜெனிலியா. Bommarilu என்ற தெலுங்கு படத்துக்காக 2006 இல் இவருக்கு பிலிம் பேயர் விருது கிடைத்தது.

அவரது முதல் படத்தில் இவருடன் ஜோடி சேர்ந்த நடிகர் ரிதேஷ் தேஷ்முக். அவருடன் இவருக்கு நிச்சயதார்த்தம் ஆகிவிட்டது. ரிதேஷ் மஹாராஷ்டிர முதலமைச்சரின் மகன். புனிதன்கோம்பகத்தான் பிடித்திருக்கிறார். இவர் பம்பலப்பிட்டி மெஜஸ்டிக் சிட்டிக்கு பள்ளி மாணவி மாதிரி வந்ததும் ரசிகர்கள் நெருக்கியடித்து பார்த்ததும் போய்ஸ் கால ஞாபகமாக உங்களுக்குள் இருக்கிறதா?



சிவகுமார் இப்போது நடிப்பதில்லையா?
- ஐ.எம்.பஸ்லீம், நாச்சியா தீவு

பழனிச்சாமி கவுண்டர் என்ற இயற்பெயரை கொண்ட நடிகர் சிவகுமாருக்கு இப்போது 72 வயதாகிறது. கிட்டத்தட்ட 200 படங்களில் நடித்திருக்கிறார். இப்போது இலக்கிய கூட்டங்களில் மணிக்கணக்கில் பேசி வருகிறார். சின்னத்திரையில் சித்தி, அண்ணாமலை ஆகிய தொடர்களுடன் நடிப்பை நிறுத்திக்கொண்டவர். தனக்குப்பதிலாக இரண்டு பேரை களத்தில் வெற்றிகரமாக இறக்கி விட்டிருக்கிறாரே போதாதா?

தல நடித்த படங்களில் வசூலில் எது முதலிடத்தில்?
- திரு, வத்தளை

முதலிடத்தில் மங்காத்தா தான். அதில் எந்த சந்தேகமும் இல்லை. இன்னும் ஓடிக்கொண்டிருக்கிறதே! இரண்டாம் இடத்தில் பில்லா2.



ஹாய் சினிமானந்தா, நம்ம தமன்னாவோட அடுத்த படம் என்ன?
- பர்வதனா, அடுலுகமை

தமன்னாவுக்கு தமிழில் புதுப்படங்கள் இல்லை தான். ஆனால் தெலுங்கில் அவர் ரொம்ப பிசி. நான்கு படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார். இரண்டு படங்கள் முடிந்து திரைக்கு வர தயாராக உள்ளன. தமன்னாவின் மார்க்கெட் டு சூப்பராக இருக்கிறது.. இல்லையா?



விஜய்க்கு எத்தனை குழந்தைகள்?
- ஜீ.மேகலா, பட்டியந்தோட்டை

விஜய்க்கு இரண்டு குழந்தைகள். மூத்தவர் ஜேசன் சஞ்சய் - 2000 ஆம் ஆண்டு லண்டனில் பிறந்தவர். மகள் திவ்யா சாஷா. 2005இல் சென்னையில் பிறந்தவர்.

மீரா ஜாஸ்மினுக்கு சகோதரிகள் இருக்கிறார்களா?

- மாஹிரா ஹம்னா, தொரயப்பொத்தானை.



தொலைக்காட்சி நடிகையாக இருந்த சகோதரி ஜெனி ஜாஸ்மினுக்குத்தான் உண்மையில் அப்போது சினிமா வாய்ப்பு கிடைத்தது மீராவுக்கு அப்ட் தன் குடும்பம் முறைத்துக்கொண்டதால் ஜெனி தயங்க, மீரா சினிமாவுக்கு வந்துவிட்டார். இப்போதுதான் ஜெனி சினிமாவுக்குள் நுழைகிறார். சரி, மீராவுக்கு சகோதரர்கள் இல்லையோ என்று ஏன் நீங்கள் கேட்கவில்லை.

ரஜினி மகள் சௌந்தர்யா இயக்கிய சுல்தான் தி வாரியருக்கு என்ன நடந்தது?
- எஸ்.சகீரேகா, நாவுலுயா



சுல்தான் த வோரியரின் பெயர் கடந்த ஆகஸ்டில் கோச்சடையான் என மாற்றப்பட்டது. இது வரை 60 கோடி ரூபா செலவாகியுள்ளதாம். (ஆத்தாடி!).. அப்படியும் இருபது சதவீத படப்பிடிப்பு இன்னும் பாக்கியுள்ளது. ரஜினி மகளுக்கு சினிமா ஒரு விளையாட்டு அல்ல என்பது இப்போது தான் புரிந்திருக்கிறது. இயக்குநர் பொறுப்பை இப்போது கே.எஸ்.ரவிக்குமார் ஏற்றிருக்கிறார்.

ஜனவரியில் ராணா படப்பிடிப்பு ஆரம்பிக்கப்பட்டால் ராணாவுடன் கோச்சடையானும் சேர்ந்தே உருவாகலாம். ஆங்கிலம், தமிழ், ஹிந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளில் வரவிருப்பதால் திரை திரைக்கு வருவதில் மேலும் தாமதம் ஏற்படும். சோதனை ரஜினிக்கு மட்டுமல்ல, சௌந்தர்யாவுக்கும் தான். ஆறும் தெரியாமல் இனி இவர் காலை விடமாட்டார்.



விஜயா, சூர்யாவா பெஸ்ட்?
(பெயர் எழுத மறந்தவர்கள்)

விஜய், சூர்யா இருவருமே சில சமயம் பெஸ்ட். சில சமயம் வேஸ்ட். ஆனால் பெஸ்ட் ஒப் த பெஸ்ட் வேலாயுதமா, 7ஆம் அறிவா? அசிட் டெஸ்ட் தான் போங்கள்..!



ஏழாம் அறிவில் கலக்கிய ஸ்ருதி ஹாசன் முதலிடத்திற்கு வருவாரா?
- கே.அர்ச்சனா, கனுவாஞ்சிக்குடி

அப்பனை வைத்து மகளை எடை போடக்கூடாது. ஸ்ருதி இதுவரை நடிப்பைக்காட்டவில்லை. சதையைத்தான் காட்டியிருக்கிறார். ரசிகர்களின் ஆறாம் அறிவை அவரால் திறக்க முடிந்தால் உங்கள் எண்ணம் ஈடேறும்.

நெக்ஸ்ட் சூப்பர் ஸ்டார் விஜய்யின் போன் நம்பர் தருவீர்களா?
- என்.எம்.இர்பான், தோப்பூர்

இர்பான். உங்களின் ஆசை எனக்குப் புரிகிறது. ஆனால் நெக்ஸ்ட் சூப்பர் ஸ்டார் பதவிக்கு அஜித்தும் முயற்சி செய்து கொண்டிருக்கிறாரே..! சிலாவத்துறை ஹுனாவுக்காகவும் இதோ விஜயின் முகவரி

Vijay.
86/87, State bank Colony,
3rd Street, Virugambakkam,
Chennai - 600092
ph - 0091 44
23764375,
0091 44
42013300

ஒரு அரக்கனும் அரக்கியும் கோயிலுக்கு போனாங்க. ஆனால் கோயில் கதவு மூடிக்கிடந்தது. அரக்கன் திறந்து பார்த்தும் திறக்கவில்லை ஏன்..?

அரக்கி அர(ரை)க்கியை(kye) தானே கொண்டு போனாள்.

- பீ.மிது, பெரியநீலாவணை





L லோ லோன்னு அலையணும்
O ஒரு பொண்ணை மட்டும் பார்க்கணும்
V வீட்டுக்கு தெரியாம போன் பண்ணனும்
E எல்லாத்துக்கிட்டேயும் திட்டு வாங்கணும்
இது தேவையா? லவ் அடிப்போம் சந்தோஷமா இருப்போம்...!


- அனாஸ், குளுகலை

உன் மேல ஒருத்தன் கை வச்சிட்டா என்ன சொல்லுவாங்க..

அப்பா: விடு, இனியே அந்த பையன் கிட்டே பிரச்சினை பண்ணாத..

அம்மா: போக்கிரி நாய் எப்படி அடிச்சிருக்கான் பாரு.. உருப்படுவானா அவன்..

அக்கா: ரொம்ப வலிக்குதாடா? பாவம் நீ..



காதலி: ஏன் இப்படி பொறுக்கி மாதிரி பைட் பண்ணி அடிவாங்கிட்டு வந்து இருக்க..?

ஆனால் பெஸ்ட் பிரண்ட்: முக்கி கிளம்புடா.. அவனை இப்பவே தூக்கிடுவோம்..!

இதுதான் நட்பு. நண்பேன்டா..

- என்.ஏ.சி.இந்திக்கான், அக்கரைப்பற்று



# நீரை எப்படிப் பருகவேண்டும்?



சாதாரணமாக நாம் நான்கு வகையாக நீரைப் பயன்படுத்தலாம். காய்ச்சாத குளிர்ந்த நீர், கொதிக்க வைத்து ஆறிய நீர், வெந்நீர், மருந்து மற்றும் மூலிகைகளுடன் சேர்த்து காய்ச்சிய நீர். இப்படி தேவைக்கு ஏற்றபடி நீரை ஆராய்ந்து அளவாக பயன்படுத்தினால் அது அமுதத்துக்கு ஒப்பானது.

கோடை காலம் தவிர மற்ற எல்லா காலங்களிலும் நீரை குறைவாகவே பருக வேண்டும். கோடை, இலையுதிர் காலங்களில் இயல்பாகவே தாகம் அதிகமாகத் தோன்றும். தாகத்திற்கு ஏற்ற படி நீரை பருகவேண்டும்.

அதிக தாகம் இருந்தாலும் அளவுக்கு அதிகமாக நீரை பருகக்கூடாது. அப்படி பருகினால் உடலில் பித்தமும், கபமும் அதிகமாகும். ஜீரண சக்தி குறைவு, குடலில் ஏற்ற கட்டி, சோகை, வயிற்றுப்போக்கு, மூல நோய், ஜீரணக்கோளாறு, வீக்கம்புநக்கி நோய் போன்றவை ஏற்படலாம். உடலில் வீக்கம் உள்ளவர்கள் அதிகம் நீரைப் பருகலாகாது. தாங்க முடியாத தாகம் எடுக்கும்போது சிறிது நீர் பருகலாம்.

காய்ச்சல் எடுக்கும்போது குளிர்ந்த நீர் பருகலாகாது. அப்படிப்பருகினால் ஆமம் என்னும் அஜீரணம், நள்ளிர் தாகம், தூக்கம், சோம்பல், வயிற்று உப்புசம், உடல் பளுவாதல், இருமல், ஜீரண சக்தி குறைதல், வாயிலிருந்து உமிழ்நீர் சுரத்தல், சுவாச நோய், நாள்பட்ட ஜுரதோசம், ஆகியவை உண்டாகும். தாகத்துக்கு ஏற்ற படி வெந்நீர் பருகுவது தான் நல்லது. கோரைக்கிழங்கு, பர்ப்பாடகம், சுக்கு, வெட்டி வேர், விளாமிச்சை வேர், சந்தனம் ஆகிய ஆறு மூலிகைகளைச் சேர்த்துக் காய்ச்சிய நீரை சூடாகப் பருகுவது காய்ச்சலின்போது நன்மை பயக்கும்.

குளிர் நீர் பருகுவதால் குடிவெறி, உடல் களைப்பு, மயக்கம், வாந்தி, தலைசுற்றல், நாவறட்சி, உடல் எரிச்சல், பித்தம், இரத்த பித்தம், நஞ்சு இவை நீங்கும்.

வெந்நீர், பசியை உண்டாக்கி ஜீரண சக்தியை வளர்க்கும். உணவை ஜீரணிக்கச் செய்யும். தொண்டைக்கு நன்மையளிக்கும். சிறுநீர்ப் பையை தூய்மைப்படுத்தும். விக்கல், வயிற்று உப்புசம், வாதம், கபம், நாவறட்சி, இருமல், மூச்சுத்திணறல் முற்றிய ஜுரதோஷம், பக்கநுளை, கொழுப்பு. ஜுரம் இவற்றிற்கு வெந்நீரைப் பருகுவது நல்லது.

கொதிக்க வைத்து ஆறிய நீர், எளிதில் செரிக்கும். களைப்பை நீக்கும். மூன்று தோஷங்களை போக்கும். கொதிக்க வைத்து ஆறி ஓர் இரவு தங்கிய நீர், வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்று தோஷங்களையும் வளர்க்கும்.

- மணவை அசோகன்

சினிமானந்தா பதில்களுக்கான சினிமா தொடர்பான உங்கள் கேள்விகளை சுருக்கமாக கீழ்கண்ட முகவரிக்கு தபாலிலோ, எஸ்.எம்.எஸ்ஸிலோ, இ-மெயிலிலோ அனுப்பி வையுங்கள்.

சினிமானந்தா
பதில்கள்,
வண்ண வானவில்,
த.பெ இல : 1218,
கொழும்பு

மின்னஞ்சல் முகவரி:
vannavaanavil@gmail.com

குறுந்தகவல் இல:
0778 021 501



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு கிடைத்த...

(4ஆம் பக்கத் தொடர்)

கனடிய வெளிவிவகார அமைச்சரின் பிரேரணை கலந்துரையாடுவதற்கான சட்ட அடிப்படையற்றது என்றும் ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டியிருந்தார். இறுதியில் 15 நட்பு நாடுகளின் ஆதரவுடன் அம்முயற்சி முறியடிக்கப்பட்டது.

இரண்டாவதாக பொதுநலவாய அமைப்பை மறுசீரமைக்கும் திட்டத்தின்கீழ் மனித உரிமை ஆணையாளர் ஒருவரை நியமிப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பொதுநலவாய அமைப்பை மறுசீரமைப்பு செய்தல் என்பது அவசியமாக மேற்கொள்ளப்படும் ஒன்றல்ல என்றும் அவை ஆராய்ந்தே முடிவெடுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தியிருந்தார். இம்முயற்சி இறுதியில் தோல்வியில் முடிந்தது.

மூன்றாவது 2013ஆம் ஆண்டு உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்துவது தொடர்பானது. இதை உறுதி செய்து கொள்ளும் வகையில் தனிப்பட்ட ரீதியாக உலகத்தலைவர்களைச்சந்தித்த ஜனாதிபதி உச்சி மாநாடு நடத்துவதில் இலங்கை கொண்டிருக்கும் தகைமைகளை அவர்களுக்கு விளக்கினார்.

கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற தலைவர்களின் கூட்டத்தில் 2013ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய உச்சி மாநாட்டுக்கு உறுப்பு நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கும் வகையில் ஜனாதிபதி உரையாற்றினார்.

1931 முதல் இந்நாட்டில் வாக்குரிமை இருந்து வருகிறது. எழுத்து மூலம் ஆவணப்படுத்தப்பட்ட நீண்ட கால வரலாற்றைக் கொண்ட சில நாடுகளில் இலங்கையும் ஒன்று. பாராளுமன்ற ஜனநாயக முறையை கட்டிக்காத்து வரும் நாடு இது என்று இலங்கையை உலகத்தலைவர்களுக்கு அறிமுகம் செய்த ஜனாதிபதி இலங்கை யுவதிகளுக்கு பல அபிவிருத்தி திட்டங்களை அரசு மேற்கொண்டு வருகிறது என்று குறிப்பிட்டார்.

இலங்கை சர்வதேச மாநாடுகளை நடத்தி அனுபவம் கொண்ட ஒரு நாடு. 1976 ஆம் ஆண்டு அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டை அது கொழும்பில் நடத்தியது. 2013 இல் பொதுநலவாய உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கான சகல தகுதிகளையும் கொண்டுள்ளது. அவ்வாறானால் இந்த உச்சி மாநாடு 22 ஆண்டுகளின் பின்னர் ஒரு ஆசிய நாட்டில் நடைபெறுகிறது என்ற பெருமை கிட்டும் என்று தனது உரையில் குறிப்பிட்ட ஜனாதிபதி, இலங்கை பற்றிய மூன்று நிமிட வீடியோ காட்சி ஒன்றையும் ஒளித்திரையில் காண்பித்தார். இப்படக்காட்சி தலைவர்களை ஈர்ப்பதாக அமைந்தது. இதுவும் ஜனாதிபதியின் இராஜதந்திர அணுகுமுறைக்குக்கிட்டிய வெற்றியாகவே அமைந்தது.

மேலும் 2018 ஆம் ஆண்டில் பொதுநலவாய விளையாட்டுப்போட்டியை இலங்கையில் நடத்துவதற்கு இலங்கை விருப்பம் கொண்டிருப்பதையும் அவ்வாறான ஒரு சர்வதேச போட்டியை நடத்துவதற்கான சகல தகுதிகளையும் இலங்கை கொண்டிருக்கிறது என்றும் ஜனாதிபதி தலைவர்களிடம் சுட்டிக்காட்டினார்.

இத்தகைய ஒரு விளையாட்டுப்போட்டியை நடத்துவதன் மூலம் ஒரு நாட்டுக்கு கிடைக்கக்கூடிய அனுகூலங்களையும் அவர் எடுத்துரைத்தார்.

பொதுநலவாய விளையாட்டு போட்டியை நடத்துவதற்கான அங்கீகாரத்தை 1991இல் மலேசியா கோரியபோது அது பொருளாதார வளம் பெற்ற நாடாக விளங்கவில்லை. போட்டியின் பின்னர் ஆசியாவின் வளர்ச்சி பெற்ற நாடாக அது மாறியது. 2018ஆம் ஆண்டளவில் நாங்களும் பொதுநலவாய விளையாட்டுப்போட்டியை நடத்துவதற்கான சகல வசதிகளையும் பூர்த்தி செய்துவிடுவோம். இப்போட்டியை பார்வையிட வரும் வெளிநாட்டவருக்கான தங்குமிட வசதிகளும் தயார் செய்யப்பட்டு வருகிறது. இதற்கான தகைமைகளை நாம் பெற்றிருக்கிறோம் என்று உலகத்தலைவர்கள் மத்தியில் ஜனாதிபதி எடுத்துரைத்தார். இந்த உரையை ஒரு செம்மையான இராஜதந்திர முயற்சி எனவும் அதில் அவர் வெற்றி பெற்றிருக்கிறார் என்றும் அவதானிகள் கருத்து வெளியிட்டிருப்பதாக அவுஸ்திரேலிய இணையத்தளமொன்று தகவல் தெரிவித்திருக்கிறது. இந்த விளையாட்டுப்போட்டியை நடத்துவதன் மூலம் இலங்கையில் விளையாட்டு சுற்றுலாத்துறையை அறிமுகம் செய்யலாம் என்பது மேலதிக அனுகூலம்.

தனது அவுஸ்திரேலிய பயணத்தின்போது தொடர்ச்சியாக பன்நாட்டு தலைவர்களை சந்தித்து ஜனாதிபதி கலந்துரையாடினார். சிங்கப்பூர் ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி, மனித உரிமைகள், வடக்கு கிழக்கு அபிவிருத்தி, மீள் குடியேற்றம் என்பன கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன. கனடிய பிரதமருடனான அவரது சந்திப்பு குறிப்பிடத்தக்கது.

இச்சந்திப்பின்போது 40 ஆயிரம் மக்கள் வடக்கு கிழக்கில் இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் இருப்பதாக கனடிய பிரதமர் தெரிவித்தபோது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உடனடியாக கொழும்புடன் தொடர்பு கொண்டு தகவல்களைப்பெற்றார். வெறும் ஏழாயிரம் பேரே இன்னும் மீள் குடியமர்த்தப்படாமல் உள்ளனர் என்ற தகவலை அவர் கனடிய பிரதமரிடம் தெரிவித்தார்.

தலைவர்களுடனான சந்திப்புகளில் அவர்கள் தெரிவித்த சந்தேகங்களை ஜனாதிபதி உடனுக்குடன் களைந்தெறிந்தார்.

இப்பயணத்தில் மற்றொரு முக்கியமான விடயம் என்ற வகையில் அவுஸ்திரேலிய உச்சி மாநாட்டில் ஜனாதிபதி ஆற்றிய பணி அளப்பரியது. அவுஸ்திரேலிய வர்த்தக பிரமுகர்களை சந்தித்து உரையாடிய அவர், இந்து சமுத்திர பசுபிக் வலய நாடுகள் துரித வளர்ச்சி பெற்று வருவதை சுட்டிக்காட்டியதோடு இலங்கையும் துரித அபிவிருத்திப்பாதையில் பயணிப்பதாகவும் எனவே வர்த்தக பிரமுகர்கள் இலங்கையில் முதலீடு செய்ய முன்வரவேண்டும் என அழைப்பு விடுத்தார்.

இலங்கையின் வேலையில்லாத்திண்டாட்டம் 8 சதவீதத்தில் இருந்து 4.3 ஆக குறைந்துள்ளது. பணவீக்கம் 8 வீதம் இருந்து 6 வீதமாக குறைந்துள்ளது. வரவு செலவு பற்றாக்குறை 10 வீதம் இருந்து 6.8 வீதமாக குறைந்துள்ளது. உலக நாடுகளுடன் போட்டியிடும் ஆற்றல் முன்னரைவிட அதிகரித்துள்ளது. 79 ஆவது இடத்தில் இருந்த இலங்கை இன்று 52 வது இடத்தை பிடித்துள்ளது. வர்த்தக ரீதியாக போட்டியிடும் ஆற்றல் 102ம் இடத்தில் இருந்து 89ஆவது இடமாக மேம்பட்டுள்ளது. 28 வீதமாக காணப்பட்ட வறுமை நிலை 8 வீதமாக குறைந்துள்ளது என்று ஜனாதிபதி புள்ளி விபரங்களுடன் தெரிவித்து முதலீடுகளுக்கான சிறந்த வாய்ப்புகளை கொண்ட நாடாக இலங்கை விளங்குகிறது என்பதை அவுஸ்திரேலிய வர்த்தக சமூகத்துக்கு எடுத்துச்சொன்னார்.

முன்னர் 25ஆம் திகதி மெற்று அவுஸ்திரேலிய வின்ட்ரோப்பல் கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற அவுஸ்திரேலியா வாழ் இலங்கையர்களை சந்தித்து உரையாற்றினார். தனது உரையை அவர் தமிழில் ஆரம்பித்தபோது கூடியிருந்தோர் கரகோஷம் செய்து வரவேற்றனர்.

பயங்கரவாதத்தை முறியடித்த எனக்கு புரளைகளை போல கண்டனங்களும் சூட்டப்படுகின்றன. நாட்டை பொறுப்பேற்றபோது எதிர்கொண்ட சவாலை நான் வெற்றி கொண்டேனே தவிர சமய, இன பேதத்துடன் இதைப்பார்க்கவில்லை. போரின் முடிவில் மூன்று லட்சம் அகதிகள் என்னிடம் வந்தனர். அவர்களில் 95 வீதமானோர் மீளக்குடியேற்றப்பட்டு விட்டனர். முப்பது வருட காலமாக செயல்படாதிருந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை தற்போது நடைமுறைப்படுத்தி வருகிறோம். கடந்த வாரம் மட்டக்களப்பில் குடிநீர்த்திட்டமொன்றை திறந்து வைத்தேன். கொழும்புக்கு வெளியே பெரிய குடிநீர்த்திட்டம் இது தான். 1976, 86 காலப்பகுதியில் மனித உரிமைகளை பாதுகாப்பதில் முன் நின்றோம். தொடர்ந்து மனித உரிமைகளை பாதுகாப்போம். ஆனால் தவறான தகவல்களை கூறி எமது சர்வதேச நல் உறவுகளை சீர்குலைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் வெளிப்படைத்தன்மை கொண்டதாகவே எமது செயற்பாடுகள் உள்ளன.

இவ்வாறு அவர் அங்கு தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அதன் பின்னர் உலக சமூகம் உண்மையை விளங்கிக்கொள்ளும் எனவும் அவர் தனதுரையில் குறிப்பிட்டார்.

அவரது அவுஸ்திரேலிய விஜயம் உயர் இராஜதந்திர அணுகு முறைகளை கொண்டதாகவும் நம் நாட்டின் நலன்களை பாதுகாப்பதாகவுமே அமைந்திருந்தது.

## திருத்தம்



வண்ண வானவில் அக்டோபர் 2011 பத்திரிகையின் 3ஆம் பக்கத்தில் வெளியாகியிருந்த நல்லூரில் அமைந்திருப்பது மந்திரி மனையா? தனியார் கட்டடமா? என்ற கட்டுரையுடன் பிரசுரமாகியிருந்த படம் க.செந்தில் குமரன் என்பவருடையது அல்ல. கட்டுரையில் குறிப்பிட்டிருப்பது போல அந்த தர்மசாதன மடத்தின் தர்மகர்த்தாவான ஓய்வு பெற்ற வங்கி உத்தியோகத்தர் சி.துரைராஜா என்பவருடைய படமே இதுவாகும்.



அம்மா : செல்லம் பக்கத்து வீட்டு ஆண்டிக்கு ஒரு உம்மா கொடுடா..!

பேபி : நோ மாம்.. ஆண்டி அடிப்பாங்க..

அம்மா : அடிக்க மாட்டாங்க.. கிஸ் பண்ணு. மா..

பேபி : நேற்று அப்பா ஆண்டிக்கிட்டே அடி வாங்கனது உங்களுக்கு தெரியாதா..?

- லக்ஷான், கொழும்புத்துறை



"அம்மா இன்று ஒருத்தன் என்னை கிஸ் பண்ணிட்டான். நீ போய் கேள் அம்மா.."

"நான் போய் கேட்டா தரமாட்டான்.. உன் அக்காவை போய் கேட்கச்சொல்லு.."

## பன்முக ஆளுமை கொண்ட...

(33ஆம் பக்கத் தொடர்)

தந்தையார் பாடும் பாடல்கள் என்னையறியாமலே எனக்குள் ஆழப்பதிந்தன. குருநகர் நெய்தல் வளர்பிறை மன்றம் என்னை இனம் கண்டு நடிப்பதற்கு சந்தர்ப்பம் தந்தது. இவையே நாடகங்கள், நாட்டுக்கூத்துகளில் பங்கேற்கும் நிலையை தோற்றுவித்தன. 1966ஆம் ஆண்டிலே எனது பதினேழாவது வயதில் இதயக்குமுறல் என்ற சமூக நாடகத்தில் கதாநாயகனாக நடித்ததன் மூலம் அரங்கப்பிரவேசம் செய்து தொடர்ச்சியாக பல நாடகங்களில் பங்கு கொண்டு வந்தேன். 1970ஆம் ஆண்டு கொலைமேடையில் மணமேடை என்ற நாட்டுக்கூத்தில் இளவரசன் பாத்திரமேற்று நடித்து நாட்டுக்கூத்து துறையிலும் கால் பதித்தேன் என்கிறார் கிறிஸ்தோப்பர்.

அண்ணன் காட்டிய வழி, அமரதீபம், இதுதான் முடிவு, நீதி சாவதில்லை, பிராயச்சித்தம், சாம்ராட் சாணக்கியன், காவியம் பிறந்தது, நானே கடவுள், வள்ளல் பாரி போன்ற பல சமூக மற்றும் வரலாற்று நாடகங்களும், பண்டார வன்னியன், புரட்சித்துறவி, வீரமாதேவி, மலைமேற்கோவை, தியாக இராகங்கள், சோழன் மகள், செந்தாது, அரிச்சந்திரா, போருக்குப்பின், முனிராசாக்கள், நந்தியாவன் போன்ற மேலும் பல நாட்டுக்கூத்துகளும், தனது பங்களிப்புடன் ரசிகர்களை மகிழ்வித்திருப்பதாக பட்டியல் போட்டு பெருமையுடன் சொல்கிறார் கிறிஸ்தோப்பர்.

மேடை நாடகத்தில் மட்டுமின்றி வானொலி நாடகத்திலும் இவரது பங்களிப்பு இருந்துள்ளது. 1974ஆம் ஆண்டில் கத்தோலிக்க திருச்சபையின் ஆதரவுடன் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகிய சக்கேயு என்னும் விவிலிய நாடகத்தில் சக்கேயு பாத்திரத்தை ஏற்று நடித்துள்ளார். இலங்கை தயாரிப்பான பொன்மணி என்ற திரைப்படத்தில் படகோட்டியாகவும் நடித்த பெருமை இவருக்குண்டு.

உலக நாடக தினத்தை முன்னிட்டு 2006ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஜோன் டி சில்வா அரங்கில் நடைபெற்ற நாடக விழாவின் இவரது நெறியாள்கையில் பண்டார வன்னியன் நாட்டுக்கூத்து மேடையேற்றப்பட்டது. யாழ் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் 2004 இல் பத்தாண்டு நிறைவையொட்டி நடத்திய போட்டியொன்றில் இவரது பண்டாரவன்னியன் நாட்டுக்கூத்தின் மூலம் சிறந்த நடிகராகத்தெரிவு செய்யப்பட்டார்.

யாழ் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் 2004ஆம் ஆண்டு மரபுக்கலைச்சுடர் என்ற பட்டத்தையும் யாழ் பிரதேச கலாசார பேரவை யாழ் ரத்னா என்ற விருதையும் குருநகர் நாட்டுக்கூத்து மன்றம் கலை மாமணி என்ற பட்டத்தையும் இதே மன்றம் 2010 ஆம் ஆண்டு கலைத்திலகம் என்ற பட்டத்தையும் வழங்கி கௌரவித்துள்ளது. இலங்கை கலாசார திணைக்களம் 2010 ஆம் ஆண்டில் கலாபூஷணம் விருதும் வழங்கியிருக்கிறது.

இவர் ஒரு அண்ணாவியாரும் கூட. நாட்டுக்கூத்துப்பாடல்களை மற்றவர்களுக்கு பழக்கக்கூடிய திறமையும், அதனூடாக நாட்டுக்கூத்து கலையை வழிநடத்தக்கூடிய ஆளுமையும் உள்ளவர்கள் இனம் காணப்பட்டு, அண்ணாவியாராக அங்கீகாரம் வழங்கப்படுகிறது. அண்ணாவியார் சாமிநாதர் என்பவரே இவரை அண்ணாவியாராக ஏற்றுக்கொண்டு, அதற்கான அங்கீகாரத்தை வழங்கினார்.

பண்டார வன்னியன் கதை நாட்டுக்கூத்து வடிவில் ஒன்றரை மணித்தியாலம் ஓடக்கூடியதாக வீடியோ திரைப்படமாக இம்மாதம் வெளிவரவுள்ளது. இதற்கான கதை, வசனம், பாடல்களை கிறிஸ்தோப்பரே எழுதி இயக்கியும் உள்ளார். ஒளிப்பதிவு, படத்தொகுப்பு, மற்றும் தொழிநுட்பத்துக்கு அன்டன் பொறுப்பாக இருந்துள்ளார். பாடல்களை முரளி கண்ணன் எழுத, சப்தமி கலையகம் ஒளிப்பதிவை மேற்கொண்டிருக்கிறது. இப்படத்துக்கான பாடல் இறுவட்டு கடந்த ஆகஸ்ட்டில் வெளியிடப்பட்டது.

இவர் கலைத்துறையில் ஆற்றி வரும் சேவைக்கு மேலாக சமய சமூக சேவைகளாலும் பெரும் பங்களிப்பு செய்து வருகிறார். எனது கிராமத்திலுள்ள பல பொதுநல நிறுவனங்களும் புனித யாகப்பர் தேவாலய திரு இருதய சபையும் என்னை இணைத்துக்கொண்டுள்ளன.

கலைஞர் கிறிஸ்தோப்பர் 2006 ஏப்ரல் மாதத்தில் இயேசு கிறிஸ்துவின் திருப்பாடுகளை உதிர்த்து இராகங்கள் என்ற மகுடத்தில் பாடி வெளியிட்ட இறுவட்டு, இவர் குரல்வளமிக்க நல்லதொரு பாடகர் என்பதை எடுத்துச்சொல்கிறது.

முன்னர் லேக்ஹவுஸ் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் நடத்தி வந்த தினகரன் விளையாட்டு விழாவில் கயிறு இழுத்தல் போட்டியில் கலந்துகொண்டு சிறப்பித்ததை நினைவு கூர்கிறார். யாழ் குடாநாட்டில் வெவ்வேறு இடங்களில் நடைபெற்று வந்த கயிறு இழுத்தல் போட்டி யாழ் பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்று வந்த குண்டெறிதல் போட்டி உட்பட ஏனைய விளையாட்டுப்போட்டிகளிலும் வெற்றி பெறுவதற்கு தினகரன் விளையாட்டுப்போட்டி ஒரு உந்து சக்தியாக இருந்தது என்பதை கிறிஸ்தோப்பர் மகிழ்ச்சியுடன் சொல்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும்

# உங்கள் வண்ண வானவில்

வாசகர்களுக்கு பணிவான வணக்கம்

*உங்கள் ஏகோபித்த ஆதரவுடன் வண்ண வானவில் சஞ்சிகை தன் முதலாம் ஆண்டை பூர்த்தி செய்து இரண்டாம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்.*

*முதலாவது 2010 நவம்பர் இதழில் உங்களுக்கு எழுதிய சிறிய கடிதத்தில் இச்சஞ்சிகை உங்கள் பத்திரிகையாகவும், நண்பனாக, சகோதரனாக, வழித்துணையாக, ஆலோசகனாக மற்றும் சேவகனாகவும் இருந்து செயல்படும் என்று குறிப்பிட்டிருந்தோம். அதை முழுமையாக நாங்கள் நிறைவேற்றி வைத்திருப்பதாக நாங்கள் கருதாவிட்டாலும் தொடர்ந்தும் இதன் அடிப்படையிலேயே உங்களுக்காக பணியாற்றி வருவோம் என்பதை இத்தருணத்தில் மீளவும் உறுதி செய்ய விரும்புகின்றோம். உங்கள் நம்பிக்கைக்குரியவராக வண்ண வானவில் செயல்படும் என்பதை கடந்த ஓராண்டு இதழ்களை புரட்டிப்பார்த்தால் உங்களுக்கு புரியும்.*

*கடந்த இதழ்களில் நாம் வண்ண மயமான பல மாற்றங்களைக்கொண்டு வந்திருக்கிறோம். புதிய பல ருசிகரமான பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. இனிவரும் ஒவ்வொரு இதழிலும் சுவைக்கு குறைவில்லாத மற்றும் அறிவுக்கு விருந்தான பல பகுதிகளை சேர்த்து வருவோம். இதில் எந்த பின்னடைவும் இருக்காது.*


*வண்ண வானவில் சஞ்சிகையை உங்கள் கைகளில் நீங்கள் விரும்பும் பத்திரிகையாக தவழச்செய்வதற்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிவரும் வானவில் ஆசிரிய பீட உறுப்பினர்களை இத்தருணத்தில் உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்க விரும்புகிறோம்.*


அருள் சத்தியநாதன்

**ஆசிரியர் : அருள் சத்தியநாதன்,**
சிந்தாமணி, தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளில் பணியாற்றியவர்

**இணை ஆசிரியர் : என்.இராமலிங்கம்,**
தினபதி, வீரகேசரி, சக்தி எப்.எம் ஆகிய ஊடகங்களில் பணியாற்றியவர். எண்பதுகளில் சொந்தமாக 'ரேகா' என்ற சஞ்சிகையை வெளியிட்ட பண்பட்ட பத்திரிகையாளர்.

**கட்டுரைப்பகுதி ஆசிரியர் : மணி ஸ்ரீகாந்தன்**
இலங்கையில் விரல்விட்டு எண்ணக்கூடிய தமிழ் கார்ட்டூனிஸ்ட். தமிழக மதனைப்போல கட்டுரையாளராகவும் விஷயங்களைத் தோடிச்சென்று சேகரித்து எழுதும் பத்திரிகையாளராகவும் உருவெடுத்திருப்பவர். வாரமஞ்சரியில் இவர் தொடராக எழுதிய ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் கதை, புரட்டப்படாத பக்கங்கள், ஞாபக வீதியில், கூவாகம் அரவாணிகள் திருவிழா போன்ற எழுத்தோவியங்கள் இவரை வாசகர்களுக்கு சிறப்பாகவே அறிமுகம் செய்தன. வானவில்லின் உயிரோட்டத்திற்கு இவரும் ஒரு ஜீவநாடி.


என்.இராமலிங்கம்

**பக்க வடிவமைப்பு மற்றும் கணனி பிரிவுக்கான பொறுப்பாளர் : எஸ்.கிருஷ்காந்தன்**
வண்ண வானவில் சஞ்சிகையின் வண்ண மயத்துக்கு பொறுப்பானவர். ஒவ்வொரு இதழும் புதுப் பொலிவுடன் திகழ வேண்டும் என்பதில் கரிசனையுடன் பணியாற்றி வரும் இவர், வானவில் பக்க வடிவமைப்பில் இன்னும் தனக்கு முழுத்திருப்தி கிட்டவில்லை என்கிறார். ஆனால் வாசகர்களிடமிருந்து எமக்கு கிடைக்கும் தகவல்களோ, பக்க வடிவமைப்பு சூப்பராக உள்ளது என்கின்றன. புதிது புதிதாகப் படைக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்ட இளைஞர்.


**கணனி தட்டச்சு மற்றும் இணையம் : சி.சுதானந்த்**
கணனி வரம் கைவரப்பெற்ற ஆற்றல் மிக்க இளைஞர். எமது தேவைகளுக்கு ஈடுகொடுத்து சலியாமல் உழைப்பவர்.

இவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

உங்கள் அன்பன்,
அருள் சத்தியநாதன்.



மணி ஸ்ரீகாந்தன்


எஸ்.கிருஷ்காந்தன்


சி.சுதானந்த்

# பன்முக ஆளுமை கொண்ட நாட்டுக்கூத்து கலைஞர் கலாபூஷணம் கிறிஸ்தோப்பர்

ஆளுமை வீடியோ திரைப்படத்தில் பண்டார வன்னியனாக



சந்திப்பு: அ.கனகசூரியர்

அலைபாயும் நெய்தல் நிலமான குருநகர் கலைமேவும் சிறப்பையும் கொண்டது. இதனை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் கலை மாமணி கிறகரி கிறிஸ்தோப்பர். நாடக நாட்டுக்கூத்து நடிகர், தயாரிப்பாளர், நெறியாளர், பாடகர், சமய சமூகப்பணியாளர், விளையாட்டு வீரர் என பல்வேறு பரிமாண ஆளுமைமிக்க ஒருவராகத்திகழும் பெருமைக்குரியவர்.

இவர் 2009 ஆம் ஆண்டு அகவை அறுபதை நிறைவு செய்து மணிவிழா கண்டபோது, யாழ் ஆயர் இ.தோமஸ் சவுந்திரநாயகம் அடிகளார் வழங்கிய வாழ்த்துச்செய்தியில் ''அஞ்சா நெஞ்சமும், துணிவும், எடுத்த கருமத்தை செய்து முடித்து வெற்றி காணும் ஆளுமை திறனும் கொண்டவர். தனது முயற்சியினாலும் இறைபற்றாலும், கலைத்திறனாலும் சமூகத்திலும் பல பெருமைகளைப்பெற்றவர் என்று குறிப்பிட்டிருந்தது முற்றிலும் உண்மையே.

கிறிஸ்தோப்பர் பாடசாலையில் ஆரம்பக்கல்வியை மட்டும் கற்றவர். ஆரம்பத்தில் பல நாடகங்களில் முக்கிய கதாபாத்திரங்களை ஏற்று நடித்து ஒரு சிறந்த நாடகக்கலைஞராக முத்திரை பதித்தார். தொடர்ந்து பாரம்பரிய கலைகளுள் ஒன்றான நாட்டுக்கூத்து துறையில் தனது திறமையை வெளிப்படுத்தி இதனை வளர்த்தெடுப்பதில் அரும்பணியாற்றி வருகிறார். பல நாடகங்களையும், நாட்டுக்கூத்துக்களையும் தயாரித்தும் நெறியாள்கை செய்தும் மேடையேற்றியிருக்கிறார்.

நான் சிறிய வயதில் கிராமங்களில் மேடையேற்றப்படும் நாடகங்கள், நாட்டுக்கூத்துக்களை ஆர்வத்துடன் பார்ப்பது வழக்கம். திரைப்படங்களிலும் எனக்கு ஆர்வம் இருந்தது. திரைப்பட வசனங்களையும் பேசிப்பழகுவேன். எனது தந்தையார் கடற்தொழிலுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிய பின்னர், இரவு நேரங்களில் வீட்டு முற்றத்தில் அமர்ந்திருந்து கூத்துப்பாடல்களை பாடுவார். இது அவருடைய உடற்களைப்பை போக்கும் மருந்தாக அமைந்திருந்தது.


யாழ் பிரதேச கலாசார பேரவையின் சார்பாக முன்னாள் யாழ் அரச அதிபர் கே.கணேஷ் யாழ் ரத்னா விருது வழங்கிய போது


கிறகரி கிறிஸ்தோப்பர்

(31ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டாளிகளின் தோழனாகத் திகழ்ந்த ஜெயம் சி.தர்மகுலசிங்கம்

மனிதர் ஒவ்வொருவரது பெயருக்கும் குறித்த பொருள் எதுவாவது உண்டா என ஆராயப் போனால், சுவாரசியமான விடயங்கள் பலவற்றை அறிந்து கொள்ளலாம். பொருள் இல்லாத பெயர் இல்லை. பொருள் குறித்து நிற்பதே பெயர். இன்று கந்தசாமி என்ற பெயருடைய ஒருவனுக்கு அவன் பெற்றோர், வேலுசாமி என்று பெயர் சூட்டியிருந்தால், வேலுசாமியாகவே இருந்திருப்பார். ஒரு மனிதனுக்குச் சூட்டப்படும் பெயர், அவனை அடையாளப்படுத்துகிறது. ஒருவனுடைய பெயரை வைத்துக்கொண்டு, அதனை ஆழ்ந்த நோக்குவோமானால், அவன் பற்றிய சில தகவல்களை அறிந்துகொள்ளலாம்.

ஒருவன் பிறந்த சமயத்தில், அவனுக்கு அவன் பெற்றோர் அல்லது குடும்பத்தவர்கள் ஒரு பெயரைச் சூட்டுவார்கள். அவர்கள் சூட்டும் அந்தப் பெயரில், அவர்களது கருத்துநிலை அல்லது நாட்டம் அல்லது அந்தக் குழந்தை பற்றிய எதிர்பார்ப்பு என எதுவோ ஒன்று வெளிப்படும். இறை பக்தி நெஞ்சில் நிறைந்தவர்கள், அந்த பக்தியின் பதிவாகத் தமது குழந்தைக்குப் பெயர் சூட்டுவார்கள். சமூக, அரசியல் தலைவர்களின் மீது மிகுந்த மதிப்பு, மரியாதை உள்ளவர்கள், அந்தத் தலைவர்களின் பெயர்களில் ஒன்றினையே தங்கள் குழந்தைக்குச் சூட்டுவார்கள். இலக்கிய நாட்டமுள்ளவர்கள், எழுத்தாளர்கள், இலக்கியங்களில் வருகின்ற சிறந்த கதாபாத்திரங்களின் பெயர்களுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்துத் தங்கள் குழந்தைக்குப் பெயராகச் சூட்டுவார்கள். சினிமா பிரியர்கள், சினிமா நடிக நடிகைகளின் பெயர்களைச் சூடி மகிழ்கிறார்கள். இவ்வாறு பெயர்கள் சூட்டப்படுவதற்கான அடிப்படையான நியாயங்களை அல்லது உண்மைகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். இவை மாத்திரமல்லாது, இன்று நவீனமான பெயர்களைத் தமது குழந்தைகளுக்கு வைப்போரும் உண்டு. அவை பெரும்பாலும் வேற்று மொழிச் சொற்களாகவும், பொருள் விளக்கம் அற்றவைகளாகவும் காணப்படுகின்றன. இது ஒரு பரிதாபமான நிலை.

பெயரைச் சூட்டுகின்றவர்கள், குறித்த ஒரு நோக்கத்துடன் பெயரைச் சூட்டி வைத்தாலும், அந்தப் பெயருக்குரியவர், தனது பெயருக்குப் பொருத்தப்பாடுடைய குணநலன்களை உடையவராக இருப்பாரா.. என்றால் பெரும்பாலும் இல்லை என்றே கூறிவிடலாம். ஆனால் ஒரு சிலருக்கு மாத்திரம் அவர்கள் குணநலன்களுக்கு மிகப் பொருத்தமான பெயர்கள் அமைந்துவிடுவது ஒரு அதிசயந்தான். அந்த மனிதர்கள் சமுதாயத்தில் அதிசயமான மனிதர்களாகவே வாழ்ந்திருக்கின்றார்கள். சமுதாயம் என்றென்றும் மறக்காத வண்ணம் தங்கள் பெயர்களை மக்கள் மனங்களில் ஆழப் பதிவு செய்து வைத்துள்ளார்கள். அவ்வாறு பதிவு செய்து வைத்துள்ள அபூர்வ மனிதர்தான் "ஜெயம்" என சமுதாயத்தின் சகல மட்டங்களைச் சேர்ந்த மக்களாலும் உரிமையுடன் அழைக்கப்பெற்ற சட்டத்தரணி சி.தர்மகுலசிங்கம்.

இவரது உடன்பிறப்புக்கள் அனைவருமே சட்டத்தரணிகள். இவருக்கு மூத்தவரான சி.தனபாலசிங்கம் நீதிபதியாக இருந்தார். இவர்கள் அனைவரும் வடமராட்சி மண் பெற்றெடுத்த புதல்வர்கள்.

சி.தர்மகுலசிங்கம் (ஜெயம்) இலங்கை சமசமாஜக் கட்சியின் கொள்கையைப் போலித்தனமில்லாது பின்பற்றி வாழ்ந்த தலைவர். ஜெயத்தின் மறைவின் பின்னர், பொன் கந்தையா எம்.பி.யின் வருகையோடுதான், வட பிரதேசத்தில் குறிப்பாக வடமராட்சிப் பகுதியில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்குப் பெருகியதெனலாம். ஜெயம் நீண்ட காலம் உயிர் வாழ்ந்திருந்தால், நிலைமை வேறாக இருந்திருக்கும். இலங்கை சம சமாசக் கட்சியின் செல்வாக்கு ஒருபோதும் சரிந்து போயிருக்க மாட்டாது. இடதுசாரிகளின் ஓட்டு மொத்தமான சரிவொன்றே சமசமாசிகளின் செல்வாக்கினை இழக்கச் செய்திருந்தது. சமசமாசிகள் செல்வாக்கினை இழந்திருந்தாலும், "ஜெயம்" மக்கள் ஆதரவினை இழந்திருக்க மாட்டார். சமசமாசக் கட்சி தனது அரசியல் கொள்கை சார்ந்த தாபனமாக ஜெயத்தை அடையாளப்படுத்தியது.

ஆனால் ஜெயம், மக்கள் தலைவனாக மக்களுக்குச் செய்து வந்த தொண்டினால், மக்களால் தங்கள் தலைவனாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

காங்கிரஸ் தலைவர் காமராஜர், கம்யூனிஸ்ட் தொண்டன் ப.ஜீவானந்தம், தி.மு.க. அறிஞர் சி.என்.அண்ணாதுரை, போன்றோர் வரிசையில் வைத்து மதிக்கத் தகுந்தவர் சி.தர்மகுலசிங்கம் (ஜெயம்).

அவர்கள் போன்று பரந்த அளவில் செயற்படத் தகுந்த வாய்ப்பு ஜெயத்துக்கு இருக்கவில்லை. அதனால் மக்கள் பரந்துபட்ட அளவில் அவரை அறிந்து வைத்துக்கொள்ளப் பொருத்தமான சந்தர்ப்பம் இருக்க வில்லை. எனினும் போற்றுதலுக்குரிய மக்கள் சேவையாளராக ஜெயம் விளங்கினார்.

வட பிரதேச பஸ் தொழிலாளர் சங்கத் தலைவராக இருந்து, தொழிலாளர் நலனுக்காகப் போராடியவர் தலைவர் ஜெயம். அக்காலத்தில் பஸ் கம்பெனிகள், தனிப்பட்ட முதலாளிகளுக்குச் சொந்தமாக இருந்தன. கம்பெனி முதலாளிமார் வைத்ததே சட்டம். பஸ் தொழிலாளர்களைத் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்து சுரண்டிக் கொழுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் இருந்து சாதாரண தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காகத் தமது தொழிற்சங்கம் மூலம் போராடி வந்தார் ஜெயம்.

கறுப்புக் கோட் போட்டுக்கொண்டு நீதிமன்றம் செல்லும் சட்டத்தரணிகளுக்கு அரசு வேதனம் வழங்குவதில்லை. நீதிமன்றங்களில் தமது கட்சிக்காரர்களுக்காக வாதாடி, அவர்களிடம் கறக்கக்கூடியவற்றைப் பெரும்பாலானவர்கள் கறந்தெடுத்து விடுவார்கள். அரச வேதனத்திலும் பார்க்க அவர்கள் அதிக வருவாயைச் சம்பாதித்துக்கொள்ள முடிகின்றது.

இத்தகைய சட்டத்தரணிகள் மத்தியில்தான் சி.தர்மகுலசிங்கம் இருந்தார். பருத்தித்துறை நீதிமன்றத்தில் இவர் பெரும்பாலும் தமது தொழிலை நடத்தி வந்தார். சட்டத்தரணி ஒருவரை வைத்து தமது வழக்கினை நடத்துவதற்கு பண வசதியற்ற ஏழை எளியவர்கள் என்பதால், அத்தகையவர்களை நீதிமன்றத்துக்கு இழுக்காமல் விட்டு விடுவார்களா..? நீதிக்கு மாறாக ஏழை எளியவர்கள் நீதிமன்றத்தில் குற்றவாளிகள் ஆக்கப்படும் சமயங்களில், தானாகவே முன் வந்து கூலியாகப் பணம் வாங்காது, அவர்களுக்காக வாதாடி, விடுதலை வாங்கிக் கொடுப்பார் ஜெயம். வழக்காளி, எதிரியாக நீதிமன்றம் வரும் சாதாரண மக்களை அழைத்துப் பேசி, இரு பகுதியையும் சமரசம் செய்து வழக்காடாது ஒற்றுமையாக அனுப்பி வைப்பார்.

ஒடுக்கப்பட்ட மக்களை அடக்கிவைத்து அதிகாரம் பண்ணிக்கொண்டிருந்த, ஆதிக்க சக்திகளுக்கெதிராகவும் அவர் போராடி வந்தார். ஆதிக்கச் சக்திகள் சமூக வலுவற்ற மக்களை அடக்கி ஆளும் பொருட்டு, அவர்களது குடிசைகளுக்குத் தீ மூட்டி எரிப்பது, பொருளாதார வளங்களை அழிப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன. அத்தகைய நடவடிக்கைகள் இடம்பெறும்போது, பாதிக்கப்பட்ட மக்கள், எதிர் நடவடிக்கைகளை எடுத்து, ஆதிக்கச் சக்திகளை முறியடிக்க வேண்டும் என்பதே ஜெயத்தின் கொள்கை.

அவர்களின் நியாயங்களை எடுத்துச் சொல்லி. நீதிமன்றத்தில் வாதாடுவதற்கு எவருமே முன்வருவதில்லை. அவ்வாறான நேரங்களில் இம் மக்களுக்காக நீதிமன்றங்களில் வாதாடுவார் ஜெயம். கள்ளிறக்கும் சமூகம் முன்னேறுவது கண்டு மனம் பொறுக்காத ஆதிக்கச் சக்திகள், அத் தொழிலாளர்களுடன் உண்டாகும் சின்னச் சின்ன முரண்பாடுகளைச் சாட்டாகக்கொண்டு, கள்ளிறக்கும் மரங்களில் இரகசியமாக ஏறி பானைகளை வெட்டி எறிவது. அக் காலத்தில் இடையிடையே நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு சம்பவம். இதனால் ஏழைத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதைக் கண்டு மனம் கொதித்தெழுந்த ஜெயம், "உங்களுடைய பனைப் பானைகளை வெட்டி எறிந்தவர்களின் புகையிலைக் கன்றுகளை வெட்டி வீழ்த்திவிட்டு, என்னிடம் வாருங்கள். உங்களைப் பாதுகாக்கும் பணியை நான் செய்வேன்." எனக் குரலை உயர்த்திச் சொல்லி, அவர்களை வீறுகொண்டெழச் செய்தவர்.

அவர் மக்களோடு மக்களாக நின்றார். ஆதனால் மக்கள் ஆதரவு என்றும் அவருக்கு இருந்து வந்தது. முதலாளித்துவ சக்திகளுக்கும், சமூக அதிகாரம் கொண்ட மேலாண்மைச் சக்திகளுக்கும், முதலாளித்துவ கொள்கையைப் பின்பற்றி வந்த அரசியல் சக்திகளுக்கும், அவர் ஒரு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தார்.

இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலில் பருத்தித்துறைத் தொகுதி வேட்பாளராக அவர் போட்டியிட்டார். நான் அக்காலத்தில் ஆரம்ப வகுப்பில் படித்துக்கொண்டிருந்த ஒரு மாணவன். வயது ஐந்து அல்லது ஆறு தான் இருக்கும். எனது குடும்பத்தவர்கள், அயலவர்கள், பாடசாலை எங்கும் அவர் பற்றியே பேச்சாக இருந்தது. அவர் ஒடுக்கப்பட்ட சாதியில் பிறந்தவராக இல்லாதபோதிலும், அவருக்கு எதிரான ஆதிக்கச் சக்திகள், ஒடுக்கப்பட்ட சாதியாரில், குறிப்பிட்ட ஒரு சாதிப் பெயர் சொல்லி அவரைக் கேலி செய்தார்கள். சிறுவனாக இருந்த எனது உள்ளத்தில் அவர் உயர்ந்த இடத்தைப் பெற்றார். தேர்தல் பிரசாரத்துக்காக வெளியிடப்பெற்ற துண்டுப் பிரசுரத்தில், சிவப்பு வண்ணத்தில் பதிவாகியிருந்த அவர் உருவப் படத்தை, கடதாசி மட்டை ஒன்றில் ஒட்டி, எனது வீட்டில் தொங்க விட்டேன்.



தெணியான்

அக்காலத்தில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், தங்களுக்கு ஆதரவு கேட்டு, வாக்காளரின் வீடு வீடாகச் செல்வது வழக்கம். ஒரு தினம் ஜெயம் தமது ஆதரவாளர்கள் சிலருடன் எங்கள் பகுதிக்கு வந்தார். எங்கள் வீட்டுக்கும் வந்து, எனது குடும்பத்தவர்கள் எல்லோருடனும் அன்பாக உரையாடினார். நான் எல்லாவற்றையும் ஆவலுடன் பார்த்துக் கொண்டு நின்றேன். அன்றுதான் முதன் முதலாக அவரைக் கண்டுகொண்ட ஆனந்தம் மனதில் எனக்கு. அவருக்கு நன்றாகத் தெரியும், நாங்கள் அனைவரும் அவருடைய ஆதரவாளர்கள் என்பது. அவர் எல்லோருடனும் பேசி முடித்துவிட்டு, விடை பெற்று வெளியே நடந்தார். அவருடன் வந்தவர்களும் அவரைப் பின்தொடர்ந்து சென்றார்கள்.



எனக்கு என்னுடைய உணர்வுகளை அடக்க முடியவில்லை. ''ஜெயத்துக்கு ஜே... ஜெயத்துக்கு ஜே..." என்று வளவுக்குள் நின்று, பல தடவைகள் உரத்துக் கோஷம் எழுப்பினேன். அந்தக் குரல் ஜெயத்தின் செவியிலும், அவரோடு வந்தவர்களின் செவிகளிலும் நிச்சயமாக விழுந்திருக்கும். அவர்கள் எல்லோரும் மன மகிழ்ச்சியுடனேயே அங்கிருந்து போயிருப்பார்கள்.

பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. மக்கள் தொண்டன் ஜெயம், ஜெயிப்பார் என்றே பரவலாக எல்லோரும் நம்பினார்கள்.

ஆனால் தர்மம் தோற்றுப்போனது.

"தர்மத்தை சூது கவ்வும்".... என்ற பாரதி வார்த்தை மெய்ப்பிக்கப்பட்டது..

ஆதிக்க வெறி பிடித்தவர்களாக வாழ்ந்த பெரும்பான்மையினர், தர்மகுலசிங்கத்தை வீழ்த்தினர்.

அடிநிலை மக்களின் முன்னேற்றங் கண்டு மனம் பொறுக்காத தீய சக்திகள் அவரை வீழ்த்தின.

பாராளுமன்றத் தேர்தலில் மாத்திரமா அவர் வீழ்த்தப்பட்டார்..? இல்லை.. "அவரையே வீழ்த்திவிட்டார்கள்..!"

## பேன் தொல்லைக்கு வெங்காயம்



பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பிரச்சினையாக அமைவது பேன் தொல்லை. பேன்களை ஒழிக்கும் ஆற்றல் வெங்காயத்துக்கு உண்டு. வெங்காயத்தை தோல் உரித்து பச்சையாக அரைத்து சாறு எடுத்துக் கொள்ளுங்கள். இந்தச்சாறை தலையில் எண்ணெய் தடவுவது மாதிரி உச்சியிலிருந்து ஊற்றித்தேயுங்கள். அரை மணி நேரம் ஊற விட்டு அப்புறம் மிதமான சூட்டில் இருக்கும் தண்ணீரில் தலையை அலசினால் பேன்கள் ஒழியும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெஹிவளை மிருகக்காட்சிசாலை மிருக வைத்தியரான மருத்துவர் அருந்ததி பொன்னுசாமி உங்களுக்காக எழுதுகிறார்...

# பிள்ளையாருக்கு யானைமுகம் வந்தது ஏன்?



குட்டி யானையுடன் அருந்ததி

“யானைகள் ரொம்ப சாதுவானவை. ஆனால் நம்ப முடியாத மிருகம். திடீரென மூர்க்கமாக நடந்துகொள்ளும்”. என்று யானைகள் பற்றி சொல்ல ஆரம்பித்தார் தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் மிருக வைத்தியராக கடமையாற்றிவரும் அருந்ததி பொன்னுசாமி. சிறு பருவம் முதல் விலங்குகள் மீது ஒரு ஈர்ப்பு இருந்ததாக சொல்லும் இவரிடம் யானைகளின் திடீர் மூர்க்கத்துக்கு என்ன காரணம் என்று கேட்டோம்.

யானைகளை அறிவு மிகுந்த மிருகங்களின் வரிசையில் தான் வைக்க வேண்டும். அன்பு, பாசம், குழு உணர்வு, கூர்மையான ஞாபகசக்தி, காதல் என மனிதருக்கு உரிய பல குண நலன்கள் அவற்றுக்கும் உண்டு. எனவே இக்குணங்களுக்கு ஆபத்தோ, பிரச்சினையோ, குறுக்கீடோ ஏற்படுமானால் அவை மனிதனைப்போலவே தன் ஆத்திரத்தை வெளிப்படுத்துகின்றன. சில சமயம் இந்த ஆத்திரத்தின் அளவு யானை அளவுக்கு பெரிதாக அமைந்து விடுகிறது என்று அவர் பதில் சொன்னார்.



யானை அறிவுள்ள மிருகம் என்பதை பண்டைய மனிதர்களும் தெரிந்து வைத்திருந தார்கள் என்பதற்கு பிள்ளையாரே ஒரு உதார ணம். கல்வி மற்றும் ஞானத்தின் சின்னமாக விளங்கும் பிள்ளையாருக்கு யானைத் தலையை பொருத்தி பார்த்திருக்கிறார்களே..! என்று அவர் சொன்னது வித்தியாசமான விளக்கமாக இருந்தது.

யானை ஒரு தடவையில் ஒரு குட்டியையே ஈனும். 22 மாதம் குட்டி வயிற்றில் வளரும். ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவையே அது கர்ப்பமுறும். குட்டி பிறக்கும்போது 90 கிலோ வரை எடை கொண்டதாக இருக்கும். விழுந்து கிடக்கும் குட்டியை தாய் யானை தன் துதிக்கையில் அடித்தும் புரட்டியும் அதை எழுந்து நிற்கச்செய்யும். எழுந்து நிற்கும் குட்டி, பால் வாசம் தேடி பால் குடிக்கத்தொடங்கும். அதன் பின்னர் குட்டியை தன் அருகே வைத்து கண்ணுங்கருத்துமாகப் பாதுகாப்புடன் வளர்க்கும். ஒரு குட்டி பிறந்ததும் அந்த யானைக்கூட்டமே அதைப்பாதுகாக்கும் என்பது யானைகளின் விசேஷத்தன்மை. அவசியம் ஏற்பட்டால் அதாவது பாலூட்டும் சமயத்தில் தாய் யானை அருகே இல்லாவிட்டால் கூட்டத்தில் உள்ள வேறு தாய் யானைகள் தன் பாலை அதற்கு ஊட்டும். இதுவும் யானைகள் மத்தியிலுள்ள விசேடக்குணம். குழு மனப்பான்மையின் வெளிப்பாடு. யானைகள் ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்கு செல்லும்போது குட்டிகளை கூட்டத்தின் நடுவில் வைத்தே பாதுகாப்பாக அழைத்துச்செல்லும்.

ஆற்றில் அல்லது குளத்தில் நீராடும்போது குட்டிகள் தண்ணீரில் பாதுகாப்பாக உள்ளனவா என்பதை அவை கண்காணித்துக்கொண்டே இருக்கும். குட்டியை முதல் தடவையாக தண்ணீருக்கு அழைத்துச்செல்லும்போது யானைகள் சுற்றி நின்று குட்டி நீராடுவதை அவதானித்துக்கொண்டிருக்கும். குழந்தை வளர்ப்பில் யானைகளுக்கு அப்படி ஒரு கரிசனை மனிதரைப்போலவே!. குட்டிகளுடன் இருக்கும் சமயத்தில் மனிதன் வெகு எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும். ஏனெனில் அவற்றின் தாய்மை உணர்வு கடும் கோபமாக மனிதர் மீது வெளிப்படும்!

இவ்வாறு தகவல்களை அடுக்கிக்கொண்டு போன மருத்துவர் அருந்ததி, மேலும் சுவையான தகவல்களை தரத்தொடங்கினார்.

யானைகள் தினசரி 250 கிலோ தாவரங்களை உண்ணக்கூடியவை. பலா, ஈரப்பலா இலைகள், தென்னை, கித்துள் இலைகள், புற்கள் என்பவற்றை உண்கின்றன. பழங்களும் விருப்பமான உணவுகளே. இவை தவிர ஐந்து வகையான இலைகளை கொண்ட உணவையும் தெஹிவளை மற்றும் பின்னவலை யானைகளுக்கு கொடுக்கிறார்கள்.

யானைகள் சுமார் எண்பது வயது வரை வாழக்கூடியவை. 90 வயது வரை வாழ்ந்த யானைகளும் உள்ளன. யானைகள் உயிர்வாழக்கூடிய காலத்துக்கும் அதன் கடவாய்ப்பற்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. யானைகளுக்கு ஒரு செட் அதாவது இரண்டு பற்கள் பத்து வருடத்துக்கு ஒரு தடவை விழுந்து புதிதாக முளைக்கின்றன. ஆறு தடவைகள் இப்படி பல் முளைக்கின்றன. ஆறாவது தடவை முளைத்த பின் திரும்ப பல் முளைப்பதில்லை. கடினமான தாவரங்களை அரைத்து உண்பதால் கடைசி பல் செட் தேய்ந்து மழுங்கி விடும்போது அதனால் முன்னரைப்போல நார்ச்சத்து உணவுகளை அரைத்து உண்ண முடியாமல் போகும். இங்கிருந்து தான் யானை உடல் பலவீனமடையத்தொடங்குகிறது. நாளாக நாளாக அரைப்பட்டினி, முக்கால் பட்டினியாகி பலவீனமடைகின்றன.

யானை இறக்கும்போது தனியிடம் நாடிச்செல்லும் என்பதில் உண்மை உண்டா?

உண்டு புல், பழங்கள் இருக்கக்கூடிய ஒதுக்குப்புறமான நீர்நிலைகளை அவை நாடிச்செல்கின்றன. அங்கேயே அவை உயிர் விடுகின்றன என்பது கண்டறியப்பட்டுள்ளது. வளர்ப்பு யானைகள் இறந்ததும் மருத்துவ பரிசோதனை முடிந்த பின்னர் அவை துண்டுகளாக வெட்டப்பட்டு புதைக்கப்படுகின்றன என்று கூறினார் மருத்துவர் அருந்ததி பொன்னுசாமி.

*யானைகளை எவ்வளவு தூரம் கொண்டு சென்று விட்டாலும் அவை பழைய இடத்துக்கே திரும்பி வரும்.*

*யானையின் தும்பிக்கை 400 வகை தசைகளால் ஆனது. அது உங்களை அன்பாக அரவணைத்துக் கொண்டாலும், உடம்பு கொஞ்சம் வலிக்கத்தான் செய்யும். தும்பிக்கையால் பலமாக ஓங்கி அடித்தால் பல அடி தூரம் நீங்கள் தூக்கி எறியப்படுவீர்கள்.*

*சமஸ்கிருதமும் பழைய சிங்களமும் கலந்ததே யானைப்பாகர்கள் பிரயோகிக்கும் யானை பாஷை.*

*யானையின் அடிப்பாத தோல் வளரும். காட்டு யானைகள் நடந்து திரிவதால் பிரச்சினை இல்லை. வளர்ப்பு யானைகளின் பாதங்களை அவ்வப்போது சீவி விட வேண்டும்.*

*மலைநாட்டு மற்றும் தாழ் பிரதேச யானைகள் என இரண்டாகப் பிரிக்கலாம். மலையக யானைகள் கொஞ்சம் குட்டையானவை. யானைகளின் நடையழகும் வித்தியாசப்படுகிறது.*

*இலங்கையில் 20 சதவீதமான யானைகளுக்கே தந்தம் உண்டு. இந்தியாவில் 80 சதவீதமான யானைகள் தந்தம் கொண்டவை.*

## தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை

தெஹிவளையில் ஒரு மிருகக்காட்சிசாலையை ஐந்து ஏக்கர் விஸ்தீரத்தில் முதன்முதலாக உருவாக்கியவர் பெயர் ஜோன் ஹொகென்பேர்க். அவர் விலங்குகளை சர்க்கசில் ஈடுபடுத்தி பணம் தேடும் குடும்பமொன்றில் இருந்து வந்தவர். விலங்குகளை தேடிப்பிடித்து பாதுகாத்து தெஹிவளையில் அவர் வைத்திருந்தது விற்பனைக்காகத்தான். 1936ஆம் ஆண்டு அரசாங்கம் இந்த நிலையத்தை சுவீகரித்தது. அதை மிருகக்காட்சிச் சாலையாக மாற்றி அமைத்தது. 23 ஏக்கர் பரப்பளவில் தற்போது தெஹிவளை மிருகக்காட்சிச் சாலை இயங்கி வருகிறது. இங்கே 350 வகையான இனங்களை சேர்ந்த 3500க்கும் மேற்பட்ட உயிரினங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## 1400 யானைகள் கொன்ற ரொஜர்

நுவரெலியாவில் 1834-1845 காலப்பகுதியில் உதவி அரச அதிபராக கடமையாற்றிய ரொஜர், தன் வாழ்நாளில் 1400 யானைகள் வரை சுட்டுக் கொன்று ‘பெருமை’ சேர்த்தவர். 1845 ஆம் ஆண்டு இவர் அப்புத்தளை வாடிவீட்டில் இருந்தபோது பயங்கரமாக இடி இடித்து மழை பெய்யத்தொடங்கியது. இதை பார்க்க வெளியே வந்து நின்ற ரொஜரை பலத்த ஓசையுடன் இறங்கிய மின்னல் தாக்கியது. அந்த இடத்திலேயே அவர் உயிரிழந்தார். அச்சமயத்தில் காட்டு யானையின் பயங்கரப்பிளிறல் ஓசை கேட்டதாக அங்கிருந்தவர்கள் கூறியிருக்கிறார்கள். பின்னர் அவரது சடலம் நுவரெலியாவில் அடக்கம் செய்யப்பட்டது. அக்கல்லறை மீது இடி விழுந்ததாகவும் யானைகள் கல்லறையை துவம்சம் செய்ததாகவும் குறிப்புகள் எழுதி வைக்கப்பட்டுள்ளன.

*யானைக்கூட்டத்துக்கு தலைமை தாங்குவது வலிமையான பெண் யானையே. ஆண் யானை ஒரு பருவத்துக்கு வந்ததும் கூட்டத்தை விட்டு வெளியேறி ஆனால் கூட்டத்துக்கு அண்மையில் சுற்றிக்கொண்டிருக்கும். கொல்லப்படும் யானைகளில் பெரும்பலானவை ஆண் யானைகளே.*



தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில் பிறந்த குட்டியுடன் தாய்வரிக்குதிரை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed and published by ANCL No. 35, D.R.Wijewardena Mawatha, Colombo-10 on November 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org